# தமிழ்க் குரல்

THE MADURA TAMIL SANGAM

கே. எஸ். நாகராஜன்
ஆசிரியர், விவேகானந்தர் கல்லூரி,
மயிலை, சென்னை.

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர் :
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி
2/27, பிராட்வே
ஜி. டி. சென்னை

முதற் பதிப்பு—1951

பதிப்புரிமை

விலை ரூ. 1/8

Kabeer Printing Works, Madras-5

# முன்னுரை

"நான் மனிதன், இவ்வுலகமே என் சிந்தனையால் உருவாகியது" என்று பறை சாற்றினர் நம் நாட்டு அறிஞர்கள். உலகையே உருவாக்க வல்ல இப்பெருஞ் சிந்தனைசக்தியை நன்கு பயன்படுத்தப் பல பொருள்களைப்பற்றிய அறிவு நமக்கு இன்றியமையாதது. ஒரு நாட்டு மக்கள் எல்லாத் துறைகளிலும் அறிவாற்றல் பெறவேண்டுமானால், அந் நாட்டு மொழியில் பல கலைகளைப்பற்றியும் அறிவு நூல்கள் வெளிவரவேண்டும். இக்கருத்துடனே நான் தமிழ்க் குரல் என்னும் இச்சிறு நூலை உருவாக்கியுள்ளேன்.

இந்நூலில் இலக்கியம், பொருளாதாரம், கல்வி, சிற்பம், விஞ்ஞானம், அரசியல் போன்ற சில துறைகளில் நான் எழுதிய கட்டுரைகள் அடங்கியுள்ளன. முன்னரே பத்திரிகைகளில் வெளிவந்துள்ள என் கட்டுரைகள் சில இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்த பத்திரிகை அதிபர்களுக்கு என் நன்றி.

தமிழ்ப்பணியில் எனக்கு ஊக்கமும் உதவியும் அளித்துவரும் அறிஞர் உயர்திரு S. V. வரதராஜ ஐயங்கார், M. O. L., அவர்கட்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். அன்னாருக்கு என் அன்பார்ந்த வணக்கம்.

இந்நூலை வெளியிடும் பொறுப்பினை யேற்று, அதைச் சீரிய முறையில் நிறைவேற்றியுள்ள கோபால் பிள்ளை பதிப்பகத்தாருக்கு என் நன்றி உரித்தாகும்.

*மயிலை, சென்னை.*
15–1–'51

கே. எஸ். நாகராஜன்

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கம்பன் கண்ட கனவு | ... | 1 |
| 2. | அமரகவி பாரதி | ... | 10 |
| 3. | ஒரு நடிக நாடகம் | ... | 19 |
| 4. | கலிங்கப் போர் | ... | 27 |
| 5. | கம்பன் கண்ட கோசலை | ... | 34 |
| 6. | கலைப்பெருங் கோயில் | ... | 46 |
| 7. | பஞ்சபாண்டவ ரதங்கள் | ... | 52 |
| 8. | சூடிக் கொடுத்த சுடர்க்கொடி | ... | 58 |
| 9. | சாந்தி நிகேதனம் | ... | 66 |
| 10. | காந்தீயக் கல்வித் திட்டம் | ... | 72 |
| 11. | வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வழிகள் | ... | 79 |
| 12. | ரூஸோ கண்ட சமூக அமைப்பு | ... | 86 |
| 13. | பணமும் புகழும் | ... | 93 |
| 14. | விஞ்ஞான வாழ்வு | ... | 99 |
| 15. | அன்பு நெறி | ... | 108 |

# தமிழ்க் குரல்

## 1. கம்பன் கண்ட கனவு

கம்பர் கவிச்சக்கரவர்த்தி, கல்வியில் பெரியவர். அவர் இலக்கியவுலகிற்குத் தந்து போயுள்ள இணை யற்ற பொக்கிஷம் அவருடைய 'இராமாயணம்'. "தென் சொற் கடந்தான், வடசொல் கடற்கு எல்லை தேர்ந்தான்" என்று கம்பர் இராமனைப்பற்றிக் கூறும் பாடல் அவருக்கே பொருந்தும் எனத் தோன்றும் அளவுக்கு நன்கு கற்றறிந்தவர் கம்பர். அவருக்கு வால்மீகி முனிவர் பாடிய இராமகாதையைத் தமிழில் பாடவேண்டுமென்ற ஆசையெழுந்தது. தமிழெனும் அமுதில் தோய்த்து, இராமனென்னும் இலட்சிய புருஷனை வரைந்தார். கம்ப ராமாயணம் முற்றுப் பெற்றது. அந்நூலைத் திருவரங்கத்தில், வைணவ ஆசாரியரான நாதமுனிகள் என்பவர் தலைமையில் அரங்கேற்றினர்.

இது நிற்க, கம்பருடைய காவியத்தின் சிறப்பை முற்றும் எடுத்துரைப்பது இயலாது. கம்பர் கண்ட கனவுதான் என்ன? கம்பர் எத்தகைய நாட்டையும், அரசையும், மக்களையும் தம்முடைய இலட்சியமாகக் கொண்டிருந்தார் என்பதை மட்டும் சிறிது ஆராய்

வோம். இதற்கு நாம் கம்பருடன் அவருடைய காவிய வுலகில் நுழைந்து, திரிந்து பார்க்கவேண்டும்.

அவ்வுலகில் முதன் முதலில் நாம் காணும் காட்சி என்ன? உயரிய மலைகள், பரந்த கடல்கள், கருத்த மேகங்கள், காலத்து மழை. வானம் முழுவதும் பரந்திருக்கும் வெண்மேகங்கள் கடலில் படிந்து நீரைப் பருகிக் கருநிறம் பெறுகின்றன. இரு மேகங்கள் தம் வழியில் நிற்கும் மலைகளின்மீது தம்மிடமுள்ள தண்ணீரையெல்லாம் பொழிந்து விடுகின்றன. இப்படியாக நல்ல மழை பெய்யும் காட்சியைக் கம்பர் அழகாக வருணிக்கிறார் :

*"பம்பி மேகம் பரந்தது பானுவால்*
*நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்*
*அம்பின் ஆட்டுதும் என்றகல் குன்றின்மேல்*
*இம்பர் வாரி எழுந்தது போன்றதே."*

ஆறு மலையிலேயே பிறக்கிறது, கடலைப்போய் அடைகிறது. ஆகவே, மலை கடலுக்கு மாமன் முறையாக வேண்டுமாம். அம் (மாமனாகிய) மலையுச்சி சூரிய வெப்பத்தால் துன்புறுகிறதே என்று தன்னிடமுள்ள நீரையெல்லாம் அதன்மேல் கொட்டுவதற்குக் கடலே எழுந்து மலையுச்சியைச் சேர்ந்தது போன்றிருக்கிறது இவ்வியற்கைக் காட்சி என்கிறார் கம்பர்.

அடுத்தாற்போல் நாம் காண்பது நீர் தழைக்கும் காட்சி. பாலைவனமானால் எவ்வளவு மழை பெய்தாலும் வீணல்லவா? அப்படியல்ல இந்நாட்டில் தரையின் தன்மை. 'நீதி நெறிகடவாத செங்கோலாட்சியின் சிறப்பா அல்லது உண்மையை அறியும் அந்

தணர்க்குக் கொடுத்த தானந்தானே !' என்று வியக்கும் படி தண்ணீர் சேதமின்றித் தழைக்கின்றது.

'' மானம் நேர்ந்துறன் நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழ்என
ஞானம் உன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே. ''

வள்ளல்களைப் போல் வானம் பொழிய, நீர் தழைத்து வெள்ளம் நதியாக ஒடுகிறது. புகழ் மிக்க சூரிய குலத்து மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பல் லாண்டுகளாக ஆண்டு வருகிறார்களாம். அவர் களுடைய ஒழுக்கம் இடையறாது பெருகி வந்திருக் கிறதாம். இப்படிப்பட்ட அரசர்கள் ஆளும் தர்ம பூமியை வளமும் வனப்பும் மிகுந்ததாகச் செய்கிறதாம் (சரயு என்னும்) ஜீவ நதி. இது கவிஞருக்கு முலைப் பாலூட்டிச் சீராட்டிக் குழந்தைகளை வளர்க்கும் தாயை ஞாபகப்படுத்துகிறது. இக்கருத்துக்கள் அடங்கிய பாடலைப் பாருங்கள்.

'' இரவி தன்குலத்து எண்ணில்பல் வேந்தர்தம்
புரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்னதிவ்
உரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம். ''

அடுத்தபடி நாம் இந்நாட்டில் காணுவது செழிப் பான நன்செய் வயல்கள்.

'' தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத், தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ ''

இன்னும் பாருங்கள் :

'தாதுகு சோலை தோறும், சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கை தோறும், புதுமணல் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக வனந்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தகன்றே.''

என்று இலட்சிய நாட்டின் நீர், நில வளங்களைக் குறிப்பிடுகிறார் கம்பர்.

இன்னும் சற்று முன் செல்வோம். நாம் காண்பது ஓர் ஊர். அதில் நுழையும்போதே ஓர் இன்பக் கொண்டாட்டம், நாகரிகமும் பண்பாடும் நிறைந்த விழாக் காட்சிகள்.

'' பொருந்திய மகளி ரோடு வதுவையில் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றன்ன இயல்இசைப் பயன் துய்ப் பாரும்
மருந்தினும் இனிய கேள்வி செவிஉற மாந்து வாரும்
விருந்தினர் முகம்கண் டன்ன விழாவணி விரும்பு வாரும். ''

இனி, அங்குள்ள ஒரு சோலைக்குள் நுழையலாம். சந்தன மரங்களும் சண்பக மரங்களும் மலர்ச் செடிகளும் நிறைந்து காட்சியளிக்கிறது அப்பூங்கா. அதில் இயற்கைப் பேரழகுகளுக்கிடையே கலைதெரி கழகங்கள் அமைந்துள்ளன. பெண்மணிகள் ஓடியாடிப் பந்து பயில்கின்றனர். அழகுக்கலை விரும்பும் ஆடவர்கள் இப்பெண்களின் கண்களிலிருந்தே அருங் கலைகளையெல்லாம் தெரிந்து கொள்ளுகிறார்கள். சோலை அறிவுக் கோயிலாகவும் அழகுக் கோயிலாகவும் மிளிர்கிறது.

'' பந்தினை இளையவர் பயிலிடம், மயிலூர்
கந்தனை அனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனம்அல, சண்பக வனமாம் ;
நந்தன வனம்அல, நறைவிரி புறவம் ''

ஊர்ப்புறம்பே உள்ள மண்டபங்கள் நம்மை வா வென்றழைக்கின்றன. அங்குச் சென்று பார்ப்போம். பொருட் செல்வக் குவியல்களொரு புறம், நாட்டியம் ஒரு புறம், அருமறை கோஷங்கள் ஒரு புறம், கல்விக் கூடங்கள் ஒரு புறம்.

> ''மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம் ;
> அன்னமென் னடையவர் ஆடு மண்டபம் ;
> உன்னரு மருமறை ஓது மண்டபம் ;
> பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்.''

இப்படியாகத் திகழ்கின்றன இம்மண்டபங்கள்.

அடுத்தபடி நாம் பார்க்க வேண்டியது ஒரு சாதாரண வீடு. அதிலுள்ளார் தினந்தோறும் உணவு கொள்ளும் காட்சியைத் தருகிறார் கம்பர் :

> '' முந்துமுக் கனியில் நானா முதிரையில் முழுத்த நெய்யில்
> செந்தயிர்க் கண்டம் கண்டம் இடைஇடை செறிந்த சோற்றில்
> தந்தம்இல் இருந்து தாமும் விருந்தொடும் தமரி னோடும்
> அந்தணர் அமுத ருத்தி அயில்வுறும் அமலைத்து எங்கும்.''

நல்ல முக்கனி வகைகள், பலவகைப் பருப்புக்கள், நிரம்பநெய், சிவந்த தயிர்க் கட்டிகள், கற்கண்டு, சில சோற்றுப் பருக்கைகள் இவற்றைச் சுற்றம், விருந்தினர் ஆகியவர்களோடு கூடி உண்பது தினசரிப் பழக்கமானால் அந்நாட்டிற்கு ஒப்பாக வேறெந்த நாட்டைத்தான் கூறுவது !

அவ்வீட்டிலிருந்து வெளிவந்து அடுத்த வீட்டில் புகுந்தால் அங்கு ஒரு நங்கையர் கூட்டம் தென்படுகிறது. அந்த நங்கையர்களெல்லாம் அழகியர்கள் ; பொன்னும் மணியும் நிறைய அணிந்திருக்கிறார்கள் ;

எல்லாக் கலைகளிலும் துறைபோயவர்களாக இருக்கிறார்கள் ; வந்தவர்களுக்கெல்லாம் நிறைய அள்ளிக் கொடுக்கிறார்கள் ; நாள்தோறும் விருந்துகள் நடத்துகிறார்கள். இத்தனைக் காட்சிகளையும் ஒருங்கே சேர்த்துப் படந்தீட்டுகிறார் கம்பர்.

> " பெரும் தடம்கண் பிறைநுத லார்க்கெலாம்
> பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
> வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
> விருந்தும் அன்றி விளைவன யாவையே ? "

கல்வி நிரம்பிய பெண்களுடைய வாழ்வின்மீது—நாகரிகத்தின்மீதுதான் ஒரு நாட்டின் சிறப்புத் தங்கியிருக்கிறது என்று சுட்டிக் காட்டுகிறார் கம்பர்.

இந்நாட்டு அரசாங்கத்தைச் சிறிது பார்ப்போம். வலிமையைத் துணை கொள்ளாது அன்பைத் துணைக் கொண்டு நடக்கிறது அரசாங்கம். ஆகவே, கம்பர் கனவு கண்டது வல்லரசு அன்று, அன்பரசு என்பது நோக்கற்பாலது.

> " உருளு நேமியும் ஒண்கவர் எஃகமும்
> மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்
> தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
> அருளு நீத்தபின் ஆவதுண் டாகுமோ ? "

கம்பருடைய இலட்சிய நாட்டில் நல்லறமும், மனச் செம்மையும், அருளுந்தான் சமுதாயத்தைத் தாங்குகின்ற தூண்கள். இவைகள் பழுதுபட்டால் முப்பெருங் கடவுளர்களாலும் ஒன்றும் செய்ய முடியாது.

இனி, அரசாங்கத்தை ஏற்று நடத்தும் தலைவரோ நற்பண்புகளின் உறைவிடம். அன்பில் பெற்ற தாயையும், நலம் தருவதில் தவத்தையும், தீயதை உறுத்து

வதில் நோயையும், தீமையைப் போக்குவதில் மருந்தையும், அறிவுச் சுடரையும் ஒத்திருக்கிருர் அத்தலைவர்.

" தாயொக்கும் அன்பில் ; தவமொக்கும் நலம்ப யப்பின் ;
சேயொக்கும் முன்நின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால் ;
நோயொக்கும் என்னின் மருந்துஒக்கும் ; நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவுஒக்கும் எவர்க்கும் அன்னன். "

புதிய இலட்சிய சமுதாயத்திலே பொருளும் பொங்குகிறது ; ஒழுக்கமும் ஓங்குகிறது.

" கலம்சு ரக்கும் நிதியம் ; கணக்கிலா
நிலம்சு ரக்கும் நிறைவளம் ; நன்மணி
பிலம்சு ரக்கும் ; பெறுதற்கு அரியதம்
குலம்சு ரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம் "

இங்ஙனம் மக்கள் அறவழியில் பெருக்கும் செல்வந்தான் ' மெய்த்திரு ' எனப்படும்.

முன்னேயோர்கள் அரசனை உயிரென்று கூறி முடியாட்சியைச் சிறப்பித்தது போக, கம்பர் நாட்டு மக்களை உயிரெனவும், அரசனை அவ்வுயிரைத் தாங்கும் உடலெனவும் கூறிக் குடியாட்சியைச் சிறப்பித்துக் கூறுகிருர். எத்துணைக் கருத்துப் புரட்சி! பின்வரும் பாடல்களால் இவ்வுண்மை புலப்படும் :

" நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனல், யானுயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே " (புறம் 186)

" வைய மன்னுயிர் ஆகஅம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு

ஐயமின்றி அறங் கடவாது அருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ'' (கம்பர்)

இனி நமக்குக் கம்பருடைய இலட்சிய நாட்டில் கிடைக்காத பொருள்கள் எவை என ஆராய்வோம். அங்கு மக்களிடையே குற்றம் இல்லை, அகால இறப்பு இல்லை ; மக்களிடைச் செம்மையற்ற சிந்தனை இல்லை, அரசனுக்குத் தண்டனை விதிக்க வாய்ப்பு இல்லை; தீய நெறிகள் மக்களிடைப் பழக்கத்தில் இல்லை; மக்களுள் நல்லோர் தீயோர் என்னும் பாகுபாடு இல்லை ; வறுமையால் இரந்துநிற்போர் இல்லை ; வள்ளல் தன்மை இல்லை ; பகைமை யில்லை, வலிமையைக் காட்ட மக்களுக்கோர் வாய்ப்பு இல்லை ; கல்விச் செல்வம் பெருதார் இல்லை, மேதையில்லை. அங்கு எல்லோரும் எல்லாப் பொருளும் இயற்கையாகவே பெற்றுள்ளனர். எனவே, இல்லாதவர் ஒருவருமில்லை. ஆகையால், உடையார்கள் என்ற சொல் பழக்கத்தில் இல்லை.

'' எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லைமாதோ ''

என்ற கம்பர் வாக்கால், அவருடைய இலட்சிய நாடு எத்தகைய சிறந்த பொதுவுடைமை நெறியில் நிற்கிறது என்பது விளங்கும். அங்கு எல்லோருக்கும் ஒரே மாதிரிச் செல்வம்—செல்வமென்ருல் பொருட் செல்வம் மட்டுமன்று, அறிவுச் செல்வமும்கூட—தூய சகோதரப் பான்மையாகிய அறவுணர்ச்சியில் நிலைபெற்று நின்றது. பகைமை, பலாத்காரம், கொலை, தண்டம், இழிபடுபோர் இவற்றிற்கு அந்நாட்டில் இடமே இல்லை.

இதுகாறும் கம்பர் தந்துபோன இலட்சிய நாட்டில் உலாவித் திரிந்தோம்; அதன் பண்புகளை அறிந்தோம். ஆனால் பயனென்? நாமும் நம் நாட்டைக் கம்பருடைய இலட்சிய பூமியாகச் செய்ய முடியுமா? முடியும். இதற்கும் கம்பரே வழி வகுத்திருக்கிறார். உயர்ந்த இலட்சியங்களோடு கூடிய உடன்பாட்டுக் கல்வியை மனிதருக்கெல்லாம் வேற்றுமையின்றி அளிக்கவேண்டும். அந்தக் கல்வி கேள்வியைப் பரப்பும்; நன்முயற்சியைத் தூண்டும்; அன்பை ஊட்டும்; அறவாழ்க்கையைத் தோற்றுவிக்கும்; பேரின்ப நுகர்ச்சியை அளிக்கும். இக் கருத்தடங்கிய பாட்டைப் பாருங்கள்.

"ஏகம் முதற்கல்வி முளைத்து எழுந்து, எண்இல் கேள்வி
யாகம் முதல்திண் பணைபோக்கி அருந்த வத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது போலும் அன்றே!"

கம்பருடைய இலட்சியம் என்ன? கல்வி, கேள்விகளால் பண்பட்ட மனமும், அறத்திலே ஊன்றிய உள்ளமும், அன்பிலே கனிந்த உணர்ச்சியும் நிறைந்ததோர் சமுதாயம். அதை உருவாக்க நம்முள் ஒவ்வொருவரும் இயன்றதைச் செய்யவேண்டும். இது தான் கம்பனைப் போற்றும் நம் கடமை.

கம்பர் வாழ்க! கம்பர் புகழ் வாழ்க!
கன்னித் தமிழ் வாழ்க!

# 2. அமரகவி பாரதி

உமர் என்னும் பெயர் கொண்ட காலிப் ஒருவன் அலெக்ஸாந்திரியாமீது படையெடுத்துச் சென்முன் ; அந்த நாட்டை வென்ற பிறகு அங்குள்ள முகமதிய ரல்லாதாரை யெல்லாம் பெருந் துன்பங்களுக்கு உள் ளாக்கினுன் ; அங்ஙனம் செய்துகொண்டு போகும் வழியில் ஒரு புத்தக சாலையைக் கண்டான். அதைத் தீக்கிரையாக்கத் தன் ஆட்களுக்கு உத்தரவிட்டான். அவ்வூர் ஜனங்கள் அவனிடம் வந்து, " இப்புத்தகங் களெல்லாம் மிக மதிப்புள்ளவை; பேருண்மைகள் பல அடங்கியவை. இவை எரிந்து போனுல் நம் நாட் டிற்கு உய்வு ஏது? இவற்றை எப்படியாவது தாங்கள் காப்பாற்றவேண்டும் " என்று முறையிட்டுக்கொண் டனர். அதற்கு அவன், " இந்தப் புத்தகங்களில் என்ன இருக்கிறது? எங்கள் ஊருக்கு வந்து பாருங்கள். குரான் என்னும் வேத புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் தெரியும் உண்மை! அதில் இல் லாத சத்தியம் வேறு உண்டா? உங்கள் புத்தகங்களி லுள்ள கருத்துக்களெல்லாம் அதிலேயே அடங்கி யிருக்கும். அதனுல் இவற்றிற்குத் தேவையில்லே. அப்படிக் குரானில் இல்லையானுல் இவையெல்லாம் வெறும் அபத்தம். எப்படியாயினும் இப்புத்தகங் களுக்கு இடமில்லை " என்று சொல்லி அந்தப் புத்தக சாலையை முழுதும் சாம்பலாக்கினுன் என்று ஒரு சரித்திர வரலாறு உண்டு. பலர் இதை நம்பாமற்

போகலாம். ஆனால் இத்தகைய குறுகிய நோக்கங்களும், இவற்றின் பலனாகச் சில தீய செயல்களும் இன்றைக்கும் நடந்து வருகின்றன.

பிற்போக்கினனான ஒருவன் தன் மதமே பெரிது, மற்றவை இழிந்தவை ; தன் மொழியே பெரிது, மற்றவை மதிக்கத் தகுந்தவையல்ல ; தன் நாடே சிறந்தது, பிற நாடுகளிலிருந்து அறியவேண்டியதொன்றுமில்லை—என்று இவ்வாறு கருதி வருவதை இன்றைக்கும் நாம் கண்கூடாகப் பார்க்கலாம். இத்தகைய குறுகிய மனப்பான்மை இல்லாதவனே உண்மைக் கவிஞனாக முடியும். அத்தகையோனின் பாடல்களே கவிதையென்று மதிக்கத் தகுதியானவை.

உண்மைக் கவிஞன் என்றால் அவனுக்கு முதலாவதாகப் பரந்தநோக்கு, இரண்டாவதாக மனிதனின் இயல்பை நன்றாக அறிந்து பாடுந்திறன், மூன்றாவதாக ஊனக்கண், கற்பனைக்கண், கருத்துக் கண் ஆகிய மூன்று கண்களையுங் கொண்டு பொருள்களினூடே கூர்ந்து ஆராயும் ஆற்றல், நான்காவதாக மனிதனையும் கடவுளையும் இணைக்கும் உண்மைக் கவிதை—இவை இன்றியமையாதவை. ஒரு கவிஞன் இங்ஙனம் பண்பட்டிருப்பானேல் அவன் கவிதை என்றும் அழியாது ; கற்போர் மனத்தைவிட்டு அகலாது. அன்புப் பெருக்கால் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழி பெற்றுப் பதவிகொள்ளச் செய்யும் தகைமையதாகும்.

கவிதையென்றால் அதற்குப் பரந்த நோக்கு அவசியம். தமிழ் நாட்டையும் மொழியையும் உய்

விக்க வந்த பாரதியின் கவிதைகளைச் சற்று ஆராய் வோம். பிறமதத் துவேஷம் சிறிதும் இல்லாதவர் பாரதி.

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்,
கோயின் சிலுவையின் முன்னே நின்று
கும்பிடும் யேசு மதத்தார்—
யாரும் பணிந்திடும் தெய்வம் ; பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம் ;
பாருக்குள்ளே தெய்வ மொன்று"

என்று கூறியதோடு நில்லாமல், 'இதில் பற்பல சண் டைகள் வேண்டாம்" என்று இடித்துரைத்தார் பாரதி.

பிற மொழிகளிடத்து அவர் கொண்டிருந்த மரியாதையும் மதிப்பும் 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் –கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று கூவியழைக்குமிடத்தும், 'சுந்தரத் தெலுங் கினிற் பாட்டிசைத்து', 'சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு', 'வேதம் புதுமை செய்' என்பன போன்ற குறிப்புக்களிலும் காணக் கிடைக்கும். நிற வேறுபாட்டினைக் குறித்து,

"எந்த நிறமிருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரமன்றோ ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்றமென்றும் சொல்லலாமோ ?
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை ;

எண்ணங்கள் செய்கையெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர் ''

எனப் பாடியுள்ளார் பாரதி. சாதிக் கொடுமைகளை நீக்கி இந்தியர் அனைவரையும் ஒன்றுபடுத்தல் என்பதே பாரதியின் பாடல்களில் எல்லாம் தொனித்து நிற்கும் பெரும் ஆர்வம்.

'' சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம் ;
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம் ''

என்று பன்முறை கூறி இந்திய சமுதாயத்தைப் பண்படுத்த முயன்றார் பாரதி. நாட்டு வேற்றுமையை ஒழித்தாலன்றி மனித சமுதாயம் நல்வாழ்வு பெற முடியாதென்பதை நன்குணர்ந்த கவிஞர் சுதந்திர இந்தியாவைக் கனவு காண்கிறார். அதில் மக்கள் அடையும் நல்வாழ்வைச் சிந்தித்துப் பார்க்கிறார். உடனே அவர் கற்பனைக் கண்முன் நிற்பன யாவை ? சிந்து நதியின் மிசை நிலவு, சேர நன்னாட்டு இளம் பெண்கள், கங்கை நதிப் புறத்துக் கோதுமை, காவிரி வெற்றிலை, சிங்க மராட்டியர் தம் கவிதை, சேரத்துத் தந்தங்கள், காசி நகர்ப் புலவர், ராசபுத்தானத்து வீரர், நல்லியற் கன்னடத்துத் தங்கம்—இங்ஙனமாக எந்நாட்டினதாயினும் உயர்ந்ததை உயர்ந்ததென ஒப்புக்கொண்டு, அதை அடைந்து பயன்பெற முயற்சி செய்யவேண்டும் என்ற பரந்த நோக்கம் கொண்டவர் பாரதி. குறுகிய மனப்பான்மை சிறிதும் இன்றி '' எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர்குலம்—இடம்

பெரிதுண்டு வையத்தில் சண்டைகள் எதற்கு?'' என்று முரசு கொட்டினர் பாரதி.

நம் தமிழ் நாட்டிற்குக் கவிஞர்கள் புதியவரல்லர். பாரதிக்கு முன் பல பெரும் கவிஞர்கள் வந்து போயுள்ளனர். ஆனால் வெறும் சிலேடைகளிலும் இலக்கண விதிகளிலும் பழங்கதைகளிலும் கண் மூடித்தனமாக முன் சென்ற புலவரைப் பின்பற்றிப் பாடுவதிலும் காலத்தை வீணுக்காது, மனிதனின் இயல்பை நன்குணர்ந்து, மனிதன் எந்நிலையி லிருக்கிருன்? அவனுக்குச் செய்யவேண்டிய அவசர உதவி எது? என்று ஆராயப் புகுந்த கவிஞர் வரிசை யில் பாரதியே முதல்வர் என்னலாம். அகன்ற ஆழ மான, அன்பு ததும்பும் எண்ணங்கள்; அவற்றை வெளிப்படுத்த எளிய பாமர நடை. இங்ஙனம் தாம் மாத்திரம் மேன்மேலும் பறந்து சென்று மேலேயுள்ள காட்சிகளைக் காணுவதில் திருப்தி பெருது, தம்முடன் வாழும் மக்கள் அனைவரையும் தம்முடன் மேலே எடுத்துச் சென்று, தாம் பெற்ற பேரின்பத்தைத் தம் சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனப் பான்மை கொண்டவர் பாரதி. இதுமட்டுமன்று. தம் சூழ்நிலையில் தாம் காணும் ஊழல்கள் தீர மருந்தை அரைத்துக் கொடுத்த பெருமை பாரதிக்கே உரியது. 'பாரத நாடு பழம்பெரு நாடு, உன்னத ஆரிய நாடெங்கள் நாடு, தெய்விக சாகுந்தலம் என் னும் நாடகம் செய்தது எவர் கவிதை?' என்றெல்லாம் நம் நாட்டின் பழைய பெருமையைப் பற்றிப் பலபடப் புகழ்ந்ததோடு நில்லாமல், 'நம்மை ஏய்ப்போருக்

கேவல் செய்யும் காலம் போச்சு', 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்', 'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்', 'பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும் பண்ணி மலைகளென வீதி குவிப்போம்', 'ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்'—என இவை போன்ற காலத்துக் கேற்ற நிர்மாணத் திட்டத்தை வகுத்த கவிஞர் ஒருவருளர் என்றால் அவர் பாரதியாரே யாவார்.

நம் நாட்டில் மக்கள் படுந்துயரை மறந்து, தம் கவிதையுலகில் ஈடுபட்டிருந்திருப்பாரேயானால் இன்று பாரதி தேசீயகவி எனப் புகழப்படமாட்டார். "தம் மைச் சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்—ஆத்திரம் கொண்டே இவன் சைவன், இவன் அரி பக்தன் என்று பெருஞ் சண்டையிடுவார்—கஞ்சி குடிப்பதற்கில்லார், அதன் காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார்—எண்ணிலா நோயுடையார்—பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள் வார்" என்றெல்லாம் நம் நாட்டு மக்களின் பரிதாப நிலையைத் தம் ஊனக் கண்கொண்டு நுணுகிப் பார்த்தார். பிறகு கற்பனைக் கண்கொண்டு பார்த்தார். சுதந்திர இந்தியன் "ஒளிபடைத்த கண்ணினன், உறுதி கொண்ட நெஞ்சினன், எளிமை கொண் டிரங்குவான், பொய்மை கூறல் அஞ்சுவான், நோய் களற்ற உடலினன், வெற்றி கொண்ட கையினன், நாடெல்லாம் ஒற்றுமைகள் செய்யப் பெருஞ் செயல்

செய்வான்.'' இங்ஙனமாக நின்ற சுதந்திர இந்திய னைத் தம் கற்பனைக் கண்கொண்டு பார்த்தார். இது வும் போதவில்லை கவிஞருக்கு. தமது கருத்துக் கண்ணைத் திறந்து பார்த்தார். எங்கும் ஒரே சோதி. காக்கைச் சிறகினிலும், பார்க்கும் மரங்களிலும், கேட்கும் ஒலியிலும் அதுவே. வேண்டுவோர் வேட்கையாய், வேட்பாராய், வேட்பாருக்கீண்டு பொருளாய், அதனை யீட்டுவதாய் நிற்கும் பரம் பொருளைக் காணும் பேறு பெற்றார் பாரதி. இங்ஙனம் தம் ஊனக்கண்ணால் மட்டும் இன்றிக் கற்பனைக் கண்ணாலும் கருத்துக் கண்ணாலும் இவ்வுலகினைக் கண்டு வியந்து, தாம் பெற்ற தண்ணமுதைத் தம் சகோதரர்கள் அனைவர் உள்ளத்தும் பாயும்படி செய்து காண விரும்பிப் பாடியவர் பாரதி.

கவிதையென்பது மனிதனையும் பரம்பொருளை யும் இணைக்கும் ஒரு பாலம். கவிஞர்களில் சிலர் அப் பரம்பொருளைக் கடவுளென்பார்; மற்றையோர் அதை இயற்கையென்றோ, சக்தியென்றோ, இய லென்றோ கூறுவர். எங்ஙனமாயினும், மனிதன் ஒவ்வொருவனும் அறிந்தோ அறியாமலோ அப் பரம்பொருளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். உண்மையை அறிந்து செய்வோர் தம் வழியிலுள்ள இன்னல்களை மதியாது தீரத்துடன் பிரயாணஞ் செய்வர். தாம் போகும் பாதை எங்கேனும் இரண்டா கப் பிரியுமானால், அங்கு நின்று சரியாக நினைத்துப் பார்த்துத் தகுதியுடையோரின் சொற்படி சரியான பாதையில் திரும்பி நடக்க முற்படுவர். உண்மையை

அறியாது செல்வோர் வழியில் வரும் இன்னல்களால் மனமுடைந்து அங்கேயே தங்கி விடுவர்; கிளைப் பாதைகள் வந்து கூடுமிடத்து என்ன செய்வது என்று அறியாது தவிப்பர். பின்னர், தவருன பாதையிற் சென்று மேன்மேலும் துன்பத்திற் குள்ளாவர். இங்ஙனம் தடுமாறுவோருக்கு வழிகாட்டி யாக நிற்பவரே உண்மைக் கவிஞர். கடவுளை மறந்து அன்பை மறந்து பாடமாட்டார் அமரகவி. உண்மைக் கவிதையென்ருல் அது மனிதர்களுக்குக் கடவுளைக் காட்டும் சக்தி பெற்றிருக்கவேண்டும்; துன்பக் கடலைத் தாண்டுவிக்கும் அன்புத் தோணியாக இருக்க வேண்டும். இதற்கு, முதலாவதாகக் கவிஞரே அச் சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். பாரதி காண்கிருர் கண்ணனை. தூரத்தே நின்று தாம் செய்யும் குற்றங் களுக்காகத் தம்மை தண்டிக்கும் ஒரு கொடிய அரசனுகவா? அன்று. "மழைக்குக் குடை, பசி நேரத்துக்குணவு, என்றன் வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்" என்கிருர் பாரதி. உண்ண உண்ணத் தெவிட்டாத உயிரெனும் மார்பினின்றெடுத்த உணர் வென்னும் பாலை வண்ணமுற வைத்துத் தமக்கு ஊட்டு மோர் தாயாகவும் காண்கிருர். மற்றும் தம் சேவக ணுகவும் காதலனுகவும் காதலியாகவும் 'தம் இன் னருளை நாடிய நாடு அவலம் நீங்கிப் புகழில் உயர'ச் செய்விக்கும் அரசனுகவும் காண்கிருர் அக் கண்ணனை. இதுவே அமரகவியின் தனிப் பெருமை. தம் பாடல்களின் மூலம் கண்ணன் திருமுகத்தைக் கண்டு ஆனந்திக்கும் பேற்றை மனிதருக்கெல்லாம் தந்து போனுர் பாரதி.

தம்மைச் சுற்றியுள்ளவரை நன்கறிந்து, அவர்களுக்கு வேண்டுவன செய்து, தாம் நுகரும் இன்பங்களையெல்லாம் அவர்களும் நுகருமாறு செய்வித்து, உண்மைக் கவிதையென்னும் பாலத்தின்மீது அவர்களை அழைத்துச் சென்று கடவுளின் திருமுகத்தைக் காட்ட முனைந்த கவியே உண்மைக்கவி—ஆனந்தத்திற்கு வழிகாட்டும் நித்தியத் தோழர்—ஆன்மாவை உலகிலும், உலகை ஆன்மாவிலும் விளக்கும் பெரியார். உள்ளத்தின் ஒளியை வெளியிடும் கவியே தெய்வக்கவி, தேசக்கவி, அன்புக்கவி, அமரகவி.

## 3. ஒரு நடிக நாடகம்

கலை பற்பல விதங்களில் நமக்குத் தோற்றமளிக்கிறது. அதே போன்று கலையின் ஒரு கூருக அமைந்துள்ள இலக்கியமும் பலவகைப்படும். இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளில் அடங்கும் இலக்கியக்கலை. மறுபடியும் ஊன்றிப் பார்த்தால் நாடகம் ஒன்றே பலதிறப்படக் காணலாம். இன்ப முடிவு நாடகம் ஒன்று; துன்ப முடிவு நாடகம் இன்னென்று. இவ்விரண்டிலும் சேருவதாயும் சேராததாயும் தோற்றமளிக்கும் நாடகவகை மற்றுமொன்று.

இவை தவிர நாடகங்களை அவற்றிலுள்ள பாத்திரங்கள் அல்லது நடிப்போரின் எண்ணிக்கையை அனுசரித்து மூன்று விதங்களாகப் பிரிக்கலாம். முதலாவது வகை பலபேர் சேர்ந்து நடிக்கும் நாடகம். இரண்டாவது வகைக்கு இரண்டு பேர் நாடக மேடைமீது வந்தால் போதும். கடைசி வகையைச் சேர்ந்த நாடகத்திற்கு நடிப்போர் ஒருவரே. அவர் நடிகராக இருப்பினும் இருக்கலாம்; அல்லது நடிகையாக அமையினும் அமையலாம். முதல் வகையைச் சேர்ந்த நாடகங்கள் பலவற்றை எல்லா மொழிகளிலும் காணலாம். இரண்டாவது வகை நாடகங்கள் எண்ணிக்கையில் அவ்வளவு அதிகமன்று. இரண்டு பேர் மாத்திரம் சேர்ந்து நடிக்க வேண்டும். அங்கு மனிதக் கூட்டங்கள் வேண்டுமானுலும், ஏதாவது தூது அனுப்பவேண்டுமானுலும், ஏவலாட்கள் தேவையானுலும், எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் சரி, வேறு

நடிகனே நடிகையோ மேடைமீது வரமுடியாது. இதனால் இன்னும் தேவையான ஆட்கள் இருந் திருந்தால் என்னென்ன நேர்ந்திருக்குமோ அவற்றின் விளைவுகளையெல்லாம் அந்த இரண்டு நடிகர்களும் தம் வார்த்தைகளாலோ முகக் குறிப்பாலோதான் அறிவிக்க வேண்டும். இத்தகைய நாடகங்களைத் தொகுப்பது சுலபமன்று. நடிகர்கள் திறமையும் அனுபவமும் வாய்ந்தவர்களாகவும், நாடகத்தை நன்கு படித்தறிந்தவர்களாகவும் இருக்கவேண்டும். நடிகத் திறமையில் சிறிதளவு குறைவுபட்டாலும் பார்ப் போர் மனத்தில் சரியான எண்ணங்கள் எழுப்பப் படாது போகும். இவற்றைக் கவனித்துப் பார்த்தால், இத்தகைய நாடகங்களில் உயர்ந்த ரக நடிப்புத் திறமை யின் அவசியம் நன்கு விளங்கும்.

கடைசி வகை நாடகத்திற்கு ஒரே நடிகர். இத் தகைய நாடகங்கள் தமிழ் மொழியில் வெகு சிலவே யுள்ளன. இதன் பயனுகத் தமிழில் இந்த நாடக வகையைக் குறிக்கச் சரியான சொல்லேயில்லாமல் இருக்கிறது. இதை 'ஒரு நடிக நாடகம்' என்றே இக்கட்டுரை முழுதும் கூறுவோம். இதை ஆங்கிலத் தில் 'Dramatic Monologue' என்று கூறுவர். இது ஒரு மனிதன் தன்னுள் எழும் எண்ணங்களை வெளிப் படுத்த உதவும் ஒரு நேர்கருவி. ஆகவே, இவ்வகை நாடகத்தில் காணப்படும் எண்ணங்களெல்லாம் அதை சிருஷ்டிசெய்துள்ள கவிஞனுடையனவே. ஆனால் இதற்கும் தனிமைப் பேச்சு (Soliloquy)க்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கலாம். அவை ஒன்று

போலவே காணப்படினும் உண்மையில் சில நுட்ப மான வித்தியாசங்கள் உடையவை. தனிமைப் பேச்சு என்பது ஒரு நாடகத்தில் ஒரு நடிகனோ அல்லது நடிகையோ (தனிமையில்) தனக்குத் தானே பேசிக் கொள்வதாக அமைந்துள்ள சொற்பகுதி. ஆகவே, தனிமைப் பேச்சு என்னும் போதே அதை உள்ளடக் கிக் கொண்டுள்ள ஒரு நாடகம் உள்ளமை புலனு கிறது. தனிமைப் பேச்சு என்பது ஒரு பகுதி; நாடகம் முழுமை. அந்த நாடகத்தின் பாத்திரங்கள், அந்நாடகாசிரியனின் நோக்கங்கள், நாடகத்தில் இந்த சொற்பகுதி அமைந்திருக்கும் இடம், சந்தர்ப்பம் இவற்றையெல்லாம் யோசித்துத்தான் நாம் ஒரு 'தனிமைப் பேச்சு'க்குப் பொருள் கூறலாம். அதை நன்கறிய அதைச் சொல்லும் ஒரு மனிதனை மாத்திரம் அறிந்தால் போதாது. அவன் கூறும் சொற்களுக்கும் அவன் மனத்தில் எழும் எண்ணங் களுக்கும் எந்தச் சம்பவங்கள் காரணமாக நிற்கின் றன என்று அறிவது அவசியம். இந்தப் பகுதிக்கு முன்னால் நாடகத்தில் நடந்துள்ள சம்பவங்கள், அந்தச் சொற்பகுதி எவனுடைய கூற்றோ அவனது இயல்புகள், அவன் சொல்வதாக நாடகத்தில் அமைந் துள்ள மற்றச் சொற்பகுதிகள் இவைகளுக் கேற்பவே அந்தத் தனிமைப் பேச்சுக்கு நாம் பொருள் கூற வேண்டும். இன்றேல் நாடகத்தின் முக்கிய நோக்கம் பாழ்படும். நாடகாசிரியர் தமது நாடகத்தின் மூலம் வெளிப்படுத்த எண்ணும் கருத்துக்களுக்கு உதவியாக அமையவே இந்தத் தனிமைப் பேச்சு சிருஷ்டிக்கப் படுகிறது. நாடகத்தினின்றும் பிரித்தெடுத்து இந்தச்

சொற்பகுதிக்குத் தனியே பொருள் கூற முயன்ருல், அது வெறும் அபத்தமாகவே முடியும்.

இதற்கு மாருக ஒரு நடிக நாடகம் என்பது பிறி தொன்றை எதிர்பார்க்காது தன்னந்தனியாக நின்று பொருள் தரும் ஒரு சொற்பகுதி. ஒரு கவிஞன் தான் சொல்ல விரும்பும் அனைத்தையும் சேர்த்து ஒரு நடிக னின் வாயிலாக வெளியிடுகிருன். ஆகவே, அந் நடிகன் சொல்லுவதாக அமைந்துள்ள சொற்பகுதி யிலேயே பல நடிகர்களும் பல சம்பவங்களும் பல உணர்ச்சிகளும் தோற்றமளிக்கின்றன. ஆகவே, இச் சொற்பகுதியைக் கூர்ந்து பார்த்தோமாளுல் பல நடி கர்கள் மேடைக்கு வராமல் அமைந்திருப்பினும், ஒரு நாடகத்திற்கு இருக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் யாவும் இதில் இருக்கக் காணலாம். இதுவே ஒரு சிறு நாடகம் என்று கூறினுலும் பொருந்தும்; ஆகவே, ஒரு நாடகத்தின் பகுதியாக அமைந்ததன்று. இதுவே ஒரு தனி நாடகம் போன்றமைவது. இவ்வகை நாடகம் எழுதுங் கவிஞனின் ஆற்றலும், அறிவும், நடிகத் திறனும் சாதாரண நாடகாசிரியர்களுடை யதை விடச் சிறந்திருக்க வேண்டும். ஆகவே 'ஒரு நடிக நாடகம்' என்பது நாடகத்தின் ஒரு மேலான (ஆனல் அதை சிருஷ்டிப்போனுக்குக் கடினமான) வகை.

பேச்சும் நடிப்பும் சேர்ந்து அமைவது ஒரு நாடகம். அதில் வெகு சில இடங்களிலேதான் தனி மைப் பேச்சுகள் இருக்கக் காணலாம். நடிப்பிலும் பேச்சிலும் வெளிப்படுத்த முடியாத பெருங்கருத்துக்

கள் பல நாடகாசிரியனின் உள்ளத்தில் எழும். ஆனால், இவ்வெண்ணச் சுழல்களைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டிய இடங்களில் நாடாகாசிரியர் கள் அடிக்கடி தோன்றிப் போகிறார்கள். இங்ஙனம் ஒருவன் சொல்லையும் செயலையும் வெளியிட நாடகம் சிறந்த சாதனமாக இருப்பதுபோலவே, ஒருவனுடைய எண்ணங்களை வெளியிட ஒரு நடிக நாடகம் மிகவும் உதவியாக அமைகிறது. ஆகவே, சாதாரண நாடகங் களைவிட இதில் கவிஞனை அதிகமாக அறிய முடியும். ஒரு நாடகமென்றால் பல சம்பவங்களையும் பல செய் கைகளையும் ஒரு கருத்துக்கேற்ப அமைத்து, அந்த ஒரு கருத்தைத் தெளிவாக வெளியிட முயல்கிறான் ஆசிரியன். இதற்கு நேரிடையாகக் கவிஞன் ஏதேனு மொரு கருத்தை மனத்திலிருத்திக் கொண்டு, அதை விளக்கும் வகையில் சில சம்பவங்களையும் சில மனி தர்களையும் சில உணர்ச்சிகளையும் சிருஷ்டிக்கிறான் ஒரே பாத்திரத்துடன் அமையும் நாடகத்தில். ஆகவே, கவிஞன் இவ்வகைச் சொற் பகுதியில் கூறவருவது ஒரு கருத்து. அதை விளக்கி விரித்துரைக்க அவனுக் குச் சுதந்திரமிருக்கிறது. இவ்வளவு சுதந்திரமும் தன் நோக்கைப் புகுத்த இடமும் கிடையாது சாதாரண நாடகங்களில்.

ஒரே நடிகரைக் கொண்டுள்ள நாடக வகையைச் சிறப்பாக முயன்று பண்படுத்தியவர்கள் ஆங்கில நாடகாசிரியர்களும் கவிஞர்களும். இங்கிலாந்தில் 19-ம் நூற்றாண்டில் ப்ரௌனிங் (Browning) என்ற ஒரு பெருங் கவிஞன் இருந்தான். அவன் பல நல்ல

பாட்டுக்களை எழுதிப் போனான். அவன் எழுதிய நடிக நாடகங்களில் ஒன்றை மாத்திரம் பார்ப்போம்.

இத்தாலி நாட்டில் ஒரு திறமை மிகுந்த ஓவியக் காரன் இருந்தான். அவன் பெயர் ஆண்ட்ரியா. அவன் லுக்ரீஷியா என்ற ஒரு பெண்ணைக் காதலித் தான். அவள் இதற்கு முன்பே மற்றொருவனை நேசித்து வந்தாள். இது தெரிந்திருந்தும் அவனுக்கு லுக்ரீஷியா மீதிருந்த காதல் குறையவில்லை. அவளுக் காகத் தன் கையிலிருந்த பணத்தையெல்லாம் அவன் பறிகொடுத்தான். போதாததற்குப் பிரான்சு மன்னர் ஓர் ஓவிய மெழுதும்பொருட்டு அவனுக்குக் கொடுத் திருந்த பணத்தை யெடுத்துக்கொண்டு, அவருக்குத் தெரியாமல் நாட்டைவிட்டு ஓடிவந்து விட்டான். லுக்ரீஷியாவின் காதலனுக்காகத் திருடி வந்த பொருளில் பெரும் பகுதியைச் செலவிட்டான். லுக்ரீஷியா பராமுகமாயிருந்தாலும் அவளைப் பின் பற்றிச் செல்வதும், அவளுடன் பேசுவதுமாக இருந் தான் அவன். இவ்வளவும் எதற்காக? லுக்ரீஷியா தன்னைப் பார்த்து ஒரு புன்முறுவல் பூத்தால் போது மென்றும், அவளது காதலனைத் திருப்தி செய்தா லாவது அவள் தன்னிடம் அன்பு காட்டமாட்டாளா என்றும், இப்படியாக லுக்ரீஷியாவின் காதல் அலையில் சிக்கி மோதுண்டவனாய்ப் பரிதாப நிலையில் தோற்றமளிக்கிறான் ஆண்ட்ரியா.

ஒரு நாள் பொழுது சாயும் வேளையில் அவன் தன் அறையில் லுக்ரீஷியாவுடன் இருப்பதாக நமக்கு எண்ணமூட்டுகிறார் கவிஞர். ஆண்ட்ரியா தனக்குத்

தானே பேசிக்கொள்வது போன்று அமைந்துள்ளது இப்பாட்டு முழுவதும். "நான் உன்னை எவ்வளவு காதலிக்கிறேன் தெரியுமா? உனக்காக அல்லவா என்னை ஆதரித்து வந்த அரசனுக்கும் வஞ்சனை செய்துவிட்டு இங்கே ஓடிவந்தேன்! உன் காதலனு அங்கே காத்திருப்பது? அவனைக் கண்டவுடன் போய் விடப் பார்க்கிருயே! அவனுக்கு வேண்டிய பணத்தை யும் கொடுக்கிறேன். இன்னும் கொஞ்சநேரம் என் னுடன்கூட இருக்க மாட்டாயா! என் அருகில் கொஞ்சம் உட்கார்ந்திருந்தாலும் போதும். இந்த ஜன்னலின் வழியாகப் பார். என்ன இயற்கைத் தோற்றங்கள்! இவ்வளவு அழகையும் பருகி அதை ஓவியத்தில் தீட்ட என்னுல் முடியாதா! எவ்வளவு நல்ல படங்களை வரைந்திருக்கிறேன்! வர்ணந் தீட்டு வதில் நிகரற்றவனென்று யான் பெயர் பெறவில்லையா? எத்தனை பெரியவர்கள் எனது ஓவியத்திற்காக என்னைப் பெருமதிப்புடன் நடத்தி வந்தார்கள்! அத்தனைச் செல்வாக்கையும் துறந்து இங்கு வந்தது எதற்காக? உன் கொடுமைதான் என்னே! இப்பொழு தும் இதோ என் ஓவியத்தைத் தோற்றுவிக்கிறேன் பார். படமெழுதச் சரியாக உட்கார்ந்து கொள். சிறிது புன்முறுவல் காட்டு. இதோ வரைந்து விடு கிறேன் உன்னைப் போலவே ஒரு படம். அதற்கு உயிரும் கொடுத்து விடுகிறேன்..........." என்று செல்கிறது பாட்டு. இதை நடிக்க வேண்டுமானுல் ஆண்ட்ரியா இருந்தால் போதும். அவன் சொல்வ தாக அமைந்துள்ள கவியின் சொற்களைச் சரியாக உணர்ச்சி ததும்பத் தக்க முகக் குறிப்புகளோடு

சொன்னுல் போதும். நம் மனக்கண் முன்னுல் இத்தாலி வந்து நிற்கும். லுக்ரீஷியாவின் கட்டழகும், முகச்சோபையும், குறும்பு தோன்றும் நோக்கும் எளிதில் தெரியும். ஆண்ட்ரியாவின் அறைக்கருகிலுள்ள இயற்கைப் பொருள்கள் தெரியும். அவன் உள்ளத்தில் எழும் காதல் அலைகளின் ஓசை முழங்கும். அவன் மனமுருகிச் சொல்லும் சோக வார்த்தைகளின் உண்மை புலப்படும்.

நாடக மேடையின்மீது வரும் மனிதர் எண்ணிக்கையில் ஒருவரேயாயினும், கவி தமது சொல்லோவியத்தின் திறனுல் நம் கண்ணுக்குப் பல பொருள்களைக் காட்டி, நம் செவிக்குப் பல ஓசைகளையூட்டி, நம் மனத்தில் பல எண்ணச் சுழல்களை எழுப்புகிருர். கவி தன் மனத்தில் நினைப்பதையெல்லாம் நாமும் நினைக்கச் செய்கிருர். இதற்குப் பாட்டின் சந்தம் நன்கு அமைய வேண்டும். சொற்கள் அழகுடையனவாயும் தகுந்த இடங்களில் வைக்கப்பட்டும் இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் விட முக்கியமாகக் கவிஞன் காணும் கனவு பல உணர்ச்சிகளையும் பல காட்சிகளையும் பல நாதங்களையும் எழுப்புந் திறனுடையதாக இருக்கவேண்டும். இக்கனவின் சொல்லோவியமே ஒரு நடிக நாடகம். இத்தகைய சிறு நாடகங்கள் தமிழ்மொழியில் நிரம்ப எழுதப்பெறல் வேண்டும். அவற்றை நன்கு படித்தறிய அனைவரும் முயல வேண்டும். நடிப்புத்திறன் உடையோர் இக்கலைப் பகுதியைச் சிறப்புறப் பண்படுத்தித் தமிழன்னையின் செல்வக் களஞ்சியத்தை மேன்மேலும் நிரப்ப வேண்டும்.

# 4. கலிங்கப் போர்

'கலிங்கப்போர்' என்பது சோழ வேந்தன் விசயதரன் என்பான் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று நிகழ்த்திய மாபெரும் போரினைக் குறிப்பதாகும். இப் போரைப் பற்றிய செய்திகளனைத்தும் 'கலிங்கத்துப் பரணி' என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. 'பரணி' என்னும் நூலின் இலக்கணம் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது :

> 'ஆனை யாயிரம் அமரிடை வென்ற
> மானவனுக்கு வகுப்பது பரணி.'

ஆயிரம் களிறுகளை அமரில் வென்ற ஆண்மகனொருவனைச் சிறப்பித்துப் பாடுவது 'பரணி' என்று மேற்குறித்த சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. கலிங்கப் போர்க் களத்தில் பேய்கள் பரணிநாளில் கூழ் சமைத்துத் தேவியை வழிபட்டமை குறித்து இந் நூலுக்குப் பரணி யென்று பெயர் வந்தது எனக் கருதுவாருமுளர்.

இனி, சயங்கொண்டார் என்னும் புலவர் பெருந்தகையால் இந்நூலில் தீட்டப்பெற்றுள்ள தமிழர் வீரம், படைச் செருக்கு முதலியவை எத்தன்மையன என்பதை நோக்குவோம். போரின் காரணத்தைக் கூறவந்த புலவர், சோழ வேந்தனின் திருவோலக்கச் சிறப்பைச் சித்திரிக்கின்றார். அவ்வேந்தன் ஆண் சிங்கத்தைப் போல அரியணைமீது வீற்றிருந்ததையும், இமயமலை வரை தன் ஆட்சி செலுத்தியதையும் கூறுகின்றார் :

' அங்கண் ஞாலம னைத்தும்பு யத்தில்வைத்
தாட கக்கிரி யிற்புலி வைத்தவன்
சிங்க வாகனத் தேறியி ருப்பதோர்
சிங்க வேறெனச் செவ்விசி றக்கவே.'

விசயதரன் இங்ஙனம் வீறுடன் அமர்ந்திருந்தபோது, பற்பல நாட்டரசர்களும் தத்தம் திறைகளைச் செலுத்தி வணங்கலுற்றனர். "எங்கள் நாடு, நகரங்களைக் கருணையோடு தந்து அருளியதற்காக எங்களைச் செலுத்துமாறு ஏவிய திறைகளைக் கொண்டு வந்திருக்கிறோம்" என்று கூறிப் பொன்னும், மணியும், மதக் கரி பலவும் திறையாகச் செலுத்திவிட்டு எல்லா அரசர்களும் சென்றனர். இப்படித் தத்தம் திறைகளைச் செலுத்தியபோது ஒரு சில வேந்தர் தம் பரிசிலைவிட உயர்ந்ததை எவரேனும் சோழவேந்தனுக்குத் தந்தால், தம் அரசுரிமையை விற்ுவது அங்ஙனம் கொடுத்தவர்களுக்குச் சமமாகக் கொடுப்பதாகச் சூளுரை கூறுவதை ஆசிரியர் அழகாக வர்ணிக்கிறார்.

' ஏறியருளவ டுக்குமிந் நூறு களிறுமி வற்றெதிர்
ஏனை யரசரொ ருத்தரோ ரானை யிடுவரெ னிற்புவி
மாறி யருளவ வர்க்கிடை யாமு மிசைவமெ னப்பல
மான வரசர்த னித்தனி வாழ்வு கருதியு ரைப்பரே.'

இங்ஙனம் வெவ்வேறு நாட்டு வேந்தரும் தத்தம் திறையே பெரிது எனக்கூறிச் செலுத்தி விசயதரனின் கழலடி பணிந்து செல்லும்போது, வடகலிங்க வேந்தன் அனந்த பதுமன் இரு முறையாகத் திறை செலுத்தவில்லை என்பதை அறிகிறான் சோழ மன்னன். சிறிதும் கோபங் கொள்ளாமல் புன்னகை புரிந்த முகத்தோடு தனது படைவீரர்களை நோக்கிக்

" கலிங்க வேந்தன் எளியன். என்றாலும் அவனது வலிமை அழியுமாறு மலையரண்களை அழித்து அவனுடைய யானைப் படைகளைக் கைக்கொண்டு அவனையும் சிறைப்படுத்தி இங்குக் கொண்டு வாருங்கள் " என ஆணையிட்டான்.

வேந்தன் கூறிய கடிய ஆணையைக் கேட்ட வண்டைநகர் வேந்தனான கருணாகரத் தொண்டைமான் திரண்டு எழுந்து சேனையோடு கலிங்கநாட்டை நோக்கிச் சென்றான். படையின் திறத்தையும், மிகுதிப்பாட்டையும் புலவர் மிக அழகாகக் கூறிச் செல்கிறார். வெண்கொற்றக் குடையும், பீலிக் குடையும், துகிற்கொடியும் படைஞர் தாங்கிச் சென்றதன் விளைவாகச் சூரியனது ஒளியே தரை மீது படாதுபோயிற்று என்று ஆசிரியர் கூறுகிறார். அவ்விருள் அகன்ற பான்மையினையும் சித்திரிக்கின்றார் நம் கவிஞர். அப்போர் வீரர் கண்கள் வீசிய கனலானும், மற்றவர் அணிந்திருந்த பொன்னணிகள் வீசிய ஒளியானும், கைப்படைகள் ஒன்றோடொன்று உராய்ந்ததனால் உண்டான பொறியானும் இருள் மறைந்தது, எங்கும் ஒளி படர்ந்தது என்று வெகு நயத்துடன் வரும் அடிகளைக் காண்க :

" அலகில் கட்டழற் கனல்வி ரித்தலால்
அரிய பொற்பணிக் கலனெ றித்தலால்
இலகு கைப்படை கனல்வி ரித்தலால்
இருள்க ரக்கவே யொளிப ரக்கவே."

அளவிடமுடியாத பெரும் படையாதலால் ஆசிரியர் அதற்கு ஏற்ற உவமைகளையே ஆய்ந்து கூறுகிறார்.

படைகளின் பெருக்கு எத்தன்மையது என்பதைக் கூறும் அடிகள்

" அகில வெற்புமின் ருனே யானவோ
அடைய மாருதம் புரவி யானவோ
முகில னைத்துமத் தேர்க ளானவோ
மூரி வேலைபோர் வீர ரானவோ "

என்பனவாம்.

இத்தகைய மாபெரும் படைவலியோடு கலிங்க நாட்டை அடைந்தான் கருணாகரத் தொண்டைமான். படைகளும் நாட்டில் புகுந்து மதில்களை அழிக்க ஆரம்பித்தன. அது கண்ட குடிமக்கள் விரைந்தோடி அரசனை அணுகி, " சோழ வேந்தனுக்குச் செலுத்த வேண்டிய பகுதிப்பொருள்களைச் செலுத்தாமையால் அவன் படைகள் நாட்டை அழிக்க வந்துள்ளன " எனக் கூறினர். அங்ஙனம் கூறச்சென்ற மக்கள் அடைந்த மனக்கலக்கத்தையும் அவர்தம் நிலையை யும் கீழ்க்காணும் செய்யுளிலிருந்து நன்கு அறிய லாம் :

" உரையிற் குழறியு முடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர் முன் முறையிட்டே
அரையிற் றுகில்விழ வடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத் தே."

குடிமக்களின் மாற்றம் கேட்டு அளவிறந்த சினங் கொண்டான் கலிங்க மன்னன். " நான் விசயதர சோழமன்னனுக்கு அல்லாமல் அவன் படைவீரர் களுக்குமா எளியன் !" என வெகுண்டு கூறித் தன்னிரு பெருந்தோள்கள் குலுங்கும்வகை நகைத் தான். " எனது காடுகளின் அரணும், மலையரணும்,

கடலரணும் எத்தன்மையன என்று அறியாமல் அச் சோழவேந்தனின் படைகள் என்னை எளிதில் வெல்லக்கருதி வந்தன போலும்" எனக் கூறிப் பரிகசித்தான்.

கலிங்க மன்னனின் அமைச்சனுன எங்கராயன் என்பான், சோழவேந்தனின் படைவலி மிகப் பெரிது என்றும், பல நாட்டு அரசர்கள் அவனுல் அழிக்கப்பட்டனர் என்றும் எடுத்துக் கூறினுன். இதைச் சிறிதும் பொருட்படுத்தாத அவ்வேந்தனை நோக்கி "நீர் என் சொல்லில் ஐயமுறின், சோழன் படைத்தலைவனுன கருணுகரனேடு போர்புரிந்து உன் ஆற்றலை அறிந்துகொள்வீராக" என மொழிந்தான் எங்கராயன். இம்மொழி கேட்ட கலிங்க வேந்தன் வெஞ்சினங்கொண்டான். அதனைக் கண்ட அமைச்சன்,

> "இன்று சீறினும் நாளையச் சேனைமுன்
> நின்ற போழ்தினி லென்னைநி னைத்தியால்"

என்று கூறினுன். கலிங்கவேந்தனின் கெடுமதி அமைச்சன் காட்டிய நல்வழியில் எங்ஙனம் செல்லும்? தன் தோள்கள் பல நாட்களாய்ப் போரின்றி மெலிந்திருப்பதாகவும், தன் தோள்வலியும் வாள் வலியும் அறியாமல் வந்த பகைவர் தன்னை வெல்லுதல் அரிது என்றும் எண்ணித் தன் நால்வகைப் படைகளையும் கொண்டு போர் தொடங்கினுன்.

இனி 'போர் பாடியது' என்னும் பகுதியில் ஆசிரியர் போர் நிகழ்ச்சியை வரைந்து செல்கின்ருர். நால்வகைச் சேனைகளுக்கும் போரால் நேர்ந்த

அழிவை ஆசிரியர் கூறுகின்றார். இரத்த வெள்ளத்தில் வெண்கொற்றக் குடைகள் நுரைபோன்று மிதந்து சென்றன என்றும், இறந்துபோன யானைகளின் உடற்கூறுகள் ஆற்றின் கரையைப்போலத் திகழ்ந்தன என்றும் கூறும் தாழிசை காண்க :

"குருதியி னதிவெளி பரக்கவே
குடையென நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுட லடுக்கியே
கரையென விருபுடை கிடக்கவே."

யானைப்போரைச் சித்திரிக்கின்றார் நம் கவிஞர். அவ்வோவியத்தை அறிந்து இன்புறுதல் இன்றியமையாதது. யானைக் கூட்டங்கள் தமது துதிக்கைகளை மாட்டி வலித்தல், வலிய கயிறுகளைத் திரிப்பதுபோன்று இருந்ததாம். இரத்த வெள்ளத்து வெட்டுண்டு விழுந்த மதகரிகளின் கூட்டங்கள் கடலில் நீருண்ணச் செல்லும் மேகங்களை ஒத்திருந்தனவாம். இங்ஙனம் அழகாகக் கூறியபின், குதிரைப் படையின் போர்த் தொழிலையும் படை வீரர்கள் திறத்தையும் கூறுகிறார்.

சில வீரர்கள் குதிரைகளொடு போர்புரிய மனமில்லாதவர்களாய் யானைப்படையோடு போர் செய்தபோது, அவற்றின் கொம்புகள் மார்பில் பதிவதைக் கண்டு எல்லையில்லாத மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள்.

இனி, கையில் ஆயுதமில்லாதிருந்த வீரர் தமது மார்பின்கண் தைத்த அம்பினைப் பறித்துப் பகைவர்மீது செலுத்தினார்களென்று அவர் வீரத்தின் மிகுதியைக் குறிக்கிறார். இங்ஙனம் இரு நாட்டுப்

படைகளும் போர் செய்தபோது இரு தொடைகளும் அறுபட்டு வீழ்ந்த வீரன் ஒருவன் தன்னையெதிர்த்து வந்த வெங்களிற்றின் வலியடங்குமாறு தன் தொடைகளில் ஒன்றைச் சுழற்றி எறிந்தானென்றும், வேறொரு வீரன் தன்னைத் தாக்கவந்த யானையின் மீதேறிப் பகைவீரனின் தலையை வெட்டி வீழ்த்த, ஆவி துறக்கும் அவ்வீரன் தன் களிற்றை நோக்கிப் ''பகைவனைத் தாக்கிக் கொல்!'' எனக்கூறி ஆவி துறந்தான் என்றும் பல வீர நிகழ்ச்சிகள் இங்கே கூறப்படுகின்றன.

இறுதியில், கலிங்க வேந்தன் தோல்வி அடைந்து போர்க்களத்தினின்றும் ஓடி ஒளிந்தான். அவன் வீரர்கள் எதிரியின் வலியைக் கண்டு நிலைகுலைந்து போயினர். தத்தம் நிழலையே தன்னைத் தாக்கவந்த தமிழரென நினைத்து ஓடுதற்கு அஞ்சி அபயக்குரல் ஓசையோடு நடுங்கி வணங்கினர். இங்ஙனம் தமிழ் வேந்தனின் ஏற்றமும், கலிங்க வீரனின் இழிவும் தோன்றப் பெருமிதத்தோடு கவிஞர் கூறும் போர் நிகழ்ச்சிகளும் பிறவும் பயில்வோர் நெஞ்சை அள்ளும் வண்ணம் அமைந்துள்ளன.

# 5. கம்பன் கண்ட கோசலை

கம்பனுடைய காவியம் அது எழுதப்பட்ட நாள் முதல் இன்றுவரை தமிழருடைய உள்ளத்தைக் கவர்ந்துள்ளது. முப்பது தலைமுறைகள் அதனைக் கற்றுப் பேரின்பங் கண்டன. இனிவரும் கணக்கற்ற தலைமுறைகள் அந்நூலைப் படித்தறிந்து இன்பங் காணப் போகின்றன. இத்தகைய பெருங் காவியத்திலே கம்பன் அநேக பாத்திரங்களை நம் மனக்கண்முன் நிற்கத் தீட்டியுள்ளான். அப்பாத்திரங்களின் மூலம் கவிஞன் தன் எழில் வருணனை, கற்பனை சக்தி, உணர்ச்சி அறிவிப்பு, கலைவளம், படைப்புத்திறன் ஆகிய சிறந்த பண்புகளையெல்லாம் நமக்கு அறிவித்து விடுகிறான். கம்பனுடைய காவிய உலகத்திலே நமக்குக் காட்சியளிக்கும் பாத்திரங்களில் ஒருத்தி கோசலை.

கம்பனுடைய காவிய அரங்கிலே கோசலை ஐந்து முறை தோற்றமளிக்கிறாள். உலகமுய்ய ஒரு புதல்வனை கருவுயிர்த்தருளினாள் என்ற கட்டத்திலிருந்துதான் கோசலையின் வாழ்வைக் கம்பன் சித்திரிக்கின்றான். இவளுடைய பிறப்பு, இருப்பு, திருமணம் ஆகியவற்றைப் பற்றிக் கவிஞன் ஒன்றுங் கூறவில்லை. ஊழிக்காலத்திலே உலகங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் காத்தவன் திருமால். அரிய மறைகளாலும் அறிய இயலாத அவன், நீருண்ட கரிய மேகத்தைப் போன்றவன்; எழில் காட்டுஞ் சோதி. அத் தகையோனைப் பயந்தாள் கோசலை. எதற்காகவெனின் சூரியகுலமும் மானிலத்துள்ளோர்

அனைவரும் பயனடையும் பொருட்டே. கம்பன் பாடலைப் பார்ப்போம்.

> " ஒருபகல் உலகெலாம் உதரத்துட் பொதிந்து
> அருமறைக் குணர்வரும் அவனை, அஞ்சனக்
> கருமுகிற் கொழுந் தெழில் காட்டுஞ் சோதியைத்
> திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை. "

குலம், குணம், அரசுநிலை ஆகியவை நிரம்பி யிருந்தாலும், தான் செய்த தவத்தின் பயனுகவே இம் மகப்பேறு அவளுக்குக் கிடைத்தது எனத் தோன்ற

> " என்வ யிற்றரு மைந்தற்கி கினியருள்
> உன்வ யிற்ற தென்ருளுல கியாவையும்
> மன்வ யிற்றின் அடக்கிய மாயனைத்
> தன்வ யிற்றின் அடக்கும் தவத்தினுள் "

எனக் கூறுகிருன் கவிஞன். இன்னும் மிதிலையிலே ஜனகனுடைய சபையிலே சோசிகமுனிவர் வீற்றிருக் கிருர். அரசனைப்பார்த்துத் தன் சீடனை இராமனை யும் அவனைப் பெற்ற கோசலையையும் குறித்து முனிவர் வியந்து பேசுகிருர். உலகெங்கும் பரந்து கிடக்கும் பாபங்களுடைய அழிவிற்காகவும், அருமை யானதும் முடிவற்றதுமான மறைகள் சொல்லு கின்ற அறங்களின் வாழ்விற்காகவும் கோசலை பயந்தாளாம் இராமனை. இராமன் எத்தகையவன்? பெரிய ஆபரணங்களை யணிந்த கைகளையுடையவன்; அழகே உருவான திருமேனியுடையான் ; அழகு ஆற்றல் அறிவு அறம் இவற்றின் பரந்த காட்சியான் இராமன். கோசலை எத்தகையவள்?

உள்ளத்தூய்மை, உருவ எழில், உரையினிமை ஆகிய பண்புகள் நிறைந்த 'செங்கனிவாய்க் கௌசலை.' இவ்வளவு கருத்துக்களும் வெளிப்பட

" விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங் கடையின் மறையறைந்த அறஞ்செய்த அறத்தாலும்
இருங் கடகக் கரதலத்தில் எழுதரிய திருமேனிக்
கருங் கடலைச் செங்கனிவாய் கவுசலைஎன் பாள்பயந்தாள் "

என்கிறான் கவிஞன்.

தசரதன் தன் மகனை இராமனுக்கு முடிசூட்ட முடிவு செய்கிறான். இதையறிந்த பணிப்பெண்கள் மிகுந்த உவகையோடு இச்செய்தியைக் கோசலை யிடம் தெரிவிக்க ஆவலுடன் ஓடிவந்து அவள்முன் நிற்கிறார்கள். அவ்வளவுதான். அவர்களுடைய ஓகை நிலைகள், வேகங்கள் இவற்றை எளிதில் கோசலை உணர்கிறாள். புறத்தே நிகழும் செயல் நிலைகளி லிருந்து அவர்களுடைய உள்ளத்திலே இன்பம் பெருகுவதை ஊகித்துத் தெரிந்துகொள்கிறாள்; "தொண்டை வாயினிர்! சொல்லுமின்" என்று ஆர் வத்தோடு கேட்கிறாள். இனி, கம்ப சித்திரத்தைப் பார்ப்போம் :

" ஆண்ட வன்னிலை யாக அறிந்தவர்
பூண்ட காதலர் பூட்டவிழ் மார்பினர்
நீண்ட கூந்தலர் நீள்கலை தாங்கலர்
ஈண்ட ஓடினர் இட்டிடை யிற்றிலர் "

" ஆடு கின்றனர் பண்ணடை யின்றியே
பாடு கின்றனர் பார்த்தவர்க் கேகரம்
சூடு கின்றனர் சொல்லுவ தோர்கிலார்
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே "

" கண்ட மாதரைக் காதலின் நோக்கினுள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
உண்டு பேருவகைப் பொருள் அன்னது
தொண்டை வாயினிர் சொல்லுமின் ஈண்டென்றுள் "

இதனால் கோசலையின் குறிப்பறியுந்திறன் எத்தகைய தென அறியலாம்.

தன் மகன் அரசு பெறுகிருனென்னும் செய்தியை அறிகிருள் கோசலை. சாதாரணமாக நாம் என்ன எதிர்பார்ப்போம் இந்நிலையில்? கோசலை இன்பக்கடலில் மூழ்கினுள் என்ற கருத்தையல்லவா? கம்பன் தரும் காட்சி முற்றிலும் புதுமையானது. தன் மகன் அரசபதவி பெறுகிருனென அறிந்த கோசலை இன்பங் கொள்ளுகிருள். அதே சமயத்தில் தன் நாயகன் உலகைத் துறந்து நிற்பாரோ என்று நினைத்தாளாம் கோசலை. உடனே உள்ளே பொங்கியிருந்த உவகை ஒழிந்து துயரம் பெருகிற்றும். கம்பனுடைய பாடலைப் பார்ப்போம்:

" சிறக்குஞ் செல்வம் மகற்கெனச் சிந்தையில்
பிறக்கும் பேருவகைக் கடல் பெட்பற
வறக்கு மாவட வைக்கனல் ஆனதால்
துறக்கும் மன்னவன் என்னும் துணுக்கமே "

இதனால் பெற்ற பிள்ளையின் பாலும், கணவன் மேலும் கோசலைக்குள்ள அன்பின் பெருக்கு தெரிய வருகிறது.

கோசலையின் உன்னதப் பண்பு வெளிப்படுவது, இராமன் வனம் புகத்துணிந்து, விடைபெற அவளிடம் செல்லும்பொழுதுதான். இராமனுக்கு முடி சூட்டுவதற்கான வேலைகள் யாவும் நடைபெறு

கின்றன. நன்னாள் காலையில் இராமனைக் கைகேயி அழைத்துக் "பரதன் முடிபுனைந்து கொள்வான். நீ கானகம் செல். இது உன் தந்தையின் கட்டளை" எனக் கூறுகிறாள். இராமன் உள்ளம் மகிழ்ந்து "அம்மா, அப்படியே செய்கின்றேன்" என்று தொழுது வணங்கிப் பின் நேரே கோசலையிடம் சென்று அவள்முன் நிற்கிறான். தலையின் மணி முடியைக் காணோம். அரச கோலங்கள் யாவும் இல்லை. கோசலை சிறிது ஐயமுறுகிறாள். வீரன் அவளுடைய திருவடிகளிலே விழுந்து தொழுகிறான். "நினைத்தது என்? இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு?" என்று மனத்துடிப்புடனும் மயக்குற்ற மதியுடனும் கேட்கிறாள் கோசலை.

"குழைக்கின்ற கவரியின்றிக் கொற்றவெண் குடையும் இன்றி,
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் இரங்கி ஏக [று
மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வருமென்றென்
தழைக்கின்ற உள்ளத்தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்"

தனக்குரிய பெரிய அரசுரிமையை இழந்து போவதற்குக் காரணமாய் நின்ற பரதனைச் சிறிதும் இகழாமல், அவனை இராமன் மிகப் புகழ்ந்து போற்றுகிறான். என்ன வியப்பு!

"புனைந்திலன் மௌலி, குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன், என்கொல்? என்னும் ஐயத்தாள் நளினபாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென்! இடையூ றுண்டோ? நெடுமுடி புனைதற் கென்
[றாள்.

இராமனது அருங்குணங்களைக் காட்டிலும் வியப்பாகத்தான் இருக்கிறது கோசலையின் உணர்வும்

மறுமொழியும். வாட்டம் சிறிதுமில்லாமல் "பரதன் நிறை குணத்தவன்; உன்னைவிடச் சிறந்தவன்; குறைபாடு எதுவுமில்லாதவன். உன் தந்தையின் கட்டளைப்படி நடப்பதே உனக்கு அறமாகும். ஆதலால் நீ அரசுரிமையைத் தம்பிக்குக் கொடுத்துவிடு. மகிழ்ச்சியோடு வனத்திற்குச் செல். சிரஞ்சீவியாய் வாழ்ந்திடு" என்கிருள் கோசலை. கம்பன் பாடல்களைப் பாருங்கள் :

" மங்கை அம்மொழி கூறலும், மானவன்
செங்கை கூப்பிநின் காதல் திருமகன்
பங்கமில் குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்ருன் என்ருன் "

" முறைமை யன்றென்ப தொன்றுண்டு; மும்மையின்
நிறை குணத்தவன், நின்னினும் நல்லனல்,
குறைவி லன்னெனக் கூறினன் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றுவாள் "

" என்று பின்னரும் மன்னவன் ஏவியது
அன்றெ னுமை மகனே ! உனக்கறன் ;
நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்து
ஒன்றி வாழுதி ஊழிபல என்ருள்."

கோசலை பரதனைப் பாராட்டுவது மானிட இயற்கையை விஞ்சியிருக்கிறது. என்ன உயர் பெருந்தன்மை!

இராமன் காட்டிற்குச் செல்லுவதும் நன்மைக்கே எனச்சொன்னதும் கோசலை உள்ளம் பதைக்கிருள். மகனை அணைத்துக்கொண்டு புலம்புகிருள் :

" ஆங்கவ் வாசகம் என்னும் அனல்குழை
தாங்கு தன்செவி யில்தொட ராமுனம்
ஏங்கி னுள்;இளைத் தாள்;திகைத் தாள்;மனம்
வீங்கி னுள்;விம்மி னுள்;விழுந் தாளாரோ "

பின்னர், கோசலை உள்ளத்துயருடன் கைகேயியின் மாளிகையுள் நுழைந்து தசரதனைப் பார்க்கிறாள். அவன் உயிர் பதைத்து உணர்வற்றுக் கிடக்கிறான். அவள் உள்ளங்குலைந்து உருகி வீழ்ந்து விடுகிறாள்.

" நடந்த கோசலை கேகய நாட்டிறை
மடந்தை கோயிலை எய்தினள் மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டுயிர்
உடைந்த போதின் உடன்விழுந் தென்னவே "

இனி, மன்னன் முடிவைக் கண்டதும் கோசலை துடித்த நிலையைப் பார்ப்போம்.

" இருந்த அந்தணனோ டெல்லாம் ஈன்றவன் தன்னையினைப்
பெருந்தவம் செய்த நங்கை கணவனிற் பிரிந்து தெய்வ
மருந்திகழ் தவரின் விம்மி, மணிபிரி அரவின் மாழ்கி,
அருந்துணை பிரிந்த அன்றிற் பெடையென அரற்ற லுற்
றாள். "

பின்னும்,

" வானநீர் சுண்டி, மண் அறவற்றி மறுகுற்ற
மீனே என்ன மெய்தடு மாறி விழுகின்றாள். "

அவலக் காட்சியைக் கவிஞன் வருணிக்கிறான். கணவன் மேல் விழுந்து கோசலை புலம்பிக் கொண்டிருக்கும்போது கைகேயி அங்கு வருகிறாள். அவளைக் கண்ட கோசலை,

" பிடித்தாய் வையம் பெற்றனை பேராவரம் ; இன்னே
முடித்தாய் அன்றே மந்திரம் ! "

என வயிறெரிய நெஞ்சில் துயரொடு பேசுகிறாள் ; ஆனால் கைகேயியைப் பற்றி யாதொரு தீச் சொல்லையும் சொல்லவில்லை. இங்குக் கூறிய செய்திகளால்

கோசலைக்குத் தன் நாயகன் மீதிருந்த காதல், அவனைப் பிரிந்தமையால் அவளுக்கு ஏற்பட்ட சோகம், சககளத்தியின் அடாத செயல்களைப் பொறுத்துக் கொண்டு, அவளிடத்துத் தகவுடன் நடக்கும் அவள் பெருந்தன்மை ஆகிய இத்தகைய உயரிய பண்புகள் தெரியவருகின்றன.

தன் மாமன் வீட்டிற்குச் சென்றிருந்த பரதன் வந்து சேருகிருன்; நிகழ்ந்தவற்றை அறிகிருன்; நெஞ்சங் கொதித்துத் தன் தாயைப் பலவாருக ஏசுகிருன்; கோசலையின் அடிகளைத் தொழுகிருன்; அவனுடைய துயர நிலையை நோக்கி, ‘இவன் மிகவும் புனிதமானவன்’ என்று தெளிந்து, அவனை மார் புறத் தழுவிக் கோசலை ஆறுதல் கூறுகிருள்:

> “புலம்புறு குரிசில் தன் புலர்வு நோக்கினள்
> குலம்பொறை கற்பிவை சுமந்த கோசலை
> நிலம் பொறை ஆற்றலன் நெஞ்சம் தூய்தெனச்
> சலம்பிறி துறமனந் தளர்ந்து கூறுவாள்”

இப்பாடலில் கோசலையின் நற்பண்புகள் அனைத்தையும் சுருக்கமாகக் கவிஞன் கூறியிருக்கிருன். குலமும் பொறையும் கற்பும் ஒன்றுகூடி உருவெடுத்து வந்திருக்கின்றனவாம் கோசலையாக.

தூய்மையான கங்கைநதி; வெண்ணிறமான தண்ணீர்ப்பெருக்கு பரந்து நெகிழ்கின்றது. அந் நீர்நிலையில் அழகியதோர் தோணி. அதன்மேல் ஓர் அரச குடும்பம். தாய்மார் மூவர்; சேய்கள் இருவர். படகை ஓட்டிச் செல்கிருன் ஒரு தோணித் தலைவன். ஆற்றின் வடகரையிலிருந்து தெற்கு

நோக்கி நாவாய் நகர்ந்து வருகின்றது. குகன் மாசு படிந்த மதிபோல் இருந்த கோசலையைக் கண்டான். கைகள் மேலெழுந்து குவிந்தன. அருகே இருந்த பரதனை நோக்கி 'இவர் யார்?' என்று கேட்கிருன். அதற்குப் பரதன் 'இவர்தான் தசரதனின் முதல் தேவி, இராமனின் தாய்' என்று கூறுகிருன். கம்பன் பாடலைப் பார்ப்போம்:

"சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலையைத்
தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலவர் ஆரென்று குகன்வினவ
வேந்தர் வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகும் ஈன்ருனை
முன் ஈன்ருனைப்
பெற்றத்தால் பெறுஞ்செல்வம் யான்பிறத்த லால்துறந்த
பெரியாள் என்ருன்"

'சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலை' என்றது எவ்வளவு உயர்ந்த பதவி! இதில் கோசலையின் சிறப்பு எவ்வளவு தெளிவாகிறது!

இதன் பின்னர் கோசலை குகனைச் சுட்டிக்காட்டி "இவன் யார்?' என்று கேட்கிருள். அதற்குப் பரதன் தரும் பதிலைப் பாருங்கள்:

"என்றலுமே அடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை
இவன்யார் என்று
கன்றுபிரி காராவின் துயருடைய கொடிவினவ
கழற்கால் மைந்தன்
இன்றுணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகன்என்பான்
இந்நின்ற குரிசில் என்ருன்"

இங்ஙனம் குகன் அறிமுகப்படுத்தப்பட்டவுடனே கோசலை என்ன செய்கிருள்? "பிள்ளைகளே இனி மேல் மனங்கலங்கவேண்டாம். உங்களுக்கு ஒரு குறையும் வராது. இராமன் வனம் புகுந்ததும் நல்லதேயாயிற்று. குகனுகிய இவனெடு நீங்கள் ஐவருமாய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்துக் காத்துவருவீர்களாக" என்று மகிழ்ச்சியோடு ஆசி கூறுகிருள்.

"நைவீரலீர் மைந்தீர்! இனித்துயரால் நாடிறந்து
காடுநோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற் ருமன்றே
விலங்கற் றிண்தோள்
கைவீரக் களிறனைய காளையிவன் தன்னேடு
கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம்
அளித்திர் என்ருள்"

தன் பிள்ளைக்கு நல்ல துணைவன் என்றவுடனே கோசலை மகிழ்ந்து, பரதனேடு குகனையும் மகனுக அணைத்துப் பேசுவது அவளுடைய உள்ளப் பண்பை யும் உயர்ந்த நோக்கத்தையும் வெளியிடுகிறது. கோசலை 'நெடுநிலத்தை ஆளுதிர்' என்று சொல்லாமல், குடிமக்களுக்கு நன்மைபுரிந்து அவர் களைக் காத்திடுவீர் எனப் பொருள்பட 'அளித்திர்' என்கிருள். என்ன பெருநோக்கு!

பரதன் அயோத்தியை ஆட்சிபுரிந்து வருகிருன். தன் அண்ணன் வனத்தில் வசிக்க வேண்டிய காலம் முடிகிறது. எல்லை செய்திருந்த அந்நாளிரவு முழு

வதும் எதிர்பார்த்திருக்கிருன் பரதன். ஒருவரும் வரக் காணவில்லை. திடீரென்று இரவில் நகர மக்கள் அனைவரும் அழ ஆரம்பிக்கிருர்கள். அந்த அபாய ஒலி அந்தப்புரத்திலிருக்கிற கோசலையின் செவியில் விழுகிறது. அவள் தலைவிரி கோலமாய் விரைந்தோடி வருகிருள். பரதனைக் காணும். வெறி பிடித்தவள் போல் ஓடுகிருள். ஊரின் வடகீழ்த் திசையில் ஒரு வெட்ட வெளி. அதில் ஒரு தீக்குழி. அதில் பாய்ந்து உயிர் நீக்கப் பரதன் துணிந்து போயிருக்கிருன். அவனைச் சந்திக்கிருள் கோசலை. உடனே பரதன் ஓடி வந்து அவள் அடியில் விழுந்து தொழுகிருன். அவனை கோசலைத் தழுவிப் பிடித்துக்கொண்டு "ஐயோ! என் அருமை மகனே! என்ன செய்யத் துணிந்தாய்? சரியாக எண்ணித் துணிந்தாயா? உன் செயலால் உலகம் முழுவதும் அழிந்து போகத்தான் வழி தேடுகிருய். எண்ணில் கோடி இராமர்களைச் சேர்த்து வைத்தாலும் உன் அருள் நீர்மைக்கு நிகராகமாட்டார்களே! பற்றே துன்பத்திற்கெல்லாம் காரணம். ஆதலால் அதை அடியோடு ஒழித்துவிடு" என்று மகனுக்கு ஆறுதல் கூறுகிருள் :

"மன்னி ழைத்ததும் மைந்தன் இழைத்ததும்
முன்னி ழைத்த விதியின் முயற்சியால்
பின்னி ழைத்ததும் எண்ணிலப் பெற்றியால்
என்னி ழைத்தனை என்மகனே! என்ருள்"

"எண்ணில கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல்! நின்னரு ளுக்கரு காவரோ?
புண்ணி யம்மெனும் நின்னுயிர் போயினல்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?"

" இறக்கை யுஞ்சிலர் ஏகலும் மோகத்தால்
பிறக்கை யும்கடன் என்றுபின் பாசத்தை
மறக்கை யும்மக னேவலி யாவது
துறக்கை தானும்என் றுள்மனம் தூய்மையாள் "

இப்பாடல்களின் சொல் பொருள் நயங்களைச் சிந்தித்துப் பாருங்கள். தன் வயிற்றில் பிறந்த பிள்ளையாகிய இராமன், அரும்பண்புகள் அனைத்தும் நிறைந்தவன். அத்தகைய பல கோடி இராமர்களை ஒருங்கு திரட்டி வைத்தாலும் பரதனது அருள் நீர்மைக்கு நிகராகார் என்று சொல்ல வேண்டுமானல், கோசலையின் தாய்மைதான் எவ்வளவு சிறந்தது! உயிர் நிலையாமையைப் பற்றிக் கூறுமிடத்து அவள் பரதனுக்கும் அவன் மூலமாக நம் அனைவருக்கும் தத்துவ உபதேசஞ் செய்கிறுள். பரந்த மனநிலை, ஞான நலம், உற்றவர்க்கு உறுதிகூறும் திறம் ஆகிய குணங்கள் நிறைந்த செல்வி கோசலை என்பது இப்பாடல்களால் நன்கு தெரிகிறது.

# 6. கலைப்பெருங் கோயில்

தமிழ் நாட்டில் எங்கும் அமைதியும் செழிப்பும் இன்பமும் நிறைந்திருந்த காலத்தில் ஜைன மதம் தழைத்தோங்கி யிருந்தது. அப்பொழுது மத்திய இந்தியாவில் ஓர் அரசன் ஆண்டு வந்தான். வயது நிறைந்த அவ்வரசனுக்கு இரு பெண்களிருந்தனர்; மிக்க அழகு நிறைந்தவர்கள். அவர்களுடைய புன் முறுவலுக்காகத் தங்கள் உயிரையே தியாகஞ் செய்ய வும் எத்தனையோ இளவரசர்கள் தயாராயிருந்தார்கள். அம்மங்கையர் அழகு வாய்ந்தவர்களாக இருந்தது மட்டுமன்றி, சங்கீதத்திலும் நாட்டியத்திலும் மிக்கத் திறம் படைத்தவர்கள். இவ்வரசனின் தங்கை யொருத்தி அடுத்த நாட்டில் வசித்து வந்தாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள். பெரியவன் ஓவியந் தீட்டுவதில் மிகச் சமர்த்தன். அவனுடைய கலைத் திறம் வெளிநாடுகளிலும் பரவியிருந்தது. அவனு டைய தம்பி பெரிய கவிஞன் ; அரசியல் நூல்களை நன்கு கற்றவன் ; சிற்பத்திலும் சமர்த்தன். இச் சகோதரர்களிருவருமே மிக அழகு வாய்ந்தவர்கள்.

இங்ஙனமிருக்க, வயதான அரசன் நோய்வாய்ப் பட்டான். நாட்டில் மக்கள் மிக்க வருத்தமுற்றனர். ஆனால் அவன் தங்கையின் புதல்வர்களுக்கு மட்டும் உள்ளூர மகிழ்ச்சி ஏற்பட்டது. அரசன் இறந்தவுடன் அவனுடைய பெண்களைத் தாங்கள் மணந்து கொள்வ தென்றும், நாட்டைப் பிரித்துக் கொள்வதென்றும் யோசிக்கத் தொடங்கினர். அரசன் இவ்விரு சிறுவர்

களையும் தன்னிடம் அழைத்து, "என் பெண்களுடைய உருவங்களை அழகாக வரைந்து வர்ணந் தீட்டவேண்டும். எத்தனை யாண்டுகள் சென்றாலும் அப்படங்கள் சிறிதும் கெடாமலும் வர்ணங்கள் சிறிதும் அழியாமலும் இருக்கவேண்டும். இதுவே என் கடைசி ஆசை. இதை நீங்கள்தான் நிறைவேற்றி வைக்க வேண்டும். அப்படங்கள் வரைந்து முடிந்த பின்னர் அவற்றைப் பார்த்து விட்டுத்தான் உயிர் துறப்பேன். இக்காரியத்தைச் செய்து விட்டீர்களானல் பிறகு என் பெண்களை உங்களுக்கு மணஞ் செய்து கொடுப்பேன்" என்று கூறினன். இது கேட்ட அச்சிறுவர்களிருவரும் தெற்கு நோக்கிப் புறப்பட்டார்கள்.

வர்ண இரகசியம் அறியப் புறப்பட்ட சிறுவர்கள் பல மலைகளையும் காடுகளையும் ஆறுகளையும் கடந்து, பின்னர் ஒரு மலைநாட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு ஊர்களொன்றுமில்லை. ஆங்காங்கே இருந்த குகைகளில் சில ஜைன முனிவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மிகவும் அன்புடன் அச்சிறுவர்களை வரவேற்று உபசரித்தார்கள். சில நாட்களுக்குள் இச்சிறுவர்களது கலைத்திறனை யறிந்த ஜைன முனிவர்கள் அவர்களைப் பலவாருகப் பாராட்டிப் பேசினர்கள். அவர்களுள் மூத்தவனை ஜைனர் தலைவன் அழைத்து, "இங்கு ஒரு குகையிருக்கிறது. அதில் நான் சொல்லுகிறபடி சில படங்களைத் தீட்ட வேண்டும். உனக்கு வேண்டிய கருவிகள் அனைத்தையும் கொடுக்கிறேம். வர்ணக் குழம்பும் கொடுக்கிறேம். ஆனல் உன் கண்களை இறுகக் கட்டி விடு

வோம். படங்களையெல்லாம் எழுதி முடித்ததும் உனக்கு இவ்விடத்திற்கு அருகேயுள்ள அரசனிடம் ஒரு பெரிய வேலை வாங்கித்தருகிறேன். உனக்கு வேண்டிய அளவு சன்மானமும் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொல்லி அவனை ஒரு குகைக்குள் அனுப்பிவிட்டான். அவனுடைய இளைய சகோதரன் குகைக்குள் செல்ல அனுமதிக்கப்பட வில்லை. குகையைச் சுற்றிக் கடுங்காவல் ஏற்பாடாயிருந்தது.

இப்படி ஓராண்டு கழிந்தது. இதற்குள் வெளியிலிருந்த சிறுவன் குகையின் இரகசியத்தைப் பற்றியும், அதற்குள் செல்லும் வழியையும் எப்படியோ அறிந்து கொண்டான். சரியான சமயம் பார்த்து உயிரையும் மதியாது குகைக்குக் காவலிருந்த முனிவர்களை ஏமாற்றி விட்டு அக்குகையின் வாயிலை அடைந்தான்; உள்ளே பார்த்தான். தன் சகோதரன் இறுகக் கட்டிய கண்களுடன் படங்கள் வரைவதையும், அக்குகையின் ஒரு மூலையில் எலும்புந் தோலுமாயிருந்த ஒரு ஜைன முனிவன் பல மூலிகைகளைப் பிழிந்து வர்ணங்களைத் தயாரித்துக் கொண்டிருப்பதையும் கண்டான்; உணவுகூட இல்லாமலே இரண்டொரு நாட்கள் அங்கேயே காத்திருந்தான். உள்ளேயிருந்த முனிவன் சில மூலிகைகளைக் கொண்டுவர குகையை விட்டு வெளியே சென்றான். அச்சமயம் பார்த்து வெளியிலிருந்த சிறுவன் குகைக்குள் புகுந்தான்; உள்ளே கிடந்த மூலிகைகளையும் வர்ணப் பொடிகளையும் பத்திரமாக எடுத்துக்கொண்டான். தன் சகோதரனுடைய கண்களை அவிழ்த்துவிட்டான்; அவனை

அழைத்துக் கொண்டு வெளியே ஓடிவிட்டான். வர்ண இரகசியம் வெளிப்பட்டுவிட்டது.

யாருக்கும் தெரியாமல் முள்ளிலும் கல்லிலும் ஓடித் தங்கள் நாட்டை அடைந்தார்கள், இருசகோதரர்களும். தலைநகரத்தின் மதிற் கதவுகள் திறந்து கிடந்தன. உள்ளே பார்த்தால் அமைதியைக் காணோம். தாங்கள் முன்னர் இருந்த நாடுதானு அது என்று சந்தேகிக்க வேண்டியிருந்தது. ஜனங்கள் அழுகையும் ஓலமுமாய்த் தெருக்களில் ஓடிக் கொண்டிருந்தனர். சில வீடுகள் பற்றி எரிந்து கொண்டிருந்தன. இன்னுஞ் சிலவற்றில் போர்வீரர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். இவையெல்லாம், நாட்டிற் புகுந்து வெற்றி கொண்ட சாளுக்கிய சேனைகளுடைய அட்டூழியம்.

பரபரப்புடன் இரு சகோதரர்களும் அரண்மனைக்குள் புகுந்து பார்த்தனர். கோரமான காட்சியொன்று. அந்தப்புரத்தில் ஒரு கட்டிலில் இரு அரச குமாரிகளும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்ட வண்ணம் கிடப்பதைக் கண்டனர். அருகிற் சென்று உயிரற்ற அவ்வுடல்களையும் அவற்றைச் சுற்றியிருந்த இரத்த வெள்ளத்தையும் கண்டு இளைஞர்கள் மூர்ச்சையாயினர். பிறகு அக்கட்டிலருகே கிடந்த கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்ததைக் கண்டனர்: ''எங்கள் தாயாரும், அத்தையும் சாளுக்கிய சேனையால் கொலையுண்டனர். அச்சேனைத் தலைவன் எங்களைக் கற்பழிக்க முயன்முன். மானத்தைப் பெரிதெனக் கருதிய நாங்கள் தற்கொலை புரிந்து கொண்டோம்.''

அதன்பின் உலகில் ஆசையற்றவர்களாய் வாழ்வில் நம்பிக்கையற்றவர்களாய்ப் பித்துப்பிடித்தவர்கள் போல் இளைஞர்கள் இருவரும் தெற்கு நோக்கி நடக்க ஆரம்பித்தனர். கண்ணீர் விடுவது நின்றபாடில்லை. மனம் நோவதும் நிற்கவில்லை. இவ்வாருகப் பல மாதங்கள் நடந்து, பின்னர் தமிழ் நாட்டின் ஒரு பகுதியை அடைந்தார்கள். தாங்கள் கண்டு நுகர்ந்த அனைத்தையும் நிலைபெற்ற ஓவிய வாயிலாக வெளியிட வேண்டுமென்றே எண்ணம் அவர்களுக்கு மேலிட்டது. மனித சஞ்சாரமே இல்லாத ஒரு பாறையைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டு, அங்கு ஒரு கோயிலைச் செதுக்கி யுருவாக்க ஆரம்பித்தனர். இளைய சகோதரன் கோயிலமைக்கும் வேலையை மேற்கொள்ள, முதியவன் அக்கோயிலின் சுவர்களில் ஓவியந் தீட்டும் பணியை மேற்கொண்டான்.

கோயிலும் முடிந்தது. மேற்கூரையிலும், சுவர்களிலும் தூண்களிலும் தாங்கள் கண்ட காட்சிகளையும், வாழ்ந்த வாழ்வையும், எதிர்பார்த்திருந்த இன்பத்தையும் மிக அழகாக அவர்கள் ஓவியத்தின் வாயிலாக வெளியிட்டார்கள். கோயிலின் இரண்டு முகப்புத் தூண்களிலும் தாங்கள் கண்ட, நுகரவிருந்த எழிலுருவங்களைச் சமைத்திருக்கிருர்கள். அவற்றின் அழகிய முகங்களில் ஆனந்தமும் எக்களிப்பும் சேர்ந்து விளையாடுகின்றன. உடலில் நடன பாவம் தோன்றுகிறது. வருடக்கணக்காகச் சிற்பியின் உள்ளத்தில் பதிந்து நின்ற பெண்களின் உருவங்களல்லவா அவை? பெரியதொரு நாட்டின் அரசுரிமை பெற வேண்டி

யிருந்தும் மனத்திலே அமைதி இல்லாமல் ஏதோ நிறைவேறாத சங்கற்பங்களும் பூர்த்தியாகாத மனக் கோட்டைகளும் உள்ளக் கடலிலே கொந்தளித்துக் கொண்டிருந்தும், இவ்வளவு அற்புதமான கலைக் கோயிலை நிறுவ முடிந்ததென்றால், சிற்பக் கலையின் சிருஷ்டித் தத்துவத்தை எண்ணிப் பாருங்கள். இக் கலைக்கோயில் புதுக்கோட்டைக் கருகிலுள்ள **சிற்றன்ன** வாசல் என்னும் இடத்தில் இன்றும் காட்சியளிக்கிறது. கலை நோக்கில்லாத மக்களால் பலவகைகளில் பழுதுபட்ட போதிலும், தமிழர்களுடைய சிற்பப் பண்பாட்டை அது அழகாக எடுத்துக் காட்டிக்கொண்டு நிற்கிறது.

# 7. பஞ்ச பாண்டவ ரதங்கள்

'மஹாபலிபுரம்' என்று தற்போது வழங்கிவரும் ஊரானது, 'மாமல்லபுரம்' என வழங்கி வந்தது. இதற்குக் காரணம், அக்காலத்தில் இவ்வூர் (முதலாம்) **நரசிம்மவர்மன்** என்ற பல்லவ வேந்தனுல் பிரசித்தி யடைந்தமையும், அரசனுக்கு மாமல்லன் என்ற பட்டப் பெயர் இருந்தமையுமே யென்னலாம். ஆழ்வார்களுள் ஒருவரான திருமங்கையாழ்வார் இவ்வூரைத் தம் பாசுரங்களில் பெரிதும் போற்றியுள்ளார். ஆனுல் அவர் 'கடல்மல்லை' என்னும் பெயராலேயே இவ்வூரைக் குறித்துள்ளார் என்பது இங்கே கவனித்தற்குரியது. பின்வரும் பெரிய திருமொழிப் பாசுரம் மல்லையின் சிறப்பைக் கூறும் வகையில் அமைந்துள்ளது.

''சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்
சுவை ஊறு ஒளிநாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் நான்முகன் நாரணனுக்கு இடந்தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி
பல்லவன் வில்லவனென்று உலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங்குகழல்
பல்லவன் மல்லையர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே.''

மாமல்லன் என்பது முதலாம் நரசிம்மவர்மன் என்ற புகழ்வேந்தனது சிறப்புப் பெயர் என்பது ஆராய்ச்சியாளர்களால் ஐயத்திற்கிடமின்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் கி. பி. 691-லிருந்து கி. பி. 726 வரை அரசாண்ட **மானவர்மன்**

என்பானுக்குதவ இரண்டு கடற்படைகளையனுப்பி அவனுக்கு உதவியவனும் இந்த மாமல்லனே என்பது தெளிவு.

பல்லவர்களுக்கு முக்கிய துறைமுகப் பட்டினம் எதுவாய் இருந்திருக்க வேண்டும்? நரசிம்ம வர்மனுக்குத் தலைநகர் காஞ்சி. மாமல்லபுரத்திலுள்ள குகைக் கோயில்களிலும் ரதங்களிலும் நரசிம்மனது இயற்கைப் பெயரோ பட்டப் பெயரோ இன்றும் காணப்படுகிறது. 'மஹாபலிபுரம்' பல்லவர்களுக்கு முக்கிய துறைமுகப்பட்டினமாக இருந்தது என்பதும், குகைக் கோயில்களையும் கற் சித்திரங்களையும் அமைத்து அவ்வூரைப் பெருமைப் படுத்தியவன் மாமல்லன் ஆதலின் அது பிற்காலத்தே 'மாமல்ல புரம்' என வழங்கலாயிற்று என்பதும் இதனால் நாம் அறியக் கிடக்கும் செய்திகள். இதற்கேற்ப யுவான் சுவாங் என்ற சீன யாத்திரீகரும் காஞ்சிபுரம் தென் கடற்கரையிலிருந்த முக்கியமான ஒரு துறை முகப் பட்டினமென்றும், அது சிம்மளத்திலிருந்து மூன்று நாள் பிரயாண தூரத்தில் இருக்கிறது என்றும் கூறியுள்ளார். ஆகவே, அவரால் குறிப் பிடப்பட்டுள்ள காஞ்சித் துறைமுகம் தற்காலத்து மாமல்லபுரம் அன்றி வேறன்று என்பது துணிவு. வாட்டார் (Watter) என்னும் சரித்திரப் பேராராய்ச்சி யாளர் எழுதியுள்ள 'யுவான் சுவாங்' என்ற புத்தகத்திலும் (Vol II Pp. 227) இதேபோன்று காஞ்சிபுரம் தென்னிந்தியாவிலிருந்து சிம்மளஞ் செல்வதற்கு வாயில் போன்றுள்ளதென்றும், காஞ்சி

யிலிருந்து சிம்மளஞ் செல்ல மூன்று நாள் செல்லும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வூரிலேயே பிறந்து வளர்ந்த பூதத்தாழ்வாரும் தம் பாசுரங்களில் இதை மல்லையென்றே குறிப்பிட்டுள்ளார். மாமல்லபுரத்தின் பண்டைச் சிறப்பைத் தெரிவிக்கும் பின்வரும் பாசுரத்தோடு இப்பகுதியை முற்றுவிப்போம்.

> " புலங்கொள் நிதிக்குவை யோடு
> புழைக்கைம்மா களிற்றினமும்
> நலங்கொள் நவமணிக் குவையும்
> சுமந்தெங்கும் நான்றுசிந்து
> கலங்க ளியங்கும் மல்லைக்
> கடன்மல்லைத் தலசயனம்
> வலங்கொள் மனத்தா ரவரை
> வலங்கொள்ளென் மடநெஞ்சே ! "

செங்கற்பட்டிலிருந்து கிழக்கு நோக்கிய பாதையில் ஒன்பது மைல் தூரத்தில் உள்ளது 'திருக்கழுக்குன்றம்' என்ற திருப்பதி. இங்கே வேதகிரீசுவரர் கோயிலும், அக்கோயிலையடுத்துள்ள பாறைமீது நாள்தோறும் நடுப்பகல் பன்னிரண்டு மணிக்கு வந்து நிவேதித்த உணவை அருந்திச் செல்லும் இரு பறவைகளும், மலையடிவாரத்திலுள்ள மூவர் கோயிலும் இவ்வூருக்குத் தனிச் சிறப்பையளிக்கின்றன. இவ்வூரிலிருந்து ஒன்பது மைல் தூரத்தில் கடற்கரையோரத்தில் அமைந்திருக்கிறது மாமல்லபுரம் என்னும் சிற்றூர். சென்னையிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் மூலமாகப் படகுகளிலேறிச் செல்வதற்கும் வசதியுண்டு. கி. பி. ஆரும் நூற்ருண்டு வரை பல்லவ அரசர்களெல்லாம் ஜைன மதத்தைச்

சேர்ந்தவர்களா யிருந்தனர். முதன் முதலாக ஜைன மதத்தைவிட்டுச் சைவ சமயத்தைப் பின்பற்றிய பல்லவன் மகேந்திரன் (600—625) என்பவன். அப்பர் சுவாமிகளின் போதனையால்தான் மகேந்திரன் சைவ சமயத்தைத் தழுவலானுன் என்பது காஞ்சிபுரத்திலும் தென்ஞற்காடு ஜில்லாவிலுள்ள மண்டகப்பட்டு என்னும் கிராமத்திலும் காணப்படும் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. தென்னிந்தியாவில் முதன் முதலாகக் குகைக் கோயில்களைக் கட்ட ஆரம்பித்தது மகேந்திரன் காலத்தில்தான். அதற்கு முன், இங்ஙனம் குகைக் கோயில் அமைக்கும் முறை கோதாவரி, கிருஷ்ணு பள்ளத்தாக்குகளில் பழக்கத்திலிருந்ததென்றும், அங்கிருந்துதான் பல்லவர்கள் இக்கலையைக் கற்றுவந்தார்களென்றும் கூறப்படுகிறது. மாமல்லபுரத்தில் கடற்கரையோரத்தில் எண்ணிறந்த கற்பாறைகள் கிடக்கின்றன. அவற்றில் எங்குப் பார்த்தாலும் குகைக் கோயில்கள், ஒரே கல்லில் செதுக்கிய கோயில்கள், புடைப்புச் சித்திரங்கள், சிற்பங்கள். இங்கே தற்போது காணப்படும் ரதங்கள் எண்ணில் ஐந்தேயாயினும் 'ஏழு பகோடாக்கள்' என்று அழைக்கப்படுகின்றன. பல்லவர்கள் காலத்து இங்கு ஏழு ரதங்கள் இருந்தனவென்றும், பிற்காலத்தே அவற்றில் இரண்டு கடலால் கொள்ளப்பட்டனவென்றும் கூறப்படுகிறது.

தற்போது நமக்குக் காட்சியளிப்பவை ஐந்து கற்கோயில்களே. இவற்றில் ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. இவை முறையே தருமன்,

வீமன், அருச்சுனன், சகாதேவன், திரௌபதி ஆகியோர் பெயரால் அழைக்கப்படுகின்றன. நகுலனும் சகாதேவனும் இரட்டைப்பிள்ளைகளாதலின் அவர்களிருவருக்கும் சேர்ந்து ஒரே கோயில் அமைத்தனர் போலும். இவற்றுள் 'திரௌபதி ரதம்' தனியழகுடன் விளங்குகிறது. அதன் மேற்பரப்பு மிகவும் சிறியது. கிராமங்களில் குடிசைகளின்மேல் ஒடுகளுக்குப் பதிலாக வைக்கோல் போட்டு மூடப்பட்டிருக்குமல்லவா! அதேபோன்று அமைந்துள்ளது இந்த ரதத்தின் மேல்தளம். இந்த ரதத்தின் நாற்சதுர வடிவமான கீழ்ப்பரப்பும், கோயிலும், வளைந்த மேல்தளமும் சேர்ந்து காண்போரைப் பிரமிக்கச் செய்கின்றன. திரௌபதி ரதத்திற்கு அடுத்தாற்போல் தென்திசையில் அமைந்துள்ளது 'தருமன் ரதம்'. இதன் உச்சியில் அறுபக்க வடிவமான மண்டபம் ஒன்று இருக்கிறது. இந்த ரதத்தில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இந்த ரதங்களுக்கான வேலை நரசிம்மவர்மன் காலத்துத் தொடங்கப்பட்டதென்பதும், அவனுக்குப் பின்வந்த முதலாம் பரமேசுவர வர்மன், இரண்டாம் நரசிம்ம வர்மன், ராஜசிம்மன் ஆகியோர் காலத்தில் இவ்வேலை நடந்து வந்ததென்பதும், இவர்களுக்குப் பின்வந்த நந்திவர்ம பல்லவமல்லன் என்பான் காலத்தும் இவ்வேலை முடிவு பெறவில்லையென்பதும் இக்கல்வெட்டுக்களால் அறியவேண்டிய முக்கியமான செய்திகள். மேலே கூறிய அரசர்களில் நந்திவர்மன் ஒழிய மற்றெல்லாருடைய பெயர்களும் இந்த ரதத்தில் காணப்படுகின்றன. தருமர் ரதத்திற்கு

அடுத்தாற்போல் தென் திசையிலுள்ளது 'வீமன் ரதம்'. இதன்மேல் கோபுரம் வளைந்து நீண்ட உருளை வடிவிலிருக்கிறது. இதன் விமானத்தை உற்று நோக்குவார்க்கு, இது புத்த விஹாரங்களின் விமானத்தை ஒத்திருப்பது தெரியும். வீமன் ரதத்திற்கு அடுத்தது 'அருச்சுனன் ரதம்'. இதன் கோபுரம் உச்சியொழிந்த கூருருளை வடிவமானது. இந்த ரதம் பிற்காலத்துத் திராவிடக் கோயில்களைப் போன்று அமைந்துள்ளது. இது இந்த ரதத்தின் தனிச் சிறப்பு. இவ்வாறாக நான்கு ரதங்கள் வடக்கிலிருந்து தெற்காக ஒரே வரிசையில் அமைந்துள்ளன. இவற்றிற்கு மேற்கே தனியாக அமைந்துள்ளது 'சகாதேவன் ரதம்'. இதுவும் வீமன் ரதத்தைப் போன்று பழங்காலத்துப் புத்த விஹாரங்களைப் போல அமைந்துள்ளது. திரௌபதி ரதத்திற்கும் தருமன் ரதத்திற்கும் இடையே சற்றுக் கிழக்கில் அமைந்துள்ளது ஒரு பெரிய சிங்கம். சகாதேவ ரதத்திற்கும் தருமன் ரதத்திற்குமிடையே நிற்கிறது ஒரு பெரிய யானை. இதைப்போல, திரௌபதி ரதத்திற்குப் பின்னே ஒரு பெரிய நந்தி நிற்கிறது. இவ்வாறாக மாமல்லபுரத்தில் காணப்படும் சிற்பங்களில் தனிச் சிறப்புடன் பொலியும் ஐந்து ரதங்களும் திருக்கழுக் குன்றத்தில் வேதகிரீசுவரர் கோயிலில் நிற்போருக்கே தெரியும்படி அமைந்துள்ளன.

## 8. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

தென் பாண்டி நாட்டில் இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த வில்லிபுத்தூர் என்ற ஊரில் பெரியாழ்வார் என்ற வைணவப் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் திருத்துளவ மாலையைத் தொடுத்துத் தினம் அவ்வூர்க் கோயிலின்கண் எழுந் தருளியுள்ள வடபத்திரசாயிக்குச் சூட்டுவதையே பெரும் வழிபாட்டு முறையாகக் கொண்டவர். இதற்கென அவர் ஒரு பூஞ்சோலையை உண்டாக்கி அதை மிகவும் நன்றாகப் பாதுகாத்து வந்தார். இங்ஙனஞ் செய்துவந்த ஆழ்வார் ஒருநாட் காலை அச்சோலைக்குள் நுழைந்தார். நுழைந்தவர் அங்கு நறுமலர்களிடையே ஒரு துளவச் செடியின்கீழ் ஒரு தெய்வ மலரினைக் கண்டார்; கூர்ந்து பார்த்தார் அப்பச்சிளங் குழந்தையை. தெய்வீகத் தன்மையும், சுந்தரவடிவும், கருணையின் வெள்ளமும் ஒருங்கு திரண்டவோ என்று ஒரு கணம் திகைத்து நின்றார்; பிறகு அக்குழவியைக் கையிலெடுத்து உச்சிமோந்து அதைத் தந்தருளிய ஆண்டவனின் புகழை வாயாரப் புகழ்ந்து பாடினார்; ஆனந்தக் கூத்தாடினார். இவ்வாறு உள்ளம் உருகி நின்ற அவரது பக்தி ஒரு புதிய எழிலையும் ஒளியையும் சக்தியையும் பெற்று விளங்கியது.

இங்ஙனம் ஆண்டவனருளால் கிடைத்த அக் குழவியை ஆழ்வார் தம்மில்லத்திற்கு எடுத்துச் சென்று அன்புடன் வளர்த்து வந்தார். அக்குழந்தை

யும் சிறு வயதிலிருந்தே தம் குல வழக்கங்களையும் வைணவ அடியார்களது பக்தியின் பெருமையை யும் நன்கு தெரிந்துகொண்டார். தம் தந்தையார் மலர் மாலைகளைச் சூட்டி எம்பெருமானை மகிழ்விக்கும் அத்திருப்பணி ஆண்டாளின் மனத்தைக் கொள்ளை கொண்டது. ஆண்டவனின் பூசைக்காக வைக்கப் பட்டிருந்த நறுமலர் மாலையை ஆழ்வாரில்லாத சமயம் பார்த்துத் தன் கழுத்தில் அணிந்து, நிலைக் கண்ணுடிமுன் நின்றுகொண்டு "கண்ணன் அழ குக்கு நான் தகுதி உடையவளா?" என்று கருது வாள்; முன்பிருந்த மாதிரியே மாலையைக் கசக்காமல் திருப்பிக் கூடையில் வைத்துவிடுவாள். இப்படி மாலையை அணிவதும் அழகு பார்த்துக்கொள்ளு வதும் 'கண்ணனுடன் கூடிநிற்கும் நாள் என்றோ' என ஏங்குவதும், பின்னர் மாலையையெடுத்துப் பழையபடி கூடையில் வைத்துவிடுவதுமாகப் பல நாட்கள் கழிந்தன. ஆண்டாள் சூடிப்பார்த்த அம் மாலைகளில் முன்னர் இல்லாத ஒரு தனி மணமும் அழகும் பொலியக் கண்ட கோயிற் பூசை செய்வோர் "ஆழ்வாரின் பக்தி முதிர்ச்சியாலன்றோ இம்மணம்! இவ்வெழில்!" என்று ஆழ்வாரைப் பாராட்டிப் பேசினுர்கள்.

ஒரு நாள் ஆழ்வார், தம் அறையில் நுழையும் போது, அங்குத் தம் மகள், ஆண்டவனுக்குச் சூட்ட வேண்டிய மாலையைத் தானணிந்துகொண்டு அழகு பார்த்துக் கொள்வதைக் கண்டார். உடனே அவருக்குக் கோபம் மேலிட்டது. அங்ஙனம் மறு முறை நிகழ்தல் கூடாதெனக் கருதி, அவளைக்

கடிந்துகொண்டார். அன்று அம்மாலையை எறிந்து விட்டுப் புதியதொரு மாலையைக் கட்டிக் கோயிலுக்கு அனுப்பினர். ஆண்டவனுக்கு அப் புதுமாலை மகிழ்ச்சி தரவில்லை. அன்றிரவு எம்பெருமான் ஆழ்வாரது கனவில் தோன்றித் தான் கோதை சூடிக் கொடுத்த மாலையையே விரும்புவதாகவும், கோதை தனக்குப் பூமாலை சூடிக்கொடுக்கவும் பாமாலை பாடிக் கொடுக்கவுமே பூமியில் வந்து அவதரித்திருக்கிருள் என்றும் கூறி மறைந்தார். அன்றே கோதை திரு மகளின் அவதாரம் எனத் தெரிந்துகொண்டார் ஆழ்வார் ; "எம்பிரானுக்குப் பூமாலைச் சூடிக் கொடுத்து என்னை ஆண்டாள் நீயே" என்று கூறி அன்புடன் தன் மகளைத் தழுவிப் பாராட்டினர்.

ஆண்டாளுக்கு வயது பதினன்கு ஆனதும், ஆழ்வார் அவளது மணத்தைப்பற்றி யோசிக்கலானர். "யாரை மணக்க விரும்புகிருய் ?" எனக் கேட்க, "கண்ணனை அன்றிக் கணவன் வேருருவன் எனக்கில்லை" என்று உறுதியாகக் கூறினள் ஆண்டாள். அவள் மார்கழி நோன்பு நோற்றுப் பார்க்கிருள். காமக் கடவுளைத் தன்னைக் கண்ணனுடன் சேர்த்து வைக்கும்படி வேண்டுகிருள். இப்படியாக அவள் நோற்ற நோன்பினையும், விரதம் முதலியவற்ருல் உடலை வருத்தி மனத்தைப் பக்குவப்படுத்தி யிருத் தலையும் அறிந்த திருவரங்கப் பெருமான் அவளை யாட்கொள்ள விழைந்து, தன் கோயிலில் பூசை செய்வோருக்கும் பெரியாழ்வாருக்கும் கனவில் காட்சி யளித்து, தான் ஆண்டாளை மணக்க விரும்புவதாக வும், அவளைத் திருவரங்கத்திற்கு அழைத்துவந்து

தமது திருமுன் சேர்த்து விடும்படியும் கட்டளையிட்டார். ஆண்டாள் ஆழ்வாருடன் திருவரங்கத்திற்குச் சென்று சயனத்திலிருக்கும் ஆண்டவனின் அருகில் நின்ருள். உவகை உந்த, ஆனந்தக் கண்ணீர் பொழிய, மனம் விரைய, ஆண்டவனது ஆன்ம சொரூபத்தைக் கண்டு அவனது அழகிலே ஈடுபட்டு இறைஞ்சி நின்ருள் ஆண்டாள். இரும்பைக் காந்தம் இழுத்தது. ஆண்டாள் ஆண்டவனுடன் இரண்டறக் கலந்தாள். ஒரு சோதி தோன்றி மறைந்தது. விண்ணவர் பூமாரி பொழிந்தனர்; மண்ணவர் இறைவனுடைய பேரருள் கண்டு வியந்து அவன்தாள் தொழுது நின்றனர்.

நம் நாட்டு அறிஞர்கள் பக்தியை இரு பெரும் வகைகளாகப் பிரித்துள்ளனர். ஒன்று, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஆண்டவனை அருவப்பொருளாகவே நினைத்து வழிபடும் முறை. மற்ருென்று, அத்தகைய முழு முதற் கடவுளை உருவங்கொண்டதாக எண்ணி அதற்கேற்ப வழிபடும் முறை. கடவுளை உருவப் பொருளென எண்ணித் துதிக்கும்போது, நாம் அவனிடத்து ஏதேனும் ஓர் உறவு கொண்டாலன்றி அவன்மேல் அன்புகொள்ள இயலாது. நம்முடன் யாதொரு தொடர்புமற்ற ஒரு பொருளைப்பற்றி நாம் எண்ணி இன்புறுவதோ, நேசித்து நலனடைவதோ மனித இயற்கைக்கு ஒவ்வாதது. இதனுல் ஆண்டவனை வழிபடும் ஒவ்வொருவனும் ஆண்டவனுடன் ஏதேனுமொரு தொடர்பை உண்டாக்கிக்கொள்ளுகிருன். இதையே வடமொழியில் ' பாவம் ' என்று கூறுகிருர்கள். இது

முக்கியமாக ஆறுவகைப்படும். அவையாவன: கடவுளைத் தன் (1) எசமான் எனக்கொள்ளுதல், (2) தோழனெனக் கொள்ளுதல், (3) குழந்தையெனக் கொள்ளுதல், (4) பெற்றோரெனக் கொள்ளுதல், (5) கணவனெனக் கொள்ளுதல், (6) காதலன் அல்லது காதலி யெனக் கொள்ளுதல். மேற்கூறிய வழிகளில் கடவுளை நினைத்து வழிபட்ட அடியார்கள் பலர். அவர்கள் தாம் கண்ட பேரின்ப நுகர்ச்சியைப் பிறரும் அறிந்து பயனடையும் பொருட்டுப் பாடிப் போயுள்ள னர். இத்தகைய அடியார்கள் குழுவில் சேர்ந்தவளே ஆண்டாளும்.

ஆண்டாள் கடவுளைத் தனது நாயகனுக்கித் தன்னை நாயகியாகக் கருதி, நாயக பாவத்தால் அவனைப் பக்தி செய்தாள். இங்ஙனம் பரவசமெய்தும் நிலைதான் மிகச்சிறந்தது என்று அறிந்தோர் கூறு வர். மற்ற ஆழ்வார்களுக்கில்லாத தனிப்பெருமைகள் ஆண்டாளுக்குண்டு. ஆழ்வார்கள் அனைவரும் மக்களைத் தட்டியெழுப்பி ஆண்டவனை வழிபட்டு நலமெய்தும் வழியை அவர்களுக்குக் காட்டிப் போந்தனர். ஆனல், ஆண்டாளோ ஆண்டவ னிடத்து நேரே சென்று அவனையே துயிலினின்று எழுப்பித் தன் குறைகளைச் சொல்லி, அவற்றை நீக்கி யருளுமாறு சல்லாபமாகக் கேட்கிருள். மற்ற ஆழ் வார்கள் பக்தியிலே திளைத்து நின்றபோதிலும், தான் வேறு, ஆண்டவன் வேறு, தான் செய்யும் பக்தி வேறு என்ற நிலையிலேயே நின்ருர்கள். ஆனல் ஆண்டாளோ தன்னையும் ஆண்டவனையும் ஒன்ருக் கிக்கொண்டது மட்டுமன்று; இருவரையும் பிணைத்து

வைக்கும் பக்தியும் தானே ஆயினள். வேண்டுவோர் வேட்கையாய், வேட்பாராய், வேட்பாருக்கீண்டு பொருளாய், அதனையீட்டுவதாய் நின்ற பெருமை ஆண்டாளுக்கே உரியது.

ஆண்டாள் சிறுவயதிலிருந்தே கண்ணன்மீது பிரேமை கொண்டிருந்தாள். தான் காணும் காட்சிகளிலும் கேட்கும் இசையிலும் கண்ணனது திருவுருவமும் இன்சொல்லுமே அவளுக்குத் தெரிந்தன. தன் கற்பனைகளில் பல சமயங்களில் கண்ணன் தன்னோடு அளவளாவி மகிழக் கண்டாள்; அந்த நிலையிலேயே கொஞ்சிக் குலாவிச் சல்லாபஞ் செய்து இன்பந்துய்த்தாள். இவளுக்குக் கண்ணனின் பேச்சிலும் செயலிலும் பார்வையிலும் குறுநகையிலும் ஆனந்தம் ஏற்பட்டது. அம்மாயன் அவளுக்குந் தெரியாமல் அவளுள்ளத்தில் புகுந்து கொண்டான். அவனை மறக்கவும் முடியவில்லை; அவனை அடையும் வழியும் தெரியவில்லை. இங்ஙனம் கண்ணனின் காதற் பரவசத்தில் திளைத்தாள் ஆண்டாள். அவள் இயற்றிய நாச்சியார் திருமொழி முழுவதும் இக்காதற் பக்தியின் பெருக்கை வெளியிடும் தனிப்பெரு நூலேயாகும்.

திருமொழியின் ஒவ்வொரு பாட்டிலும் முதலில் மன்மதனை அழைத்துத் தன் உள்ளங் கவர்ந்த கண்ணனுக்குத் தன் மேல் மோகத்தை உண்டுபண்ணச் சொல்லி இறைஞ்சுகிறாள்; தன் நெஞ்சில் அமர்ந்து அருள்புரிய ஆண்டவனை வேண்டுகிறாள்; கோகுலத்தில் கண்ணன் புரிந்த லீலைகளை விவரிக்கிறாள்; அத்

தகைய கண்ணன் தன்னிச்சைக்குக் கட்டுப்படுவான் என்று குறி சொல்லுகிருள்; தான் கண்ட கனவைத் தோழிக்கு உரைக்கிருள்; கரிய மேகங்களை ஒத்த நிறங்கொண்ட கண்ணனிடம் தூதுவிடுகிருள்; இவ்வளவு செய்தும் நெஞ்சு உருகாததால் கண்ணனின் கல்மனத்தை நினைத்து வருத்தங் கொள்ளுகிருள்; கடைசியாகத் தன் முயற்சிகள் பயன் தராவிடினும் அவனிடம் கொண்ட காதல் நிலையினின்றும் பிறழாது, அவனணிந்த மாலைகளையும், உண்ட அமுதினையும், காலடிப் புழுதியையுமாவது அனுப்பி அருளுமாறு வேண்டி நிற்கிருள். அவள் காதலின் உறுதிதான் என்னே! அவளுடைய காதலை ஏற்று அருள்புரிந்த மாயனின் அருள் திறந்தான் என்னே!

ஆண்டாள் தான் கருத்திற்கொண்ட இச்சை நிறைவேற மார்கழிநோன்பு நோற்கிருள். கன்னிப் பெண்கள் தாங்கள் விரும்பும் கணவன்மார்களை அடைய மார்கழி மாதத்தில் நோன்பு நோற்கும் வழக்கம் தென்ருட்டில் ஏறக்குறைய 15 அல்லது 16 நூற்ருண்டுகளாக இருந்து வந்துள்ளது. தன்னை ஆயர்பாடிக் கன்னியர்களில் ஒருத்தியாகவும் வில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும் பாவித்து, ஆண்டாள் மார்கழி நோன்பைக் கடைப்பிடிக்கிருள்; அந்நோன்பின் சில அழகான விவரங்களை நமக்குத் திருப்பாவையின் மூலம் வெளியிடுகிருள். தோழிமார்களை யெல்லாம் நீராட வரும்படி துயிலெழுப்பி அழைக்கிருள். ஒரு சில பெண்கள் பாடிக்கொண்டு ஒரு வீட்டு வாயிலின்முன் சென்று நிற்கின்றனர்.

அந்த வீட்டுப் பெண் பின்னும் உறங்கிக்கொண்டு இருக்கிருள். "நாங்கள் கண்ணனின் பெருமை களைப் பாடுவது உனக்குத் தாலாட்டுவது போலிருக் கிறதா?" என்றும், "கும்பகர்ணன் தோற்றுமுனக்கே பெருந் துயில்தான் தந்தானே?" என்றும் சொல்லிப் பார்க்கிருள்; பரிகசிக்கிருள். "ஓங்கியுலகளந்த உத்தமன்" என்று தொடங்கும் பாடலில் 'எனது காதலன், கார்வண்ணன், இவ்வுலக முழுவதையும் ஓரடியால் அளந்தவன் பேர்பாடிஞல் நாடெங்கும் நீங்காத செல்வம் நிறையும்' என்று பெருமிதம் தோன்றக் கூறுகிருள். பெரியோர் 'திருப்பாவை' என்னும் இவ்வரிய நூலை வடமொழியிலுள்ள உபநிட தங்களின் சாரமென்றும், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி பாடிக் கொடுத்த பனுவல் என்றும் பலபடப் புகழ்ந்து கூறுவர்.

# 9. சாந்தி நிகேதனம்

இரவீந்திரநாத் தாகூர் நம் நாட்டில் தோன்றிய மிகச் சிறந்த கல்வியாளருள் ஒருவராவார். அவருடைய தந்தை தேவேந்திரர் கடைசிக் காலத்தில் தம் இருப்பிடமான போல்பூரைச் சார்ந்த சாந்தி நிகேதனம் என்ற இடத்தில் தனியே இருந்துவந்தார். ரவீந்திரரும் அங்கேசென்று கொஞ்சகாலம் அங்குள்ள வனங்களிடையே அமைதியாக வாழ்ந்து வந்தார். ஆசிரமங்களில் வாழ்ந்து வந்த பெருமுனிவர்களின் வாழ்வைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தார் தாகூர். அடர்ந்த காடுகளிடையே அல்லவா ஆசிரமங்களை அமைத்துக்கொண்டு, சீடர்களுக்கு உயர்ந்த தத்துவங்களைப் போதித்து வந்தார்கள் பண்டை நாட்களில்? இவ்வெண்ணம் தோன்றவே, தாகூர் தாமும் ஒரு நல்ல கல்விச்சாலையை நிறுவவேண்டும் என்று முடிவு செய்துகொண்டார்.

தாகூருக்கு, தாம் சிறு பிள்ளையாயிருக்கும்போது கிடைத்த பள்ளிப் படிப்பில் மிகுந்த அதிருப்தி உண்டாயிற்று. அவருக்குப் பள்ளி வாழ்க்கை அறவே பிடிக்கவில்லை. அது அவருக்குச் சிறை வாழ்க்கையைப் போலத்தான் இருந்தது. இயற்கையின் அழகில் ஊறித் திளைக்கும் சுதந்திர வாழ்க்கையையும் உற்சாகத்தையும் பள்ளி வாழ்வு அறவே அழித்துவிட்டது. தன்னையொத்த பிள்ளைகளிடையே மிகுந்த ஊக்கத்தோடும் மகிழ்ச்சியோடும் பழகுவதை மாணவர்கள்

இயல்பாகவே விரும்புவார்கள். ஆனால் மதிற் சுவர் களுக்குள், இயற்கை இன்பத்தினின்றும் வெளியே, கல்வியின் பெயரால் மாணவர்கள் புத்தங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்வதால் அவர்களுக்கு இயற்கை இன்பம் இல்லாமற் போகிறது. இக்கொடுமையால் மாணவர்கள் சுய உணர்ச்சியை இழந்து, மனத்தை யும் உடலையும் இயந்திரத்தைப் போலப் பழக்குகிறார் கள். இந்தக் கொடுமையைக் கண்டு பயந்த தாகூர், பள்ளியைவிட்டு வெளியேறி விட்டார். இங்ஙனம் தாமே பள்ளிப்படிப்பில் பெரிதும் கஷ்டப்பட்டவராத லால், அவருக்கு ஒரு புதிய முறையில் கல்வி போதிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. சுதந்திர உணர்ச்சி, சுயஅறிவு, நல்ல உடல் வளர்ச்சி, கல்வி யறிவு ஆகியவற்றைப் பெறத்தக்கதும், அப்போதிருந்த பள்ளிகளினின்றும் முற்றிலும் மாறுபட்டதுமான புதுமுறைக் கல்வியை மக்களுக்குத் தரவேண்டும் என்ற அவா அவருக்கு மேலிட்டது.

சிறந்த கல்வியை நம் நாட்டுச் சிறுவர்களுக்கு வனங்களில் அல்லவா போதிக்கவேண்டும்? இதற் கேற்பச் சிறு பிள்ளைகளுக்கென ஒரு பள்ளியை அவர் சாந்தி நிகேதனத்தில் ஆரம்பித்தார். மரங்களின் நிழல் நிறையவேண்டும். ஆசிரியரது இதயங்களில் அன்பு பெருகவேண்டும். இவ்வளவுதான் இவர் ஆரம் பித்த பள்ளியின் மூலதனம். ஐந்தே மாணாக்கர்கள் வந்தார்கள். அவர்கள் வெகு சீக்கிரமே எவ்வளவோ மாணாக்கர்களை அங்குச் சேர்க்க வழிசெய்து விட்டார் கள். புராணக் கதைகளைச் சொல்லிச் சொல்லிக்

குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார் கள் அங்குள்ள ஆசிரியர்கள். இப்படிச் சிறு அளவில் அமைக்கப்பட்ட சாந்திநிகேதனப் பள்ளி இன்று விசுவ பாரதி பல்கலைக் கழகமாய், உலகத்திலுள்ள பல நாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டுறவுடன் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

அங்குள்ள பள்ளி ஓர் ஆசிரமத்தில் அமைந் துள்ளது. அந்தப் பள்ளியிலுள்ள மாணவர்களின் ஒரு நாளைய நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினால் அது உங்களுக்கு ஆசிரமத்தின் உள் அழகினைக் காட்டும். சூரியன் எழுமுன்பே மாணவர்கள் எழுந்து விடுவார் கள். அவர்களில் ஒரு சிலர் முன்பே எழுந்திருந்து கடவுள் வணக்கப் பாடல்களைப் பாடிக்கொண்டு ஆசிர மத்தைச் சுற்றி வருவார்கள். நாம் சிறிது தூரத்தே நின்றுகொண்டு கேட்டால், நிசப்தமான அவ்வேளை யில் அப்பாக்களின் ஒலியும், அங்கு இருப்பதனால் உண்டாகும் மகிழ்ச்சியும் ஆன்மாவிற்குச் சாந்தியை அளிக்கின்றன.

சிறிதுநேரம் கழித்து ஒவ்வொரு மாணவனும் அப் பரந்தவெளியில், ஓர் ஆசனத்தமர்ந்து தனியாகத் தியானம் செய்ய ஆரம்பிப்பான்; பிறகு பள்ளிக்கூடம் கூடுவதற்குள் குளிப்பது முதலான வேலைகளை முடித் துக்கொள்வான். பத்தரை மணி வரையில் மாணவர் கள் பள்ளியில் இருந்து படிப்பார்கள். அவர்களுக்குப் பெரிய வகுப்பறைகள் இல்லை; வானமே கூரை. மர நிழலில் ஆசிரியர்களைச் சுற்றி உட்கார்ந்து கொள் வார்கள். எட்டு அல்லது பத்து மாணவர்கள் ஒன்று

சேர்ந்து ஓர் ஆசிரியரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு கேள்விகள் கேட்பது வழக்கம். ஒரு சில புத்தகங்களையே உபயோகிக்கிறார்கள். சம்பாஷணை முறையிலேயே கல்வி போதிக்கப்படுகிறது. மாணவர்கள் தங்களுக்குள்ள ஐயங்களைத் தெளிவாக ஆசிரியரிடம் எடுத்துச் சொல்வார்கள். ஆசிரியரும் மாணவர்கள்மீது அன்புகொண்டு மாணவர்களுக்குள்ள சந்தேகங்களையும் கஷ்டங்களையும் நீக்க முயல்வார். இத்தகைய கல்வி முறை என்றும் அழிவுறாது.

காலைப்பள்ளி முடிந்ததும் மாணவர்கள் சாப்பிடச் செல்வார்கள். மறுபடியும் இரண்டு மணிக்குப் பள்ளி வேலை ஆரம்பமாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது ஒரு கைத்தொழிலில் பயிற்சி அளிக்கப்படும். கைத்தொழில் அதிகமாகப் பழக்கத்தில் வரவே, சில மாணவர்கள் மர வேலைகளிலும், சிலர் நூற்றல் நெய்தல் முதலியவற்றிலும் தனிப் பற்றுக் காட்டுவார்கள். சிலர் ஓவியத்திலும் இசை முதலான நுண்கலைகளிலும் ஆர்வங்காட்டக் கூடும். அவரவர்களுக்கு ஏற்பக் கல்வியளிக்கப்படும் பள்ளிகள் வெகு சிலவே. அவற்றில் சாந்திநிகேதனப் பள்ளி சிறந்து விளங்குகிறது. நான்கு மணிக்குப் பள்ளி முடிந்தவுடன் எல்லா மாணவர்களும் விளையாட ஓடிவருவார்கள்; சூரியன் மறையும் வரை விளையாடிக் கொண்டிருப்பார்கள். பிறகு எல்லோரும் தியானம் செய்ய நிசப்தமான இடத்தில் உட்காருவார்கள். இராக் காலங்களில் கதை சொல்வதும், நாடகங்கள் நடிப்பதும், குருதேவரது பாடல்களை

ஒப்புவிப்பதுந்தான் பொழுதுபோக்கு. ஒன்பது மணிக்கு எல்லோரும் படுக்கச் செல்வார்கள். மற்றொரு முறை சில மாணவர்கள் பாடிக்கொண்டு ஆசிரமத்தைச் சுற்றி வருவார்கள். மாணவர்களின் சந்தோஷமான வாழ்க்கையை எடுத்துச் சொல்ல இயலாது. அங்குக் கற்கும் மாணவர்களின் முகங்களே அவர்களுடைய மகிழ்ச்சியை எடுத்துரைக்கும். சாந்தி நிகேதன மாணவர்களது சுதந்திர வாழ்வைப் போல இந்தியாவில் வேறெந்தப் பள்ளியிலும் மாணவர்கள் வாழ்வு அமையவில்லை என்று சொல்வது மிகையாகாது.

சுயதேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் மாணவர்கள் வாழ்வு அமைந்துள்ளது. காலையில் தாங்கள் குளிப்பதற்குத் தாங்களே கிணற்றினின்று நீர் இறைத்துக்கொள்ள வேண்டும். தங்கள் படுக்கைகளைத் தாங்களே தயாரித்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் ஆடம்பரமான பொருள்களை உபயோகித்தல் கூடாது. உண்மையில் மாணவர்கள் இதில் மிக்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். அவர்கள் பிற்காலத்தில் செல்வ வளர்ச்சியை விரும்பாதிருக்க, இது பெரிதும் பயன்படும். தாகூரின் வித்தியாலயத்திலே குழந்தைகளின் சுய உணர்ச்சியை வெளிப்படுத்தும் தன்மைக்கு மிகுந்த ஆதரவு அளிக்கப்படுகிறது. இசை, நாட்டியம், ஓவியம் முதலியவை கல்வியில் முக்கியத்துவம் பெறுகின்றன. குழந்தைகள் தாங்களே பத்திரிகைகள் நடத்துவார்கள். தாகூரின் நாடகங்களையோ,

அன்றித் தாங்களே எழுதிய நாடகங்களையோ அன்னார் நடிப்பர்.

பிற பள்ளிகளைப் போலின்றித் தாகூரின் கல்விச் சாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற வேற்றுமை சிறிதும் இன்றி ஒரே குடும்பத்தினரைப் போல வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாசிரம வாழ்க்கையிலே தான் தாகூர் பெரும்பான்மையான பாடல்களை இயற்றினார். அவற்றையெல்லாம் பிரசுரிப்பதற்கு முன், அங்குள்ள குழந்தைகளுக்கு அப்பாடல்களைத் தானே படித்துக் காட்டுவது தாகூரின் வழக்கம்.

# 10. காந்தீயக் கல்வித் திட்டம்

மகாத்மா காந்தியடிகளின் கனவுகளில் சில இன்று நனவாகியிருக்கின்றன. அவரது கல்வித் திட்டத்தை அமுலில் கொண்டுவருதல் நம் கடமை. ஆகவே, கல்வித் திட்டங்களைப் பற்றிய அவரது கருத்துக்களைப் பார்ப்போம். 'ஹரிஜன்' பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்தும், அவரை நன்கறிந்த பெரியார்கள் கூறியுள்ளதிலிருந்தும் நாம் கல்வியைப்பற்றிக் காந்தியடிகள் கண்ட கனவை அறியலாம்.

தற்கால ஆரம்பக்கல்வி பயத்தையும் பொய்ம்மையையுமே குழந்தைகளிடம் உண்டுபண்ணுகிறது. ஆரம்பக் கல்வியால் குழந்தைகள் உபயோகம் அடையாமலிருப்பது மட்டுமன்று; நேரிடையாக அவர்களுக்குத் தீமையே விளைகிறது. அநேக பிள்ளைகள் படித்த பிறகு தங்கள் பெற்றோர்களையும் குடும்ப வேலைகளையும் உதறித் தள்ளிவிட்டுப் போய்விடுகிறார்கள்; கெட்ட பழக்கங்களையும் நகர வாழ்வுக்கான முறைகளையும் கற்றுக்கொண்டு, கல்வியால் உண்டாக வேண்டிய பயனைச் சிறிதும் பெறாதவர்களாக இருக்கிறார்கள். இதே விஷயத்தைப்பற்றிய ஒரிஸா மாகாணத்தில் கல்வி மந்திரியாயிருந்த திரு. விச்வநாததாஸ் என்பாரின் கருத்துக்களைச் சிறிது பாருங்கள்: "தேசீயமாகவும் உபயோகமாகவும் இருந்தாலன்றிக் கல்வி உண்மைக் கல்வி ஆகாது.

தற்போது பள்ளிகளில் வழங்கும் கல்வி தேசீயமாக வும் இல்லை, உபயோகமானதாகவும் இல்லை. இதன் மூலம் மனிதனுக்குள்ள ஆக்க சக்தி அறவே ஒழிந்து போய்விடுகிறது. ஆகவே, பள்ளிகளிலாயினும் சரி, கல்லூரிகளிலாயினும் சரி, ஆக்க சக்தியை வளர்க் கும் வகையில் கல்வி முறை அமைந்திருக்க வேண்டும். நம் மனத்துள்ளே பொதிந்து கிடக்கும் அறிவைத் தூண்டி மனிதனையும் கடவுளையும் நேசிக் கச் செய்ய வேண்டிய கடமை கல்வியைச் சேர்ந்தது. இங்ஙனம் பார்த்தால் தற்போதுள்ள கல்வி முறை, கல்வியின் குறிக்கோளுக்கு ஒவ்வாததாய் இருக் கிறது.''

காந்தியடிகள் கூறுகிறார்:—'' குழந்தையாயினும் சரி, வயது வந்தவனாயினும் சரி, அவனிடத்திலுள்ள சத்துக்கள் அனைத்தையும் — உடல், உள்ளம், ஆன்மா—வளர விடுவது எதுவோ அதுவே கல்வி யாகும். எழுத்தறிவு கல்வியின் குறிக்கோளாக அமைதல் கூடாது. ஊன்றிப் பார்த்தால் கல்வி முறை எழுத்தறிவுடன் ஆரம்பமாவது கூடத் தவறு. ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வி புகட்ட நாம் உபயோகிக்கும் சாதனங்களுள் ஒன்றாகவே எழுத் தறிவைக் கருதுதல் வேண்டும். எழுத்தறிவு மாத் திரம் இருந்தால் கல்வி சிறிதளவும் பெற்றதாகாது.'' இதையே விளக்கிக் கூறும் வகையில் அமைந் துள்ளது அவர் 1937-ம் ஆண்டு அக்டோபர் 11-ம் தேதியன்று 'ஹரிஜனி'ல் எழுதிய கட்டுரை. அதில் பின்வருமாறு கூறப்படுகிறது :—'' குரலை நாம் வசப்

படுத்தி அதைப் பயிற்சி செய்வது, கைகளுக்குப் பயிற்சி கொடுப்பது போன்று இன்றியமையாதது. உடற்பயிற்சி, கைத்தொழில்கள், ஓவியம், சங்கீதம் இவையனைத்தும் இருந்தாலன்றிக் குழந்தைகளின் மனத்தில் உள்ள அனைத்தையும் தூண்ட இயலாது; அவர்களுக்கும் கல்வி கற்பதில் ஆர்வம் உண்டாகாது. இது கைகூட வேண்டுமானுல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இந்தியாவின் வருங்கால மக்களுடைய நல்வாழ்வுக்கு அஸ்திவாரம் போட வேண்டுமானுல், இவை நான்கும் அதற்கு அவசியம். எந்த ஆரம்பப் பள்ளிக்குச் சென்ருலும் சரி, நாம் பார்ப்பது என்ன? சோம்பேறித் தனமும், ஒழுங்கின்மையும், அவசியமில்லாத இரைச்சலுமே குழந்தைகளிடையே காணப்படுகின்றன. பல்வேறு மாகாணங்களிலுள்ள கல்வி மந்திரிகள் கல்வி முறைகளைத் திருத்தி அமைக்கும்போது நான் கூறியுள்ள அடிப்படைக் கருத்துக்களைக் கவனிப்பார்களென்று நம்புகிறேன். நீங்கள் மாத்திரம் அன்னியமொழியின் பாரத்தைக் குழந்தைகள் தோள்களிலிருந்து எடுத்துவிட்டால், நான் ஆரம்பக் கல்வியில் கூறும் மாறுதல் முழுவதும் ஒரு நொடியில் கைகூடும்.''

எழுத்தறிவு கல்வியின் தேவையைப் பூர்த்தி செய்யாதென்ற காந்தீய வாக்கியம் மிக முக்கியமானது. ஆதலால், இதே பொருளைப் பற்றி காந்தியாருடன் நெருங்கிப் பழகிய மஷ்ருவாலா என்ற பெரியார் கூறுவதைப் பார்ப்போம்: ''எழுத்தறிவு முழு அறிவுமாகாது; அதற்குக் கருவியாகவும்

அமையாது. அறிவாலும் சரி, அறிவின்மையாலும் சரி, அதை வெளியிட உதவும் சாதனமாகவே நிற்கிறது எழுத்தறிவு. அறிவின் அடிப்படைக் கொள்கைகள் இருக்குமாயின் பின்பு வேண்டுமானல் எழுத்தறிவு பயன்படும். இங்ஙனம் அறிவின் அடிப்படைக் கொள்கைகளின் மூலம் நம் உள்ளிருக்கும் அறிவூற்றுகளைத் திறந்துவிட்டு, அவற்றை வெளியிட எழுத்தறிவை உபயோகிப்பதே வார்தா திட்டத்தின் நோக்கம். இதற்கு முக்கிய சாதனங்கள் ஆறு. அவையாவன: (1) வேலை, (2) கூர்ந்து கவனித்தல், (3) அனுபவம், (4) பரிசோதனை, (5) சேவை, (6) அன்பு. இவையின்றிப் புத்தகங்களைக் கொண்டு படிப்பது மனிதனின் உள்ளடங்கிய சக்திகளைப் பாழ்படுத்துவதுமல்லாமல் உடலையும் கெடுக்கிறது.''

இதுவரை கூறியவற்ருல் காந்தியடிகள் கல்வியைப் பற்றிக்கொண்டிருந்த அடிப்படைக் கருத்துக்கள் தெளிவாகும். இனி அவர் வெளியிட்ட இரு திட்டங்களைச் சிறிது ஆராய்வோம். 1937-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதிய 'ஹரிஜனில்' காந்தியடிகள் எழுதியதாவது :

(1) அடிப்படைக் கல்வி அல்லது ஆரம்பக்கல்வி ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அமைக்கப்பட வேண்டும். இந்த ஏழு ஆண்டுகளில் இப்பொழுது 10-ம் வகுப்பு வரை சொல்லித் தரப்படும் பாடங்கள் அனைத்தும் (ஆங்கிலம் நீங்கலாக) சொல்லித்தரப்பட வேண்டும். இதோடு

கூடக் குழந்தைகளின் அறிவை வெளியிடுவதற்கென ஏதேனும் ஒரு தொழிலில் பயிற்சி தரவேண்டும். இத்தகைய தொழிற் கல்வி ஆரம்ப, இடைத்தர, உயர்தரப் பள்ளிகள் அனைத்திலும் இடம்பெற வேண்டும்.

(2) இங்ஙனம் பெறும் கல்விக்குப்பின் மாணவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் திறன் படைத்தவனாக வேண்டும். இதுவே உண்மைக் கல்வியை அளக்கச் சரியான சோதனையாகும்.

இவ்விரு திட்டங்களையும் பற்றி அவரே மறு படியும் கூறுகிறார்: இப்பொழுதுதான் மாகாணக் கல்வி மந்திரிகளுடன் கலந்து பேசி, அவர்களுடைய கருத்துக்களை வகைப்படுத்தும் சமயம் எனக்கு வாய்த்திருக்கிறது. ஏனெனில், இந்த மந்திரிகள் அனைவரும் என்னுடன் சுதந்திரப் போராட்டத்தில் உழைத்தவர்கள். ஆகவே, நான் கூறிய இரு திட்டங்களைப்பற்றி நான் நினைக்க நினைக்க எனக்கு அவற்றில் நம்பிக்கை அதிகரிக்கிறது. ஆகவே, நான் சுயநலமற்ற பரந்த நோக்குடைய கல்வி யாளர்களின் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க் கிறேன்.

இந்தத் திட்டங்கள் இரண்டையும் பிணைத்துக் "காந்தீயக் கல்வித் திட்டம்" என்று கூறலாம். காந்தீய திட்டம் ஒரு புதுவழியாகத் தோன்றினாலும், காந்தியடிகளுக்கு அதை எளிதில் நடைமுறையில் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

இதற்குக் காரணம் அவருக்கு இவ்விஷயத்தில் சிறிது நேரடியான அனுபவம் இருந்ததே. இத்திட்டத்தின் வெற்றியில் அவர் பெருநம்பிக்கை கொண்டிருந்தார் என்பது பின்வரும் அவருடைய கூற்றுக்களால் தெளிவாகிறது: "என் திட்டம் புதிதென ஒப்புக் கொள்கிறேன். அதிக அனுபவத்தின் பயனுக இத்திட்டம் வரவில்லையென்றும் நான் அறிகிறேன். ஆனல், நானும் என் நண்பர்களும் இதுவரை அனுபவத்தில் கண்டறிந்ததைப் பார்த்தால் இத் திட்டம் வெற்றிபெறும் என்றே தோன்றுகிறது. இத்திட்டத்தால் அல்லாமல் ஆரம்பக்கல்வியை இலவசமாகவும், கட்டாயமாகவும், பயனுள்ளதாகவும் செய்யமுடியாது. தென் ஆப்ரிக்காவில் டிரான்ஸ் வால் மாகாணத்திலுள்ள டால்ஸ்டாய் பண்ணையில் நான் சிறிது காலம் வேலை செய்தேன். அங்கு நான் சிறு பிள்ளைகளுக்கு முழுக்கல்வி தரவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன். வெகு விரைவில் என் எண்ணம் நிறைவேறியதை அறிந்து மகிழ்ச்சியும் அடைந்தேன். அங்குக் குழந்தைகளுக்கு முழுக் கல்வி தரமுடிந்தது. அப்பண்ணையில் முக்கியத்துவம் தொழிற் கல்விக்கே தரப்பட்டது. அங்குப் பாடத் திட்டத்தில் எட்டு மணி நேரம் கைத்தொழிற் கல்விக் கென்றும், இரண்டு மணி நேரம் ஏட்டுப்படிப்புக் கென்றும் ஒதுக்கப்பட்டிருந்தது. தொழிற் கல்வி யென்பதில் நிலத்தைத் தோண்டுதல், சமையல் செய்தல், அசுத்தங்களை நீக்குதல், செருப்புத் தைத்தல், தச்சுவேலை, செய்தி எடுத்துச் செல்வது ஆகிய அனைத்தும் அடங்கும். அங்குப் பயின்று

வந்த குழந்தைகளின் வயது ஆறு முதல் பதினாறுக் குள்ளிருக்கும்.''

காந்தியடிகள் தென் ஆப்ரிக்காவில் இருந்த போது தம் பிள்ளைகளையும் டால்ஸ்டாய் பண்ணையில் சேர்த்துப் பயிற்சி பெறச் செய்தார் என்பது சிந்தனைக்குரிய விஷயமாகும். இதுகாறும் கூறிய வற்றால் காந்தியடிகள் கல்வியைப் பற்றிக் கொண் டிருந்த கருத்துக்கள், புதுக்கல்வித் திட்டத்திற்கு அவர் தரும் நடைமுறை உதவி, நம்பிக்கையுடன் நடத்தினால் திட்டம் வெற்றி பெறுமென்று அவர் கொண்டிருந்த உறுதி எல்லாம் தெரிகின்றன.

# 11. வாழ்கைத் தரத்தை உயர்த்தும் வழிகள்

நம் நாடு சுதந்திரமடைந்திருக்கிறது. நம் சமுதாயத்தைச் சீர்திருத்தியமைக்க இது ஏற்ற தருணம். கூடிய சீக்கிரம் நன்மை பயக்கும் திட்டங்கள் பல திரட்டி அவற்றைச் சரிவர நிறைவேற்ற வேண்டியது மிக அவசியம். ஆனல் அத்திட்டங்களைத் திடீரெனவோ, பலாத்காரமாகவோ நிறைவேற்றக் கூடாது. பலாத்காரமின்றி அமைதியாக, சாத்வீக முறையிலே அவற்றை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்மீது ஒரு முடிவு ஏற்பட்டால், அம் முடிவிற்கு மாறுபட்ட கருத்துடையோர் சிலர் இருப்பது இயற்கை. ஆகவே, நமது முடிவின் நேர்மையைக் கூடிய வரையில் பொது ஜனங்கள் உணரும்படி செய்யவேண்டும். பொது ஜனங்களின் நல்லெண்ணத்தாலும் ஒத்துழைப்பாலுமன்றி, நாம் அத்திட்டங்களை நிறைவேற்ற முடியாது.

இன்று உலகிலுள்ள எல்லா முற்போக்கு நாடுகளிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற கூக்குரல் கேட்கிறது. சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம் இவற்றில் எக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அமைதியான வாழ்க்கை முறையின் ஒரு முக்கிய அம்சம் வாழ்க்கை

தரத்தை உயர்த்துவதாகும் என்பது தெளிவாக விளங்குகிறது. நாட்டில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயலும்போது, தேசீய வருமானம் ஜனத் தொகை ஆகிய இரண்டு பிரச்சினைகள் நம் முன்னே தோன்றுகின்றன. நமது நாட்டின் இயற்கைச் செல்வங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் ருஷ்யா அல்லது ஆங்கில சாம்ராஜ்ய நாடுகள் ஆகியவற்றின் செல்வங்களைப்போல் அவ்வளவு அதிக மாக இல்லாதிருக்கலாம். ஆனால், நம் தேசத்தின் தேவைகள் மேற்சொன்ன தேசங்களின் தேவைகளை விடக் குறைவாக இருப்பதால், நமது நாட்டின் இயற் கைச் செல்வங்கள் நமக்குப் போதுமானவையாக இல்லையெனச் சொல்ல முடியாது. ஆண், பெண், குழந்தை ஆகிய ஒவ்வொருவருக்கும் நியாயமான குறைந்தபட்சப் பொருளாதார நலம் பயப்பதே திட்டங் களின் முக்கிய அம்சமாக இருக்கவேண்டும். தேசிய வருமானத்தை அதிகப்படுத்த வேண்டுமென்பது இதனை முன்னிட்டேயாகும்.

'எல்லோருக்கும் சரிசமமான சொத்து விநியோ கம்' என்ற கொள்கையை நாம் கடைப்பிடித்தா லொழிய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் குறிக் கோள் கைகூடாதென்பது உண்மையே. நாட்டின் மொத்த செல்வமெல்லாம் நாட்டு முதலாளிகளிடம் குவிந்து கிடக்கிறது. அரசாங்கம் பொது நலனுக் காகச் செய்யும் செலவுக்கு வேண்டிய பணமோ பாமர மக்களின் பாதிவயிற்று வருமானத்திலிருந்து வர வேண்டியிருக்கிறது. இதனால்தான் நாட்டில் வறுமை யும், நகரத்தில் பெருமையும் காணப்படுகின்றன.

இப்படிப் பாதி வயிற்றுக்கும் போதாத வருமான முள்ளவரை கசக்கிப் பிழிந்ததன் காரணமாக நாட்டுக்கலே, வாணிபம், கைத்தொழில், இலக்கியம், சமயம் யாவுமே பாழ்பட்டுப் போயின. ஆனல் இந்தியாவின் இன்றைய பரிதாப நிலேமைக்கு இதை விட முக்கியமான காரணமொன்று உண்டு. அது தான் தேசீய ஏழ்மை. இந்த ஏழ்மையை வேரோடு கல்லியெறிந்தாலொழிய நம் மக்களேச் சமூக வாழ்க்கையில் மாத்திரமன்று, ஆத்மார்த்திக மார்க்கங்களிலும்கூட முன்னேறச் செய்வது இய லாது.

உடல் வியாதிகளேப் போலவே சமூக வியாதி களும் எண்ணிக்கையற்றவை. அவற்றிற்கு வரை யறை கிடையாது. மக்களின் வாழ்க்கைத் தரத்தில் படிப்படியான முன்னேற்ற மின்றித் தொழில்களே இயந்திர மயமாக்குதல் முடியாது. தொழிலாளி களின் கூலியை உயர்த்துவதால் மாத்திரம் அவர் களது வாழ்க்கைத்தரம் உயரும் என எதிர்பார்ப்பது அறியாமை. ஏனெனில், நேர்மையான வாழ்க்கை முறைகளேக் கற்றுக் கொள்ளாவிடில் அதிக ஊதியம் பெற்ருலும் அவர்களுக்கு ஒரு பலனும் ஏற்படாது. உயர்த்தப்பட்ட சம்பளமானது குடி போன்ற வீண் செலவுகளால் விரயம் செய்யப்படலாம். மேலும் மக்கள் சோம்பேறிகளாவதால், அவர்களின் வேலேத் திறனும் குறையும். ஆகவே, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வேலே மிகக் கடினமானதே. இக் குறிக்கோளே அடைவதற்குச் சமூக வாழ்க்கை

யிலும், கல்வி முறையிலும் பலவித சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும்.

நம் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகக் குறைவா யிருப்பதற்கு ஒரு காரணம், நாட்டுச் செல்வமெல் லாம் ஒரு சிலரிடத்தில் தேங்கியிருப்பதே என்பதில் ஐயமில்லை. ஆனால், இதுதான் அடிப்படையான காரணம் என்று சொல்லிவிட முடியாது. ஏனென்னில், நம் நாட்டின் மொத்த வருமானத்தை எல்லோருக்கும் சரிசமமாகப் பங்கிட்டாலும் ஒவ்வொரு மனிதனுக் கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 11 கிடைக்கலாமே யொழிய அதற்குமேல் கிடைக்காது. ஆகவே, தனிப்பட்ட ஒவ் வொரு மனிதனுக்கும் மிகக் குறைவான வருமானந் தானே கிடைக்கிறதென்று சச்சரவு செய்து கொண் டிருப்பதில் பயனில்லை. முதலில் தேசீய வருமா னத்தை அதிகமாக்கிப் பின்பு அதை எல்லோருக்கும் சரிசமமாகப் பங்கிடவேண்டும்.

ஏன் இந்தியாவின் தேசீய வருமானம் இவ்வளவு குறைவாக இருக்கிறது என்ற வினாவிற்குப் பிரபல மேனாட்டுப் பொருளாதார நிபுணர் ஒருவர் “ இந்தியா வின் ஜனத்தொகை மிக அதிகம். நாட்டு வளப்பம் அவ்வளவு ஜனங்களைப் போஷிக்கப் போதாது. ஆகவே, ஜனத்தொகை அதிகமாக இருப்பதுதான் நாட்டின் சீர்கேடான பொருளாதார நிலைக்குக் காரணம் ” என்று விடையளித்திருக்கிறார். அதா வது, இன்று நம் நாட்டிலுள்ள மிதமிஞ்சிய ஜனத் தொகையின் வளமான வாழ்விற்குத் தேவையான செல்வம் நம்மிடத்தில் இல்லை என்பதுதான் அதன்

கருத்து. ஆனால், நமது நாட்டில் உபயோகிக்கப் படாது பாழடைந்துள்ள பரந்த நிலக் கூறுகளை யெல் லாம், உரிய முறையில் பாங்குறப் பண்படுத்தினால் தற்போதுள்ள ஜனத்தொகைக்குங் கூடப் போதுமான உணவுப் பொருள்கள் எளிதில் கிடைக்கும். இந்தி யாவின் அமோகமான தாதுச் செல்வங்கள் சரிவரக் கண்டு பிடிக்கப்பட்டு இன்னும் வெளிப்படுத்தப்பட வில்லை. இரும்பு, பாக்சைட், மைகா, மாங்கனீஸ், யுரேனியம் முதலிய தாதுப் பொருள்கள் பலவும் நம் நாட்டில் ஏராளமாக இருப்பதை நாம் அறிவோம். நம் நாட்டில் கந்தகமும், தாது எண்ணெய்களும் குறைவாகவே கிடைக்கின்றன ; ஆனால், இது ஒரு பெருங் குறையன்று. மிக முன்னேற்ற மடைந் துள்ள நாடுகளுங்கூட இப்பொருள்களை அயல் நாடு களிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளுகின்றன. தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விஞ்ஞான முறைகளையெல்லாம் உபயோகப்படுத்தி விவசாயம் செய்யவேண்டும். நம் நாட்டின் ஏழ்மைக்கு ஜனத் தொகை காரணம் எனக் கூறுவது எவ்வகையிலும் பயன்படுவதன்று. கடந்த இருபது அல்லது இருபத்தைந்து வருடங்களில் நம் நாட்டின் ஜனத் தொகை அதிகமாயுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் 1880-ம் ஆண்டு முதல் 1940-ம் ஆண்டு முடிய இந்த 60 ஆண்டுகளில் நம் நாட்டில் அதிகமாயிருக்கும் ஜனத்தொகையின் சத விகிதம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், இங்கி லாந்து ஆகிய நாடுகளிலுள்ளதைவிட மிகக் குறை வானதே என்ற உண்மையை நாம் ஆழ்ந்து நோக்க

வேண்டும். அங்ஙனம் பெருவாரியாக ஜனத்தொகை அதிகமாகியும் அந்நாடுகள் பொருளாதார முன்னணி யில் நிற்க முடியுமானல், நம் நாடும் தன் நிலையைச் சீர்படுத்திக்கொள்ள இயலாதா?

ஜனத்தொகை திடீரென அதிகமாகலாம் அல்லது சில சமயங்களில் குறையலாம். அது இயற்கையின் நியதி; நம்மால் தவிர்க்க இயலாதது. ஆனல் ஜனத் தொகை விரைவாக அதிகரிக்கும்பொழுது பொருளா தார நிலைமையும் விரிவடைகிறது; முன்னேற்றமடை கிறது. இன்று நாம் அரசியலிலும் பொருளாதார நிலையிலும் ஒரு புது யுகத்தில் இருக்கிறேம். நமது ஒன்றுபட்ட முயற்சியினுல் சிறிது காலத்திற்குள் ஒவ்வொரு குடும்பமும் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை அடையும் அளவுக்கு நம் மக்களின் பொரு ளாதார நலத்தை உயர்த்த வேண்டும். முதலாவதாக, ஏழை இந்தியனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், ஒதுங்க ஓரிடமும் கிடைக்க வேண்டு மானல் அவனுக்கு ஈரமளிக்க முதலாளிகளே நெஞ் சில் ஈரத்துடன் முன்வரவேண்டும். இல்லையேல் சுதந்திர சர்க்காராவது தீரத்துடன் முன்வர வேண்டும். சர்க்கார் மூலமாக முதலாளிகளிட முள்ள பொருள் ஏழையின் குடிலுக்குப் பாய்ந்தோடி வரவேண்டும். இரண்டாவதாக, நாம் அனைவரும் நாட்டு உற்பத்தியைப் பல்லாற்ருனும் பெருக்க முயற்சி செய்ய வேண்டும்; ஆக்க வேலைகளில் ஈடு பட்டு, தேசீய வருமானத்தை உயர்த்த வேண்டும். சிறை வாசமும், மேடைப் பேச்சுகளும் உரிமைகளை வற்புறுத்துவதும் இனித் தேவையில்லை. அவை

முடிந்து வெகு சில நாட்களே கழிந்திருக்கின்றன. இனிமேல் நம் நாட்டு இயற்கை வளத்தை அறிந்து, அதை முழுதும் பயன்படுத்திக் கொண்டு, பல துறைகளிலும் பிற நாடுகள் வியக்க இந்தியா விளங்குமாறு செய்வது நம் மகத்தான கடமை. அன்றட வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு சிறு செயலும் நிச்சயம் பயன்தரக்கூடிய ஆக்க வேலையின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும். நம்முடைய மாபெரும் நாட்டின் இன்பமயமான எதிர்காலம் இவ்வழியில் தானுள்ளது; நம் கையில்தானுள்ளது.

கிருன். தன்னுடைய ஒத்துழைப்பாலும் உதவி யாலும் உருவான சட்டத்திற்கு ஒவ்வொரு தனி மனி தனும் அடங்கி நடப்பதிலேதான் பிரஜையின் சுதந் திரம் அடங்கியிருக்கிறது. ஒருவன் தானுகவே ஒரு சட்டத்தைச் செய்து, அதற்குச் சம்மதித்து நடந் தானேயானுல், சட்டமேயில்லாவிடில் அவன் எவ் வளவு சுதந்திரத்துடன் இருப்பானே அவ்வளவு சுதந் திரத்துடன்தான் இருக்கிருன்.

எல்லோரும் சேர்ந்து வாழும் சமுதாயத்தை உருவாக்குவது அவர்களுடைய சுயேச்சையான ஒப்பந்தந்தான். இவ்வொப்பந்தத்தால் அவர்களுக்கு இருபயன்கள் கிட்டுகின்றன. ஒன்று, இயற்கை யுலகிலும் வாழமுடிகிறது. இரண்டாவது, சமூக உல கிலும் இடம்பெற முடிகிறது. அதிகாரம் ஒரு பக்கம் இருக்கிறது ; அதே சமயத்தில் எல்லோரும் சுயேச்சை யாகத்தான் இருக்கிருர்கள். ஒவ்வொருவனும் தன் இயற்கை உரிமைகளைக் கைவிட்டு இக் கூட்டுச் சமு தாயத்தின் குடிமகனுகிருன். ஆனுல் அவன் சுதந் திரனுகவேதான் இருக்கிருன். ஏனென்ருல் அக் கூட்டுச் சமுதாயத்தில் அவனும் ஓர் உறுப்பே. என் னென்ன நியதிகள் ஏற்படுத்தப்படுகின்றனவோ அவை அனைத்திற்கும் தனி மனிதனின் ஆதரவும், இசைவும் வேண்டியிருக்கின்றன. இப் பொதுவிருப் பத்தில் (General will) ஒவ்வொருவனும் பங்கு கொள்கிருன் ; எனவே, அதற்குக் கீழ்ப்படிந்தாலும் முன்போலவே சுதந்திரனுக இருக்கிருன். இப் பொதுவிருப்பமே அரசு (State); தனி மனிதனுடைய சுதந்திரத்தைத் தன்னுள் அடக்கி அதைக் காக்கிறது.

இக்கூட்டு வலிமையால் தனி மனிதன் பலம் பெறுகிறுன். இயற்கையுலகில் தனித்து வாழ்ந்த போதிருந்ததைவிட அதிக பலம் இப்போது அவனுக்கு உண்டு.

பொதுவிருப்பம் என்பது என்ன? அது தனி விருப்பங்களின் கூடுதல் அன்று. தனி விருப்பங்கள் அவரவருடைய நலன்களேயே பேணுவதாக இருக்கும்; ஆனுல் இப் பொதுவிருப்பம் யாவர்க்கும் பொதுவான நலன்களைப் பேணவே ஏற்பட்டிருப்பது. ஒன்றுக்கொன்று மாறுபடும் நோக்கங்களைத் தனி விருப்பங்களிலிருந்து அகற்றிவிட்டோமானுல், நமக்குக் கிடைப்பதுதான் பொதுவிருப்பம்.

(1) அது பகுக்கக்கூடாததாக இருக்கவேண்டும்; பகுபட்டு விடுமானுல் அது பொதுவிருப்பமாகவோ, கூட்டு விருப்பமாகவோ இருக்க முடியாது. அது சமுதாயத்தின் ஒரு பகுதியின் விருப்பமாகவே இருக்கும். இதனுல் ஒரு பகுதியை இன்னெரு பகுதி கொடுமை செய்வதும் இயலும்.

(2) பொதுவிருப்பம் பிரிக்க முடியாததாக இருக்க வேண்டும். அதாவது, ஒப்பந்தத்தால் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் அதிகாரத்தை அவர்கள் வேறு யாருக்கும் கொடுத்துவிட முடியாது.

(3) இது பிறர் பேருக்கு மாற்ற முடியாதது. எல்லோரும் இடைவிடாது கலந்துகொள்ள வேண்டுமே தவிர, தங்களது சட்டமியற்றும் அதிகாரத்தை வேறு யாருக்கும் கொடுத்துவிட முடியாது.

இவ்வாறு ரூஸோ பிரதிநிதித்வ ஜனநாயகத்தை (Representative Democracy) விரும்பாது, நேர்முக ஜனநாயகத்தையே (Direct Democracy) போற்றுகிறுர்.

பொது விருப்பம் எல்லோரையும் சேர்த்துப் பிணைக்கிறது; எல்லோரையும் சமமாகப் பாவிக்கிறது. எனவே, யாரும் அதன் அதிகாரத்தை எதிர்க்க முடியாது. யாராவது ஒருவர் மாறுபட்டால் என்ன செய்வது? தங்கள் சம்மதத்தைக் கொடுக்கவில்லையென்று ஒருவர் சொன்னுல் என்ன செய்வது? அவர்கள் தவருன எண்ணங் கொண்டவர்கள். எனவே அவர்களைப் பணியச் செய்யவேண்டும்; அதாவது அவர்களை விடுவிக்க வேண்டும். அவர்கள் சுயநலம் கருதியே அவ்வாறு செய்கிருர்கள். ஒப்பந்தத்தை எதிர்ப்பதால் தங்கள் சுகவாழ்வுக்கே அழிவு தேடுகிருர்கள். எனவே, அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

இவ்வாறு கூட்டு யதேச்சாதிகாரத்தை (Collective absolutism) வற்புறுத்துகிருர் ரூஸோ.

இனி ரூஸோவின் கொள்கைகளை ஆராய்வோம். தொடக்கத்திலிருந்தே நுண்மைக்கும் (Abstract) பருமைக்கும் (Concrate) வேறுபாடு காணத் தவறிவிட்டார் ரூஸோ. மனிதத் தன்மையை நுண்பொருளாக நோக்கும்போது, மனிதன் நல்ல சுயேச்சை வாய்ந்தவன் என்றெல்லாம் ரூஸோ சொல்வது உண்மையே. ஆனல் இவற்றின் உண்மை மனிதனின் செயல்களில் நிரூபிக்கப்படவேண்டும்.

மனிதனிடம் நன்மை செய்யும் உதார குணமும், தீமை செய்யும் இழி குணமும் கலந்திருப்பதை நாம் அன்றாட வாழ்க்கையில் காண்கிறோம். மனிதன் வெறுந் தீமையே குடிகொண்டவன் என்று கூறும் 'கால்வின்' தத்துவம் (Calvinistic Doctrine) போலத்தான் இருக்கிறது மனிதன் கலப்பற்ற நற் குணங்களின் இருப்பிடம் என்று கூறுவதும்.

மானிட வாழ்க்கை வாழ்வதற்கும், அதில் முழுமை (Perfection) பெறுவதற்கும் எல்லா மனிதர் களுக்கும் உரிமை இருக்கிறது என்ற பொருளில் எடுத்துக் கொண்டால், மனிதன் சுதந்திரனாகப் பிறக்கிறான் என்ற கொள்கையில் உண்மையிருக் கிறது என்று சொல்லலாம்; தங்கள் மனம்போன போக்கில் நடக்க உரிமை இருக்கிறது என்ற பொரு ளில் அன்று தன் உரிமைகளை எவ்வளவு தூரம் செயற்படுத்தலாம் என்பதைப் பல நியதிகளும், நிலைமைகளுமே நிர்ணயிக்கின்றன. தனி வாழ்க்கை யிலும் சரி, சமூக வாழ்க்கையிலும் சரி, சுதந்திரமும் ஒழுங்கும் (Discipline) உடன் செல்லுகின்றன.

எல்லோருக்கும் மானிட கௌரவம் (Human Dignity) உண்டு; இம்முறையில் எல்லோரும் சமம் என்பது உண்மைதான். ஒவ்வொருவனுடைய கௌர வமும் மதிக்கப்படவேண்டும். இவ்வுரிமை யாவருக் கும் உண்டு. ஒவ்வொருவரும் தனித்தனி முறையில் பிறருக்குச் சமமானவர் என்றால் அதில் உண்மை யில்லை. மகன் தன் தகப்பனுக்கோ, முட்டாள் ஓர் அறிஞனுக்கோ, ஏழை பணக்காரனுக்கோ சமான

1548—7

மானவன் அல்லன். தனி மனிதர்களுக்கிடையே இருக்கும் சம்பந்தம், அவர்களுடைய பரஸ்பர கடமைகளும் உரிமைகளும் ஆகியவை எல்லாம் சமத்துவ மற்றவை; ஆனால் படிப்படியாக அமைந்தவை.

சுயேச்சையையும் அதிகாரத்தையும் ஒன்றுக்குவதற்காகச் சமூக ஒப்பந்தக் கொள்கையை ரூஸோ பயன்படுத்தும்போது, நுண்கருத்தையும் பகுப்பொருளையும் கலந்து குழப்புகிறார். "ஒவ்வொருவனும் தன்னை எல்லோருடனும் பிணைத்துக்கொள்வதால் அவன் தனக்குத்தானே பணிந்து நடக்கிறான்; அதனால் முன்போலவே சுதந்திரனாக இருக்கிறான்." தத்துவத்தின் தர்க்க முறைகளுக்கு ஒவ்வாத முறையில் நுண்மையிலிருந்து பருமைக்கு வருகிறார் ரூஸோ. அதுமட்டுமன்று; ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களும் இதில் காணப்படுகின்றன. ஒரு தனி மனிதன் தன் உரிமைகளையெல்லாம் கொடுக்கவும் கொடுத்துவிட்டு, வைத்துக்கொண்டும் இருக்கமுடியாதல்லவா? ஊன்றிப் பார்த்தால் ரூஸோ குறிப்பிடும் பொது விருப்பம் என்பதே கேள்விக்கிடமானது; அது காணக் கிடைக்காதது. பல சமயங்களில் நமக்குள் ஒற்றுமையைவிட வேறுபாடுகளே அதிகமாக இருக்கின்றன. எனவே, பொது விருப்பம் என்பது எவ்வாறு இருக்க முடியும்? பொது விருப்பம் என்ற பெயரால், பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் ஒரு பயங்கர ஆட்சி (Reign of Terror)தான் நடந்தது!

# 13. பணமும் புகழும்

உண்மை விஞ்ஞானிகளுக்குக் குறுகிய மனப் பான்மை சிறிதும் இராது. அவர்கள் சொந்த இலாபத்திற்காகவோ, தம்மைச் சுற்றியுள்ள ஒரு சிலருடைய நன்மைக்காகவோ, தாம் கண்டுபிடிக்கும் விஞ்ஞான உண்மைகளை உபயோகிக்கமாட்டார்கள். அவர்களுடைய அறிவு மானிட சமூகத்தின் உரிமைச் சொத்து. இதுவே உண்மை விஞ்ஞானியின் பண்பட்ட நோக்கமாகும்.

சாதாரணமாக உலகத்தாரால் 'செல்வம்' எனவும் 'புகழ்' எனவும் போற்றப்படும் இவ்விரண்டும் விஞ்ஞானியின் குறிக்கோள்களில் கடைப்பட்டனவாகும். லூயி அகாஸிஸ் (Louis Agassiz) என்ற விஞ்ஞானியை ஒரு செல்வந்தர் அணுகி "நீங்கள் செய்துள்ள பரிசோதனைகள் எவை? அவற்றின்மூலம் கண்டு பிடித்துள்ள உண்மைகள் எவை? அவ்வுண்மைகள் எங்ஙனம் விவசாயத்திற்குப் பயன்படும்? விவரமாக எழுதிக்கொடுங்கள். நிறையப் பணம் தருகிறேன்" என்று கேட்டாராம். அதற்கு அவர் "பரிசோதனை களைச் சரியாய் செய்து என் வேலையை முடிக்கவே நேரம் இல்லாதபோது உமது பணத்திற்காக எப்படி வேலை செய்வது? உமது பணம் எனக்கு வேண்டாம்" என்று கடிந்து மறுமொழி பகர்ந்தனராம்.

மூன்றும் நெபோலியன் பாஸ்டர் (Pasteur) என்ற ஆராய்ச்சி நிபுணரைப் பார்த்து, "இவ்வளவு ஆராய்ச்சிகள் நடத்துகிறீரே! இதனால் உமக்கு

ஏதாவது இலாபம் உண்டா? இப்படிப் பணஞ் சம்பாதிக்காமல் காலங்கழிக்கும் உம்மைக் காண எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது'' என்று சொன்னார். அதற்கு அவர் "பணஞ்சேர்க்கும் பொருட்டுத் தாம் கண்டுபிடித்துள்ள விஞ்ஞான உண்மைகளை உபயோகிப்பது விஞ்ஞான ரீதியன்று; அது அறிவியலுக்கு ஒவ்வாதது; கீழ்மைப்பட்ட தாகும்'' என்று விடையிறுத்தார். பின்னர் ஒரு நாள் பிரீஸ்ட்லி அம்மையாரிடம் (Lady Priestley) பேசிக்கொண்டிருந்தபோது, "பணத்திற்காக என்னால் வேலை செய்யமுடியாது. விஞ்ஞானத்திற்காக வென்றால் எவ்வளவு வேலையானாலும் சமாளித்துக் கொண்டு செய்வேன். அதில் மகிழ்ச்சி பெறுவேன்'' என்று பாஸ்டர் கூறினாராம். தாம் கண்டுபிடித்த புதிய உண்மைகளை இரகசியமாக வைத்துக்கொண்டு வியாபார நோக்குடன் அவற்றை உபயோகித்திருப்பா ரானால், அவர் உலகிலேயே மிக்க செல்வந்தர்களுள் ஒருவராக இருந்திருக்கலாம். ஆனால் அவ்வுண்மை களை மானிட சமுதாயத்திற்கே உரிமையாக்கி விட்டார். ஆனால், கடைசிவரையிலும் சாதாரண சம்பளத்தில் இரசாயனப் பேராசிரியராயிருந்து ஓய்வு பெற்றார்.

பாரடே (Faraday) ஒரு கொல்லன் வயிற்றிற் பிறந்தவர்; ஒரு புத்தகக் கடையில் வேலைக்கிருந்தவர்; பின்பு தம் சொந்த முயற்சியால் படிப்படியாகக் கற்று விஞ்ஞான ஆராய்ச்சியிற் புகுந்தவர். 'காந்த-மின் ஓட்டத்தைக் (Magneto-electricity) கண்டுபிடித்த வுடன் அவருக்கு ஒரு கஷ்டமான நிலைமை ஏற்

பட்டது. வருடமொன்றுக்குப் பதினையிரம் பவுன் வருமானமுள்ள ஒரு வேலை தருவதாக வாணிப உலகம் ஒருபுறம் அவரை இழுத்தது. "இன்னும் பல உண்மைகளைக் கண்டு உலகத்திற்கு நன்மை செய்யலாம்" என்று சொல்லி ஆராய்ச்சியுலகம் மற்றொரு புறம் அவரை இழுத்தது. இவ்விரண்டில் ஒன்றைப் புறக்கணிக்கவேண்டியிருந்தது பாரடே. வருவாயைச் சமமாகக் கருதி அவர் விஞ்ஞானத்திலே மேன்மேலும் ஈடுபட்டார். சுமார் நாற்பது வருடங்களுக்கு இங்கிலாந்து உலகிலேயே விஞ்ஞானத்தில் தலைசிறந்து விளங்கக் காரணமாயிருந்தவர் பாரடே தான்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த சுரங்கங்களில் அடிக்கடி வாயுக்கள் வெடிப்பதால், பல விபத்துகள் உண்டாயின. சுரங்கவேலைகளில் ஈடுபட்டிருந்த பலருக்கும் திகிலெழுந்தது. இதன் பயனாக 1813-ம் ஆண்டில் சுரங்க விபத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் ஒரு கழகம் நிறுவப்பட்டது. விபத்துகளைத் தடுக்க விலை குறைந்ததும் மிகச் சக்தியுடையதுமான பரிகாரங்களைச் சொல்லுமாறு அக்கழகத்தார் விஞ்ஞானிகளை வேண்டிக்கொண்டனர். பல விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளை நடத்தினர். 1815-ம் ஆண்டில் ஹம்ப்ரீ டேவீ (Humphry Davy) என்பார் ஒரு புது வழியைக் கண்டுபிடித்தார். சுரங்கங்களில் வெளிவரும் ஈரவாயுக்கள் எளிதில் பற்றியெரியும் தன்மையன. ஆனால் இவ்வாயுக்கள் சிறு துவாரங்களுள் புகுந்து செல்வதில்லை. ஆகவே, சுற்றுப் பக்கங்களில் காற்று உள்

புகாதவாறு நன்ருயடைக்கப்பட்டதும், மேற்புறத்தில் பிராணவாயுவை உள்ளே விடச் சிறு துவாரங் களுடையதுமான ஒரு விளக்கை உபயோகித்தால் சுரங்க வாயுக்கள் பற்றியெரிய முடியாது, விபத்துகள் நேரா. இந்த உண்மையை உபயோகப்படுத்தி டேவீ ஒரு புது முறை விளக்கைக் கண்டு பிடித்தார். இந்தப் புது சாதனத்தின் உபயோகவுரிமை (Patent) யைத் தாமே வைத்துக்கொண்டிருந்தாராளுல் அவர் ஏராளமான பொருள் சம்பாதித்திருக்கலாம். அவருடன் பேசிக்கொண்டிருந்த நண்பரொருவர் அவரிடம் "இந்த சுரங்க விளக்கின் உபயோக வுரிமையை நீங்களே வைத்துக்கொண்டிருந்தால் வருடந்தோறும் நல்ல வருவாய் கிடைக்குமே. உலகத்தில் உள்ள பல சுரங்க முதலாளிகள் இதனுல் பயன் பெறும்போது நீர் ஏன் அவ்வாறு செய்யக் கூடாது?" என்று கேட்டாராம். அதற்கு டேவீ "நண்பரே! எனக்கு அத்தகைய எண்ணம் எப்பொழுதும் உண்டாகவில்லை. என்னிடமிருந்து தனக்கு உபயோகமான வொன்றை மனித சமூகம் பெறுமாளுல், அதுவே நான் எதிர்பார்க்கும் கைம்மாருகும்" என்று பதிலளித்தாராம்.

பாரிஸ் நகரிலிருந்த **பாஸ்டர் கழகம்** (Pasteur Institute) என்ற ஆராய்ச்சிக் கழகத்தில் **டாக்டர் ரோ** (Dr. Roux) என்பார் தலைவராயிருந்தார். டிப்தீரியா விஷத்திற்கு மாற்று (Anti Diphtheria Serum) கண்டுபிடித்ததற்காக, **ஆஸிரிஸ்** (Osiris) என்ற பெருஞ்செல்வந்தர் வைத்திருந்த நிதியிலிருந்து அவருக்கு ஒரு பெரும் பரிசு அளிக்கப்பட்டது.

அப் பெரும்பரிசைப் பெற்ற டாக்டர் ரோ பரிசுத் தொகை முழுவதையும் தாம் வேலைசெய்து வந்த கழகத்தின் முன்னேற்றத்திற்கென்றே செலவழித்து விட்டார். இதையறிந்த ஆஸிரிஸ் இதைப்பற்றி வினவியபோது டாக்டர் ரோ "என் விஞ்ஞானத் திறமைக்கு முதற்காரணம் பாஸ்டர் கழகந்தான். இக்கழகத்திலுள்ள வசதிகளால்தான் நான் ஆராய்ச்சிகள் நடத்தி வெற்றிபெற முடிந்தது. தவிர, இக் கழகம் வறுமை நிலையிலிருக்கிறது. இதற்கு எவ்வளவு உதவியளித்தாலும் தகும்" என்று விடையிறுத்தார். ஆஸிரிஸ், தாம் இறக்குந்தறுவாயில் தம்மிடமிருந்த சுமார் பதின்மூன்று இலட்சம் பவுன்களையும் பாஸ்டர் கழகத்திற்கென எழுதிவைத்துவிட்டார். மேலும் அவரெழுதிவைத்த 'உயில்' சாஸனத்தில் டாக்டர் 'ரோ' வின் விஞ்ஞானத் திறமைக்கும் சுயநலமற்ற சேவைக்கும் புகழ்மாலை சூட்டியிருக்கிறார்.

நியூடன் என்ற விஞ்ஞானப் பெரியாரிடம் ஒரு பத்திரிகாசிரியர் சென்று, "தாங்கள் கண்டுபிடித்துள்ள சில கணித நுட்பங்களைப் பற்றி என் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புகிறேன். அனுமதி தர வேண்டும்" என்று கேட்டார். அதற்கு நியூடன் "அனுமதி தந்திருக்கிறேன். ஆனால் என் பெயரை மட்டும் பிரசுரிக்க வேண்டாம். என் பெயர் வெளி வருவதால் சில பெரிய மனிதருக்கு என்னைப்பற்றித் தெரியவரும் என்பதைத் தவிர வேறு உபயோகமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பலரால் அறியப்படுவது என்பது எனக்குப் பிடிக்கவில்லை" என்று பதில் சொன்னார். அப்பொழுது நியூடனுக்கு

வயது இருபத்தேழு இருக்கும். அச்சிறு வயதில் வெளிப்பகட்டை விரும்புவது இயற்கை. ஆனால் நியூடனுக்கு அது வெறுப்பையளித்தது. தானெழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பிரசுரிக்க வைப்பதிலும், தாம் கண்டு பிடிக்கும் உண்மைகளைப் பிறரறிய விளம்பரப் படுத்துவதிலும், அவருக்கு சிரத்தையே கிடையாது. 1668-ம் ஆண்டில் அவர் ஒரு பிரதிபலிக்கும் தூரதரிசினியைக் (Reflecting Telescope) கண்டு பிடித்தார். ஆயினும் அது யாருக்கும் தெரியாமலே இருந்தது. சுமார் மூன்று வருடங்கள் கழித்துத் தம்முடன் நெருங்கிப் பழகிய நண்பர்களின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் அவர் அக்கருவியை ராயல் கழகத்தாருக்கு அனுப்பி வைத்தார். ஓர் ஒளிக்கதிரை கண்ணுடிப்பட்டகத்தின் மூலம் செலுத்தி, அது சிதறுவதைக்கண்ட நியூடன், எளிதில் ஒளியின் தொகுப்புத் தன்மையை ஊகித்து அறிந்தார்; அதற்கான சோதனைகளை நடத்தி அதை நிரூபித்துவிட்டார். ஆனால் 1672-ம் ஆண்டுவரை இவ்வுண்மை விஞ்ஞானவுலகிற்குத் தெரியவேயில்லை. இதேபோல, நியூடனுடைய புவிக்கவர்ச்சித் தேற்றம், அதை அவர் கண்டு பிடித்துப் பல ஆண்டுகள் சென்ற பின்னரே வெளியுலகிற்குத் தெரியவந்தது.

# 14. விஞ்ஞான வாழ்வு

விஞ்ஞான நோக்குடன் உள்ள ஒருவனுக்கு உண்மையின்மீது பேரவா இருக்கவேண்டும். உண்மையைத் தேடிச் செல்வதிலேயே விஞ்ஞானி தன் வாழ்நாளைக் கழிக்கிருன் ; உண்மையை நிலைநாட்டும் பொருட்டு வேண்டுமானுல் உலக முழுவதையுமே எதிர்த்துப் போராடுகிருன். ‘ கூர்ந்து கவனித்துச் சரியாகக் குறிப்பெடுத்துக்கொண்டு நேர்மையாக யோசித்தாலன்றித் திருப்திகரமான முடிவுக்கு வர முடியாது ’ என்பதுதான் விஞ்ஞானி முதலிலிருந்து கடைசிவரை கற்றுக்கொள்வது. உண்மைக்கு மரியாதை செலுத்துவது என்பது அவனுடைய இயற்கைத் தன்மையாகிவிடுகிறது. இக்கருத்தோடு அவன் நடத்தும் ஆராய்ச்சிகள் அவனைத் தூய்மைப்படுத்தி விடுகின்றன. இயற்கையை ஆராய்ந்து புகழ்பெற்ற எவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பார்த்தாலும் உண்மையின்மீது அவர் கொண்டிருந்த பேரவா, பெரு மதிப்பு என்பவற்ருலேதான் அவர் வெற்றியடைந்தாரென்று தெரிகிறது.

கால்வின் பிரபு (Lord Kelvin) ஒரு சமயம் தமது மாணவர்களிடம் பின்வருமாறு சொன்ஞர் : “ பௌதிக, இரசாயன ஆராய்ச்சிகளில் முக்கியமாக மனத்திலிருத்திக் கொள்ளவேண்டியது ஒன்றுண்டு. உண்மை, பாதியுண்மை, பொய்மை என ஐயத்திற்கிடமான வித்தியாசங்களே விஞ்ஞானவுலகில் கிடை

யாது. சோதிக்கப்படும் எதுவும் உண்மையாகவோ, தவருகவோதான் இருக்க முடியும்.''

இயற்கையிலுள்ள உண்மையை அறியவேண்டுமாஞல், முதலாவதாக அம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு உண்மை நோக்கு இன்றியமையாதது. ஆராய்ச்சியாளனெருவன் எதிர்பார்க்கும் முடிவுக்கும் அவனுக்குக் கிடைக்கும் முடிவுக்கும் சற்றும் தொடர்பில்லாமலே போகலாம். அவ்வாறு நேருமாஞல், தான் எதிர்பார்த்த முடிவுக்கு வரவில்லையே என்ற ஏக்கத்தைத் தவிர்த்துத் தனக்குக் கிடைத்த புது உண்மை (முடிவு)களைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும். இவ்விதஞ் செய்வதால்தான் ஆராய்ச்சிகள் சரியாக நடைபெற்று வெற்றிகிட்டும். இவ்விதம் எதிர்பாராது கிடைத்த புதையல்களே விஞ்ஞானச் செல்வத்தின் உயர்ந்த களஞ்சியங்களாகும். பொதுப்பட்ட தத்துவங்களுக்கு முரண்பாடாகத் தென்பட்டாலும் அச்சோதனைகளை நடத்திப் பார்ப்பது சரியாகுமேயன்றி, 'இதுவரை நிலவியிருந்த கருத்துக்களுக்கு மாறுபட்டனவாயிற்றே' என்று மனமுடைந்து சோதனைகளை விட்டுவிடுதல் தவறு.

இயற்கையைப் பரந்த நோக்குடன் அணுகிப் பொதுத் தத்துவங்களுக்கு மாறுபாடான உண்மைகள் வெளிப்படுமாயின், அவற்றையும் தக்கவாறு உபயோகித்துக் கொள்ளும் திறன் படைத்திருந்ததால்தான் சார்லஸ் டார்வின் (Charles Darwin) வெற்றிகரமாக ஆராய்ச்சிகளை நடத்த முடிந்தது. பரிசோதனைகளை நடத்தும்போது தாம் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்

கப் பெருவிட்டால் டார்வின் வருத்தமுறமாட்டார். 'நான் நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்ருயிருக்கிறதே! ஆனால் இதுவும் நன்மைக்கே. ஏதோ ஒரு புதிய உண்மை வெளிப்படுகிறது' என்று சொல்லி வியப்புறுவாராம். தாம் கொண்ட கருத்தைத் தவறென்று ஒருவன் பரிசோதனையின்மூலம் நிரூபித்தாஞல் உடனே அவர் தம் கொள்கையை விட்டெறிந்து, கண்டறிந்த உண்மையை ஒப்புக்கொள்வார். இதுதான் உண்மையைத் தேடிச்செல்லும் விஞ்ஞானியின் இயல்பாக இருக்கவேண்டும். உள்ள கொள்கைகளுக்கு விலக்குகள் வருமாயின் அவற்றை விஞ்ஞானிகள் உவகையோடு ஏற்றுக்கொள்வர். ஏனெனில் முன்னர் இருந்த கொள்கைகள் சோதிக்கப்பட்டு அவை தவருனவையென்று நிரூபிக்கப்படுவதால் மட்டுமன்று, இன்னும் முயன்று பெறவேண்டிய அறிவு எவ்வளவு இருக்கிறது என்று உணர்வதால்தான். இதில்தான் விஞ்ஞான நோக்குடையவனுக்கும் சாதாரண மனிதனுக்கும் நிரம்ப வித்தியாசம் காணப்படுகிறது. தாம் கொண்டுள்ள கருத்துகளுக்கு மாறுபாடாகச் சாட்சியம் கிடைக்குமானல், அதைப் புறக்கணித்துவிட்டுப் போதல் நம்மில் பலருக்கு இயல்பானதே. உண்மை என்பது தாரதம்யத்தைப் பொறுத்தது (Relative); எக்காலத்திற்கும் பொருந்துவதொன்றன்று [Truth (in Science) is Relative and temporary]. இதை மனத்திலிருத்திக் கொண்டு விஞ்ஞானவுலகில் நுழைவோமானல் புதுவுண்மைகள் எதிர்ப்படும்போது அவற்றை ஏற்றுக்கொள்ள மனம் இடந்தரும்.

கோயதே (Goethe) என்ற அறிஞர் தம் நண்பர் ஒருவரிடம் "இயற்கை கீழ்த்தர விஷயங்களை அறியாது; எப்போதும் தீவிரமானது, கடினமானது, உன்னதமானது; இயற்கை எப்பொழுதும் சரியான வழியிலேயே செல்லுகிறது. தவறுகள் இழைப்பது நாமே" என்று சொன்னார். மேற்சொன்ன உண்மையை விஞ்ஞான ஆராய்ச்சியாளரைப் போல வேறெவராலும் உணரமுடியாது. விஞ்ஞானி இயற்கையின் திருமுகத்தைக் காண்கிருன். பேருண்மையென்னும் சக்தியின் முன்னிலையில் தான் கண்டதற்குச் சாட்சியம் சொல்லுகிருன். தான் கண்டதை உள்ளபடி கூறும் பொறுப்பு அவனுடையது. அவனுடைய நோக்கு இயற்கையையும் மானிட அறிவுக்கு இசைந்து வரச் செய்கிறது. அவன் காண்பதையெல்லாம் அவன் அறிந்துகொள்கிருனென்று சொல்ல முடியாது; ஆனல் உண்மையின்மேல் ஆர்வமில்லாவிட்டால் அவனுடைய காட்சி களங்கமுறும். அவன் விஞ்ஞானவுலகில் யாதொரு பயனும் பெறமுடியாது.

ஞானக்கேணியொன்று வானவில்லின் இறுதியில் இருப்பதாகவும் அங்கிருந்து உலகம் முழுவதும் அறிவைப் பெறுகிறதென்றும் ஒரு மேல்நாட்டுப் புராணக் கதையுண்டு. முழுஞானமும் முழுவுண்மையும் வானவில்லைப்போல எய்தற்கரியன எனினும், அவற்றைப்பெற இடைவிடாது முயற்சி செய்வதால் சிறந்த பரிசுகள் கிடைக்குமென்பது உறுதி. இரண்டு பேருக்கு வானவில் ஒரேமாதிரி காணப்படுவதில்லை. அதேபோல ஒவ்வொருவருக்கும் தாற்காலிகக் குறிக்

கோள் ஒவ்வொன்ருக இருக்கலாம். ஆனல் அதை நோக்கி முனேந்து செல்வது நம்மையே பொறுத்திருக்கிறது. அறிவு நம்மைத்தேடி வராது. ஆனல் அனுபவமூலம் நாம் அதைப் பெறுகிறேம். உண்மை நம்முன் கைகட்டி நிற்காது. ஆயினும் அதை முழு மனத்துடன் தேடிச் சென்ருல் நிச்சயம் கிட்டும். ஒருவன் வாழ்நாள் முழுவதும் உண்மையைத் தேடிச் சென்று பாடுபடுவான். இறுதியில் அதன் உயரிய தன்மையில் சிறிதே இவன் காணமுடிந்தாலும், அவன் அளவற்ற மகிழ்ச்சியடைகிருன். அதையடைந்து அனுபவிப்பதாலுண்டாவதைக் காட்டிலும் பன்மடங்கு திருப்தியை அதை எதிர்பார்த்து உழைப்பதாலேயே நாம் பெறுகிறேம்.

ஒரு மனிதன் 'நமக்குக் கிடைத்ததைத் தந்து விட்டுப் போவது' என்ற கொள்கையைப் பின்பற்றிைலும் மனித வர்க்கம் மிக முன்னேற்றமடைந்து விடாது. ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பிறகும் நாம் இப்பொழுதுள்ள நிலேயிலேயே நின்று விடுவோம். அனுபவ மூலம் அறிய மனிதனுக்குள்ள ஆர்வம்—தன் அனுபவத்தால் மட்டுமன்றி, பிறர் அனுபவத்தாலும் தன் அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்னும் ஆர்வம்—தான் மனித சமூகம் முன்னேறி வந்து இன்றுள்ள நிலேயை அடைந்திருப்பதற்குக் காரணம். மனித சமூகத்தின் அறிவுக் களஞ்சியத்தைப் பெருக்கி அதை உயர்வடையச் செய்யும் மகத்தான பொறுப்பு நம்முடையதும் நமக்குப்பின் இனி வரப்போகிறவர்களுடையதும் ஆகும்.

பௌதிகப் பிரபஞ்சத்தைப் (Physical Universe) பற்றிய முழு அறிவைப் பெறுவதென்பது இயலாத காரியமானாலும், அதைப் பெறுவதற்கு விடாது முயல்வது நம் கடமை. தன்னால் அறிந்துகொள்ள முடியுமட்டும் இயற்கையைத் துருவி ஆராய்ந்து தான் கண்டறிந்த உண்மைகளுக்கு ஒரு தர்மகர்த்தா (Trustee) வாகவே விஞ்ஞானி தன்னைக் கருதுகிறான். அவற்றைத் தன் சுய பாத்தியதைச் சொத்தாகக் கருதுவானானால், அவன் உண்மையில் விஞ்ஞான உலகிலிருக்கத் தகுதியற்றவன் ஆவான். ஒருவன் தனக்கு முழு உண்மை தெரிந்துவிட்டதாகக் கொண்டு ஆராய்ச்சியை முடிவுறச் செய்துவிடுவானானால், தன்னோடு மாறுபட்ட கருத்துக்களை உடையோரிடம் அவன் பொறுமை காட்டமாட்டான்; அவர்களை எதிரிகளாகக் கருத ஆரம்பிப்பான். இத்தகைய நிலை விஞ்ஞான வாழ்விற்கு ஒவ்வாதது. பரந்த மனநோக்கு, தீவிர ஆராய்ச்சி, சலியா உழைப்பு இவற்றைத் துணைக்கொண்டு வாழும் விஞ்ஞானிக்கு எதிர்ப்பும் மாறுபட்ட கருத்தும் மகிழ்ச்சியையே தரும்.

அரசியற் பிரச்சினைகளைத் தீர்க்கும்பொழுது கட்சி மனப்பான்மையாலும், விருப்பு வெறுப்புகளாலுந்தான் மக்கள் கொள்ளும் கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. அக்கருத்துக்கள் உண்மையைக் கண்டுபிடிக்க உதவி புரிவதில்லை; ஒரு குறிப்பிட்ட கொள்கையினருக்கு உதவி செய்யவோ அல்லது எதிரிகளைத் தோல்வியடையச் செய்யவோதான் அவை பயன்படுகின்றன. உண்மையினும் தன்

கட்சி நலத்தைப் பெரிதாகக் கருதலாம் ஓர் அரசியல் வாதி. வேண்டியபோது நாட்டின் நலத்திற்காக உண் மையை ஒளித்துவிடலாம் ஒரு ராஜதந்திரி. தன் கட்சிக்காரனுக்கு வெற்றி கிடைக்குமானால் உண்மை யைப் பொய்த்துவிடலாம் ஒரு வழக்கறிஞன். ஆனால் என்ன நேரிட்டாலும் தளராமல் உண்மையைத் தேடிச்சென்றடைந்து, அதை உள்ளவாறு எடுத் துரைப்பதே விஞ்ஞானியின் தனி முறை.

விஞ்ஞான வேலைகளில் ஈடுபடுவோர் எப்பரிசை யும் பொருளுதவியையும் எதிர்பாராமல் இருக்க வேண்டும். பேருண்மைகளைக் கண்டு பிடித்து உலகையே திகைக்கச் செய்த பல பெரியார்கள், தங்களுடைய ஆராய்ச்சிக்களுக்கான பொருள்கூட இல்லாமல் தவித்திருந்ததை அவர்களுடைய வாழ்க் கைக் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. பெரிய தொரு ஆராய்ச்சி முடிவுற்ற பின்னரோ, பொரு ளுதவி தேவையில்லாத ஒருவருக்கோதான் சாதார ணமாகப் பொருளும் ஊக்கமும் கிடைக்கும். இது உலக இயல்பு. போதுமான உணவுக்கும் உடைக்குங் கூட இல்லாத நிலையில் ஆராய்ச்சிகள் செய்யத் தகுந்தவர்களும் செய்ய முயல்வோரும் எத்தனையோ பேர்! அவர்களுக்கு உதவி செய்யத் தனி நபரோ கழகங்களோ அரசாங்கமோ முன்வருவதில்லை. நியூ டன் ஒரு சமயம் மிகவும் வறுமை நிலையில் இருந் தார். ராயல் கழக அங்கத்தினராதலால் அவர்தம் சந்தாத் தொகையைச் செலுத்த வேண்டியிருந்தது. அவர் அவ்விதஞ் செய்ய இயலாததற்குத் தம்மை மன் னித்து விடும்படி கழகத்திற்கு ஒரு மனு அனுப்பின

ராம். அறிவும் வறுமையும் தொடர்புடையனவோ என்று ஊகிக்க வேண்டியிருக்கிறதல்லவா !

விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளுக்காகப் பொருளுதவி வேண்டினால், அது அவர்களுடைய புகழுக்காகவோ சொந்த இலாபத்துக்காகவோ அன்று. அவர்களுக்காகச் சமூகம் செலவழிக்கும் பொருள் பன்மடங்கில் ஆக்க சக்தியாகத் திரும்பி வருகிறது. இதையறிந்து சமூகம் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு நிரம்பப் பொருளுதவி அளிக்கவேண்டும். ஆராய்ச்சியாளர்கள் உண்மையான விஞ்ஞான நோக்குடன் உழைக்க வேண்டும் ; தாம் கண்டு பிடிக்கும் உண்மைகளைச் சமூகத்தின் நன்மைக்காகவே உபயோகிக்கவேண்டும். விஞ்ஞானம் ஓர் ஆக்க சக்தியாக இருந்து செயற்படுமானால், அது மேலோங்கும். அதனால் உலகம் உய்யும்.

விஞ்ஞானக் கலை இன்று மேல்நாட்டினர் கையில் அகப்பட்டுக்கொண்டு ஓர் அழிக்குங் கருவியாக இருந்து வருகிறது. இது உண்மையே. ஆனால் அதனால் ஏற்படும் அழிவுக்குக் காரணம் விஞ்ஞானமன்று ; அக்கலையைப் பயன்படுத்தும் மனிதர்களுடைய தீக்குணங்களேயாம். விஞ்ஞானக் கலையை நாம் நன்றாகக் கற்க வேண்டும் ; அதை நம் நாட்டிற்கும் தற்கால நிலைமைகளுக்கும் தகுந்தவாறு நம் அன்றாட வாழ்வுக்கு உபயோகித்துக்கொள்ள வேண்டும். இன்றுள்ள உலக நிலைமையைத் திருத்த விஞ்ஞானத்தைக் கைக்கொண்டு போரையும் பகையையும் மூட்டும் அரசியல் வாதிகள் மனம் வைத்தால்

முடியும். மனிதர்களிடமுள்ள விலங்குத் தன்மை ஒழிய வேண்டும். சமுதாயவுணர்வு வளர வேண்டும். 'எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம்' என்ற சகோதரத் தன்மை நம் செயல் ஒவ்வொன்றிலும் பிரதிபலிக்க வேண்டும்.

> *" திறமை கொண்ட தீமையற்ற*
> தொழில் புரிந்து யாவரும்
> தேர்ந்த கல்விஞான மெய்தி
> வாழ்வ மிந்த நாட்டிலே "

## 15. அன்பு நெறி

நாம் விடுதலை பெற்றதன் பயனாகப் புத்துணர்ச்சி யுடன் வாழ்ந்து வருகிறோம். சுதந்திர இந்தியாவின் அரசியல் நம் கைக்கு வந்துவிட்டது. நாம் சுதந்திர இந்தியரெனத் தலைநிமிர்ந்து பல நாடுகளுக்கு முன் சென்று நிற்கிறோம். ஆயினும் சிற்சில சமயங்களில் நாம் வெட்கத்தின் மிகுதியால் தலைகுனியவும் நேரிடு வது ஏன்? சுதந்திரம் வேண்டி நின்றது எதற்காக? நாட்டின் விடுதலை கைகூடியபிறகு நம்நாட்டுப் பண் பாடு, சமயாசாரம், அரசியல், பொருளாதாரம், சமு தாயம் ஆகிய அனைத்தையும் நம் நாட்டுப் பூகோள அமைப்பிற்கும், பண்டுதொட்டு வரும் முறைகளுக் கும் நமது எதிர்கால நன்மைக்கும் ஏற்றவாறு அமைத்துக் கொள்ளவே. அங்ஙனம் அமைத்துக் கொண்டு, பின்னர் சண்டை சச்சரவற்ற, யாவரும் சமமென்றுணர்ந்த ஒரு சமூகத்தில் இருந்துகொண்டு பிற நாடுகள் உய்ய வழிகாட்டும் ஆர்வத்துடனே தான் விடுதலைப்போர் நடத்தினோம். ஆனால் சுதந்திரம் பெற்றபின்னர் நாட்டின் நிலை எப்படி யிருக்கிறது?

பல சாதி, மத, கட்சி பேதங்களால் நாடு ஒற்றுமையிழந்து துன்பப்படுகிறது. உலகில் அசுர மாயமும், சுயநலம் பதவிமோகம் முதலிய வெறிகளும் அழிநடம் புரிகின்றன. வறுமை, மடமைப் பிணிகள் மாந்தரை உண்ணுகின்றன. அன்பு இல்லாமையாலே தான் எங்கும் சாதி, மதவேறுபாடுகள், அரசியற்கட்சி கள், வம்பு வழக்குகள், உயிர்க்கொலை, போர் வெறிகள் உண்டாகின்றன.

இரு மனிதர்கள் ஒருவரையொருவர் பார்க்கும் போது மூன்று வகையான உணர்ச்சிகள் தோன்றக் கூடும். அவையாவன: (1) அன்பு அல்லது விருப்பு, (2) வெறுப்பு, (3) அசிரத்தை. இவற்றில் முதலிரண்டும் சிரத்தையின் பாற்பட்டன. பிறரிடத்தில் அசிரத்தை கொண்டிருப்பதைக் காட்டிலும், அவரிடத்தில் சிறிது சிரத்தை கொள்ளுதல் பன்மடங்கு நல்லது. அவருடன் முற்றும் உடன்பட இயலாது போயினும் தவறில்லை. "கடவுளிடத்து அன்பு செய்ய முடியாதானால் அவரை வெறுக்கவாவது ஆரம்பஞ்செய். அது உன்னைக் கடவுட்பக்தியில் கொண்டுபோய்ச் சேர்க்கும்" என்று மேனாட்டு அறிஞர் கூறியது மக்களிடை உறவுக்கும் பொருந்தும். ஒரு மனிதனை வெறுப்பதால் அவன் உள்ளமையும் அவனைப்பற்றி நினைக்கும் வாய்ப்பும் இருந்துவரும். இவ்வகை வெறுப்பினின்றும் அவனிடத்து அன்பு கொள்ளும் நிலையை விரைவில் அடைய இயலும்.

அன்பை நெருப்பிற்கு ஒப்பிடலாம். நெருப்பு ஆகாரத்தைச் சமைக்க உதவுகிறது. இதனால் உயிர் வாழ இன்றியமையாத நல்லுணவைத் தந்து நம்மைக் காப்பது நெருப்பு என்று தெரிகிறது. அதே நெருப்பு ஒரு வீட்டை எரித்துப் பொசுக்கவும் உபயோகமாகிறது. அப்பொழுது நெருப்பு நமக்கு அழிவைத் தேடும் கருவியாக அமைகிறது. ஆகவே, நெருப்பினால் விளையும் நன்மையோ தீமையோ அதைப் பயன்படுத்தும் மனிதனைப் பொறுத்தது. அதுபோலவே அன்பு என்னும் உணர்ச்சியை எக்காரியத்திற்கும் பயன்படுத்தலாம்.

அன்பின் வழியில் செல்லும் ஒருவன் அறநெறி யில் செல்லுகிருன் என்று உறுதியாகக் கூறமுடியாது. அன்பு அறத்திற்குக் கருவியாதல் போல, மறத்திற்கும் சிற்சில சமயங்களில் காரணமாய் விடுகிறது. பெரியோரை ஏளனஞ் செய்யும் போதும், நல்ல நூல்களைக் குறை கூறும் போதும், பிறரைத் துன்பத்திற்குள்ளாக்கும் போதும், அங்ஙனம் செய்வோருடைய மனத்தில் நிறைந்திருப்பது அன்பே. ஆனல் மூட நம்பிக்கையாலும், குறுகிய மனப் பான்மையாலும் அன்பு அழுக்குற்றிருக்கும். இங்ஙனம் அன்பு அடாத செயல்களுக்கும் மனிதனைத் தூண்டிவிடுதல் கூடும். தகுதியற்ற ஒருவனைத் தன் தலைவனெனக் கொண்டு அவன்மேல் கொண்ட அன்பினுலோ, தற்பெருமைக்காகவோ 'அவனுடைய சொற்களைக் கடைப்பிடித் தொழுகுவதே சரி' என்று எண்ணும் அறிவிலார் எத்தனைப்பேர்! அன்பு அறத்திற்குக் கருவியாதல் வேண்டின், அன்பைக் கடைப்பிடித்து ஒழுகுவோனுக்கு முதலில் பரந்த மனப்பான்மை வேண்டும். அவனுக்குத் தன் அன்பின் பெருக்கைச் சரியான நெறியில் தகுதி யுடைய பொருள்களிடத்துச் செலுத்தும் திறன் வேண்டும். இன்றேல் அன்பு அவனைக் கெடுப்பது மட்டுமன்றி, அவனைச் சூழ்ந்துள்ள அனைவரையும் அழிக்கும் என்பது உறுதி.

இன்று சில இடங்களில் சகோதரத் தன்மையும், தன்னலமற்ற சேவையும் தழைக்கின்றனவெனின், அதற்குக் காரணம் அங்கு ஈடுபட்டுள்ளோருடைய அன்புப்பெருக்கே. சிற்சில இடங்களில் ஒற்றுமை

குறைந்து சண்டைசச்சரவுகள் இருந்து வருகின்றன என்ருல், அதற்குக் காரணம் ஒரு சிலரிடையே காணும் தீக்குணங்கள், ஒரு சிலர் காட்டும் தீய நெறிகள், மக்களுக்கு அவர்கள் மேலும், அவர்கள் காட்டும் தீய நெறியின் மேலுமுள்ள அன்பு.

" அன்பென்று கொட்டுமுரசே—அதில்
ஆக்கமுண்டா மென்று—கொட்டு
அன்பென்று கொட்டுமுரசே—மக்கள்
அத்தனைபேரும் நிகராம் "

என்று பாரதியார் கூறிய சொற்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆக்கந்தரும் அன்பு, நன்மை பயக்கும் அன்புப் பணி, மனிதர் எல்லோரும் சமமென்று உணர்வதாலெழும் அன்புப்பெருக்கு—இவற்றையே நாம் குறிக்கோளாகக்கொண்டு நிற்றல் வேண்டும். அழிவு தரும் அன்பு எனில், அதனை எதிர்த்துப் போராடி அடக்குவது நம் கடமை. ஆக்கந் தரும் அன்பே அறத்திற்குக் கருவியாயது.

பரந்த நோக்குடன் எல்லோரிடத்தும் அன்பு கொள்ள வேண்டுமாஞல் ' நான் 'மை சிறிதும் இருக்கக்கூடாது. இத் தீயகுணம் மூன்று வகைப்படும். அவையாவன: (1) புறநலன் விரும்புதல், (2) அக நலன் விரும்புதல், (3) நானென்னும் எண்ணங் கொண்டிருத்தல் என்பன. தனக்குச் செல்வமோ, பதவியோ, புகழோ வேண்டுமென்று வருந்தி யுழைப்பவர்கள் பலர். இத்தகைய புறநலனை விரும்பாதிருத்தல் வெகு கடினமன்று. தனக்கிருக்குஞ் செல்வத்தையெல்லாம் வாரியிறைத்து விடலாம். தனக்கு வரும் பதவியில் பிறரை அமர்த்திவிடலாம். தன்னைப்

பற்றிப் புகழ வேண்டாமென்று பறைசாற்றிவிடலாம். இங்ஙனம் செய்வதால் ' புறநலன் விருப்பு ' அற்றுப் போகும். ஆனால் " நாம் பிறருக்கு உதவி செய்தோம். எத்தகைய பதவி நமக்கெனக் காத்திருந்தது! அதைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு ஒதுங்கி நின்றோம். நம்மைப் புகழ எத்தனை பேர் இருக்கிறார்கள்! அப் புகழையும் உதறித் தள்ளினோம்!" என்று மனத்தில் எண்ணியெண்ணி அதன்மூலம் மகிழ்ச்சி பெறுதல் உண்டு. இத்தகைய அகநலனை வெறுத்துத் தள்ளுதல் கடினமானதோர் காரியமாகும். அனைவராலும் இங்ஙனம் செய்ய இயலாது. ஆனால் பிறரறியா வண்ணம் தனக்குள் பெருமைகொள்ளும் தன்மை மிகக் கொடியது. இதையும் முயன்று சாதித்து விடலாம். ' நான் ஒன்றும் செய்யவில்லை. நான் பெருமைக்குரியன் அல்லன் ' என்று வெளியே சொல்லலாம் ; மனத்திற்குள்ளும் எண்ணலாம். இதனால் ' எனது ' என்ற உணர்ச்சி அற்றுப் போகுமேயன்றி ' நான் ' என்ற உணர்ச்சி ஒழிந்ததாகாது. ' நான் ' அற்றவனே எல்லா உயிர்களிடத்தும் சுய நலங் கருதாமல் ஆக்கந்தரும் அன்பினைச் செலுத்த முடியும்.

இங்ஙனம் எத்தகைய அன்பு நமக்குத் தேவை என்றுணர்ந்த பின்னர், அன்பின் முதிர்ச்சி எத்தகையது எனச் சிறிது நோக்குவோம். அன்பு வளம் பட்டால் அது அருளையீனும். நம்முடன் ஏதேனுமொரு வகையில் சமூகத் தொடர்புடையாரிடத்துக் காட்டும் நல்லுணர்ச்சி ' அன்பு ' எனப்படும். நம்முடன் சமூகத் தொடர்பற்றாரிடத்து நாம் காட்டும்

அன்பே ‘ அருள் ’ எனப்படும். நமது உறவினரிடத்தும், நண்பர்களிடத்தும் காட்டும் நேசம் அன்பு; முன்பின் தெரியாத ஒருவரிடத்து நாம் செலுத்தும் அன்பு ‘ அருள் ’ என்பது நோக்கற்பாலது.

சில சமயங்களில் அன்பிற்குப் பதிலாக நமக்கு வெறுப்பு திரும்பி வரக்கூடும்; சில சமயங்களில் அன்பிற்குப் பதிலாக அன்பே திரும்பி வரலாம்; இன்னுஞ் சில சமயங்களில் வெறுப்பிற்குப் பதிலாக அன்பையே பெறுதலுண்டு. அன்பைப் பெற்று வெறுப்பை அதற்கீடாகத் தருவதை ‘ விலங்குத் தன்மை ’ என்றும், அன்பிற்குப் பதில் அன்பை வழங்குவதை ‘மனித் தன்மை ’ யென்றும், வெறுப்பிற்குப் பதில் அன்பைக் காட்டும் தன்மையை ‘ தெய்வத் தன்மை ’ யென்றும் கூறல் தகும். முன்னிரண்டு வகைகளைக் கைக்கொண்டவர் பலர் இதுவரை வாழ்ந்து போயிருக்கின்றனர். ஆனல் வெறுப்பைப் பெற்று அன்பைத் தந்த பெருங் கருணையாளர்கள் சிலர் சிற்சில காலங்களில் தோன்றி அன்பு நெறியை மக்களிடையே பரப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் கடவுட் பக்தி நிரம்பப் பெற்றவர்கள்; அதே சமயத்தில் சமூகவுணர்ச்சியும் கொண்டவர்கள். இவ்வழி வந்தவர்களில் புத்தர், இயேசுநாதர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், மகாத்மா காந்தி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். அவர்கள் அறவாழ்க்கை நடத்திய அந்தணப் பெரியோர்கள். அவர்கள் காட்டிய அறவழியிற் சென்று நாமும் உய்வோமாக !